# செம்மணி

நிலம் 2 துகள் 91 வள்ளுவர் ஆண்டு 2052, 16 - 22 சித்திரை 2022 வாரமலர் பக்கங்கள் 20 விலை ரூபா 50/-

## கைவிட்ட மக்கள்!



தெற்கில் ராஜபக்சக்களை வீட்டுக்கு அனுப்புவதற்கான போராட்டங்கள் தீவிரம் பெற்றுள்ள நிலையில் யாழ். நகரத்தின் மையத்தில் உள்ள வீரசிங்கம் மண்டபத்தில் வெள்ளிக்கிழமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரால் சமகால அரசியல் தொடர்பான கலந்துரையாடல் நடத்தப்பட்டது. யாழ்ப்பாணத்தில் உள்ள மக்களுக்கு அரசியல் நிலையைத் தெளிவுபடுத்தும் நோக்கத்தோடு நடத்தப்பட்ட இந்தக் கலந்துரையாடலில் எடுக்கப்பட்டம் படம் இது.

## பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் கட்டுப்பாட்டு முடிவால் விசனம்

மோட்டார் சைக்கிள்கள் கார்களுக்கு பெற்றோல் மற்றும் டீசல் விநியோகத்தை மட்டுப்படுத்துவது என்று இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எடுத்துள்ள முடிவு வாகனங்கள் வரிசையில் நிற்கும் நிலையை இன்னும் அதிகரிக்கும் என்றும் மக்களின் நேரத்தை வீணடிக்கும் செயல் என்றும் மக்கள் கண்டனம் தெரிவிக்கின்றனர்.

வெள்ளிக்கிழமை முதல் மோட் பக்கம் 02




## திங்கட்கிழமை முதல் மின்வெட்டு குறையும்

திங்கட்கிழமை முதல் மின்வெட்டுக் குறையும் என்று அதிகாரிகள் கூறுகின்றனர். மேலதிக டீசல், நிலக்கரி ஆகிய கிடைத்திருப்பதுடன் இந்த வாரம் பெய்த மழை காரணமாக முக்கியமான நீர்த் தேங்கங்களில் நீர் சேர்ந்திருப்பதன் காரணமாகவும் மின்வெட்டுக் குறையும் என்று அவர்கள் கூறுகின்றனர்.

சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் காலை 8 மணி முதல் 5 மணி வரையான நேரதத்தில் இரண்டரை மணி நேர மின்வெட்டு நடைமுறையில் இருக்கும் என்றும் திங்கட்கிழமை முதல் இந்த அளவு மேலும் சுருங்கும் என்றும் அதிகாரிகள் கூறுகின்றனர்.

மின் உற்பத்திக்குத் தேவையான முக்கிய மூன்று மார்க்கங்களிலும் (எரிபொருள், நிலக்கரி, நீர்) மேலதிக வசதிகள் கிடைத்திருப்பதன் காரணமாக மின்வெட்டைக் குறைக்க முடியும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுத் தலைவர் யானக்க ரட்னாயக்க தெரிவித்தார். பக்கம் 19

## தமிழ் தேசிய மக்கள் முன்னணி இனிமேல் யாருடைய கட்சி?

### இன்று அலுவலகம் திறக்கிறது மணிவண்ணன் அணி

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உத்தியோகபூர்வ அலுவலகம் ஒன்று சனிக்கிழமை யாழ். முதல்வர் மணிவண்ணன் அணியினால் திறக்கப்படுகின்றது. அலுவலகம் திறக்கப்படும் வரை அது தொடர்பான தகவல்கள் ஊடகங்களில் வெளிவராமல் இரகசியம் பேணப்பட்டதாகத் தெரியவருகின்றது.

இந்த அலுவலகம் திறக்கப்படுவதை அடுத்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இனிமேல் யாருடைய கட்சி என்பதற்கான போட்டி தீவிரமடைந்துள்ளது. தற்போது இந்த முன்னணி தமக்குரியது என்று அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் அணி உரிமை கோரி வருகின்றது.

யாழ். மாநகர சபை உறுப்பினராக இருந்தவரான மணிவண்ணன் முதல்வர் ஆவதற்கு முன்னர் இதே முன்னணியின் உறுப்பினராக இருந்தார். எனினும் 2020 நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் அவரைக் கட்சியைவிட்டு நீக்கியதாக கஜேந்திரர்கள் அறிவித்தனர். அதை எதிர்த்து மணிவண்ணன் வழக்குத் தொடர்ந்தார். அதில் அவர்களைக் கட்சியைவிட்டு நீக்கியமை தவறு என்று பக்கம் 02



## காலிமுகத் திடல் போராட்டம் வரும் நாள்களில் தீவிரம் பெறும்

ராஜபக்சக்களை வீட்டுக்குச் செல்லுமாறு வலியுறுத்தி காலி முகத் திடலை ஆக்கிரமித்துத் தொடங்கப்பட்டிருக்கும் போராட்டம் 7ஆவது நாளைக் கடந்து 8ஆவது நாளுக்குள் நுழைந்திருக்கும் நிலையில் அடுத்துவரும் நாள்களில் அது இன்னும் தீவிரம் பெறும் என்று போராட்டக்காரர்கள் தெரிவிக்கின்றனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள டொலர் பற்றாக்குறை காரணமான நெருக்கடிகளுக்கு ராஜபக்சக்களே பொறுப்பு என்று குற்றஞ்சாட்டி அவர்களை வீட்டுக்கு விரட்டும் மக்கள் போராட் பக்கம் 02

## பதவி விலகும் எண்ணம் ஏதுமில்லை

பொருளாதார நெருக்கடி காரணமாக நாடே கொந்தளித்துக்கொண்டிருக்கின்றபோதும், மக்கள் வீதிக்கு இறங்கி போராட்டங்களில் ஈடுபட்டுக் கொண்டிருக் கின்றபோதும் அவற்றுக்கு மதிப்பளித்து பதவியிலிருந்து விலகிச் செல்வதற்கு அரச தலைவரோ ஆளும் தரப்பான பெரமுனவோ தயாராக இல்லை என்று கொழும்பு அரசியல் வட்டாரங்கள் உறுதிப்படுத்துகின்றன.

நாட்டின் அமைச்சரவை கூண்டோடு பதவி விலகிய நிலையில் அமைச்சரவை ஒன்று இல்லாத நெருக்கடியான நிலையே நீடிக்கிறது. தொடர்ந்தும் இந்த நிலை நீடிப்பது பொருளாதார ரீதியில் மேலும் பாதிப்புக்களை அதிகரிக்கும் என்பதால் ஓரிரு தினங்களுக்குள் புதிய அமைச்சரவை பக்கம் 02

## லிட்ரோ தலைவர் அரசு மீது சாடல்

இலங்கை அரசினால் நிர்வகிக்கப்படும் எரிவாயு நிறுவனமான லிட்ரோ காஸின் தலைவர் தனது பதவியிலிருந்து விலகியிருக்கிறார். தனது பதவி விலகல் கடிதத்தில் அவர் நாட்டின் அரசியல்வாதிகளை தற்போதைய நிலமைக்காகக் கடுமையாக விமர்சித்திருக்கிறார்.

லிட்ரோ நிறுவனம் தவறுகளில் இருந்து மீள்வதற்கான போராட்டத்தில் அமைச்சர்களோ, அதிகாரிகளோ ஒத்துழைப்பு வழங்கவேயில்லை என்றும் அவர் குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

"ஆளும் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்திய அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களில் பலரும் தற்போதைய பக்கம் 02

# செம்மணி

வாரப் பத்திரிகை
551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
மின்னஞ்சல்: shemman.redsoil@gmail.com
தொடர்பு எண்: 021 492 7781
உரிமை மற்றும் வெளியீடு: கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிட்
**ஆசிரியர்: தே.பிரேமானந்த்**


# போராட்டங்கள் நீண்டு செல்வது பயன்தரமாட்டா

அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ச பதவி விலக வேண்டும் என்றும் தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்ச மூப்பிலான ஆட்சி கலைக்கப்படவேண்டும் என்றும் மக்கள் வீதிக்கு இறங்கிப் இரண்டு வாரங்களுக்கு மேலாகிவிட்டபோதும் அதன் தீவிரம் அதிகரிப்பதற்குப் பதில் குறைகின்றதான எண்ணமே கிடைக்கின்றது.

பொருள்களின் சகிக்க முடியாத விலையேற்றம், எரிபொருள் தட்டுப்பாடு, மின்வெட்டு, சமையல்வாயு தட்டுப்பாடு, விலையை அதிகம் கொடுத்தாலும் பொருள்களைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை என்பவற்றால் சீற்றமடைந்த மக்கள் கோபாவேசத்தோடு வீதிக்கு இறங்கினார்கள்.

அவர்களின் கோபத்தில், கொந்தளிப்பில் ஒரு நியாயம் இருந்தது. அந்த நியாயம் கொடுத்த அழுத்தம் காரணமாக தலைமை அமைச்சரைத் தவிர்த்து ஒட்டுமொத்த அமைச்சரவையும் பதவி விலகியது. மக்களின் போராட்டக் களத்துக்குக் கிடைத்த ஆறுதலான விடயமாக அதனைப் பார்க்க முடிந்தது. மக்கள் போராட்டத்தால் நாட்டுக்கு நன்மை கிட்டும் என்கிற எதிர்பார்ப்பும் ஏற்பட்டது.

ஆனால், சில நாள்களிலேயே இந்த மக்கள் போராட்டங்கள் எல்லாம் எதிர்க் கட்சிகளின் சதி முயற்சி என்று குற்றஞ்சாட்டியபடி வேதாளம் மீண்டும் முருங்கை மரம் ஏறிய கதையாகத் தான் பதவி விலகப் போவதில்லை என்று வெளிப்படுத்தினார் அரச தலைவர். 69 லட்சம் மக்கள் தனக்கு வாக்களித்திருக்கிறார்கள் என்பதால் தான் பதவி விலக முடியாது என்பதே அவர் வழங்கிய காரணம். அரச தலைவரின் இந்த முடிவோடு புதுவருடக் கொண்டாட்டத்திற்கான விடுமுறையும் சேர்ந்துகொள்ள போராட்டத்தின் கனதி குறையத் தொடங்கியதாகத் தோன்றுகின்றது.

அத்தோடு போராட்டம் உணர்ச்சிக் கொந்தளிப்பு என்கிற நிலையில் இருந்து நிதானமான, திட்டமிடப்பட்ட, நீண்டு செல்லக்கூடிய போராட்ட வடிவத்திற்கு மடைமாற்றம் செய்யப்பட்டது. கோபாவேசத்தோடு வீதிக்கு இறங்கிய மக்களிடம் காணப்பட்ட அறத்தை நியாயத்தை திட்டமிட்டு முன்னெடுக்கப்படும் காலிமுகத் திடல் போன்ற போராட்டத்தில் காணமுடியவில்லை என்கிற விமர்சனங்கள் சமூக வலைத் தளங்களில் விரவிக்கிடக்கின்றது.

இது மக்கள் எழுச்சி வீணடிக்கப்பட்டதான உணர்வைப் பலருக்கும் ஏற்படுத்துவதைத் தவிர்க்க முடியவில்லை. போராட்டங்களுக்குச் சரியான நேரத்தில் சரியான தலைமைத்துவத்தைக்கொடுத்து அதனை வெற்றியை நோக்கி வழிப்படுத்தியிருக்கவேண்டிய அரசியல் தலைமை ஒன்று இல்லாதமையின் பற்றாக்குறையையே அது உணர்த்தி நின்றது. அத்தோடு அரச தலைவரையும் ஆட்சியையும் கலைத்துவிட்டு பொருளாதாரத்தைச் சீர்செய்ய என்ன செய்யமுடியும் என்கிற திட்டம் எதிர்க்கட்சிகளிடம் இல்லாததும் அவற்றுக்கிடையே ஒற்றுமை இல்லாததும்கூட ஆட்சியாளர்களுக்குச் சாதகமான நிலையை ஏற்படுத்தியது.

இப்போது போராட்டங்களால் பெரும் அச்சுறுத்தல் ஏதுமில்லை என்கிற நிலை ஏற்பட்ட பின்னர் ஆட்சியாளர்கள் மெல்ல மெல்ல தமது பழைய நிலைக்குத் திரும்ப எத்தனிக்கின்றனர். போராட்டங்கள் மடை மாற்றம் செய்யப்பட்டு நீண்ட நாள்களுக்கு இழுக்கப்பட்டதன் விளைவு இது. தமிழ் மக்களின் காணாமற்போனோரின் உறவினர்களது போராட்டங்களிலும் இத்தகைய நிலையைக் காணமுடிந்திருக்கிறது. அவை மிக நீண்ட நாள்களைக் கடந்தபோதும் கனதியை இழந்திருக்கின்றன என்பதை ஏற்றுக்கொண்டாக வேண்டியிருக்கிறது. அடையாள எதிர்ப்பியக்கமாக அந்தப் போராட்டத்தைக் கடந்து செல்ல ஆட்சியாளர்களும் மக்களும் பழகிவிட்டார்கள். அத்தகையதொரு நிலை தற்போதைய தெற்குப் போராட்டங்களுக்கும் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது அவசியம்.

மாறி மாறி ஆட்சிக்கு வந்தவர்களால் இந்த நாடு நாசமாக்கப்பட்டதன் விளைவு இன்று முழுமையாக வெளிப்பட்டு நிற்கின்றது. எனவே இந்தக் கட்டத்தில் முழுமையான மாற்றம் ஒன்றுக்கு மக்களும் அரசியல்வாதிகளும் தயாராக வேண்டும். அத்தகைய நிலையை ஏற்படுத்துவதற்கு நீண்டு செல்லும் போராட்டங்களால் முடியாமல்போகலாம்.

## பெற்றோலிய...

டார் சைக்கிள்கள், கார்களுக்கு கட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே பெற்றோல், டீசல் விநியோகம் இடம்பெறும் என்று பெற்றோலிய கூட்டுத்தாபனம் அறிவித்தது. இது தற்காலிகமான ஒரு நடவடிக்கை என்றாலும் விநியோகத்தின் செயல்திறனை மேம்படுத்தவும் அதிக வாகனங்களுக்கு எரிபொருளை வழங்கவும் இது வழிவகுக் கும் என்றும் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

மோட்டார் சைக்கிள் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாவுக்கும் முச்சக்கரவண்டி ஒன்றுக்கு ஆயிரத்து 500 ரூபாவுக்கும் கார், வான், ஜீப் ஆகியவற்றுக்கு 5 ஆயிரம் ரூபாவுக்கும் மட்டுமே பெற்றோல் வழங்கப்படும் என்று வெள்ளிக்கிழமை ஒரு மணிக்குப் பின்னர் அறிவிக்கப்பட்டது.

நாட்டில் ஏற்பட்டுள்ள டொலர் பற்றாக்குறை காரணமான சிக்கல்களை அடுத்து எரிபொருளை போதியளவிற்கு வாங்குவதற்கு முடியாதமை காரணமாக ஏற்பட்டுள்ள நிலையை அடுத்தே பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இந்த ஏற்பாட்டுக்கு வந்துள் ளது.

விநியோகத் திறனை மேம்படுத்துவதற்காக இந்த நடவடிக்கை என்று கூட்டுத்தாபனம் கூறினாலும் இது பெற்றோலுக்காக வரிசையில் நிற்கும் நிலையை அதிகரிக்கப் போகின்றது என்றும் பெற்றோலை அல்லது டீசலைப் பெறுவதற்காக நேரத்தை வீணடிக்கப் போகின்றது என்றும் மக்கள் குற்றஞ்சாட்டுகிறார்கள்.

இதுவரையில் பெற்றோலைப் பெறுவதற்கு நீண்ட வரிசையில் நிற்கவேண்டிய தேவைப்பாடு ஏற்பட்டதில்லை. சில சமயங்களில் மட்டும் குறுகிய வரிசைகளில் நிற்க வேண்டியிருந்தது. தற்போது கொண்டுவரப்பட்டுள்ள முறையால் அடிக்கடி நீண்ட வரிசைகளில் நிற்கவேண்டிய நிலை ஏற்படும். இதனால் நேர விரயம் ஏற்படுவதுடன் அனைத்துப் பணிகளும் பாதிக்கப்படும் என்கிறார்கள் மக்கள்.

## தமிழ் தேசிய...

தீர்ப்பளிக்கப்பட்டது. இதற்கிடையில் யாழ். மாநகர சபை முதல்வர் பதவியையும் மணிவண்ணன் கைப்பற்றிக்கொண்டார். அதிலிருந்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்குள் மணிவண்ணன் அணி ஒன்று உருவாகியது.

அது முதலே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைத் தன் வசப்படுத்துவதற்கான முனைப்புகளில் மணிவண்ணன் அணியினர் ஈடுபட்டு வந்தனர். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள அரச சார்பற்ற நிறுவனத்தின் செயலாளராக மணிவண்ணனே இருக்கிறார் என்கிற சட்டவலுவைப் பயன்படுத்தி இந்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந் தன.

இந்த நிலையில் அந்தக் கட்சியின் தலைமை அலுவலகம் யாழ். பல்கலைக் கழகம் அமைந்துள்ள இராமநாதன் வீதியில் இருக்கும் மணிவண்ணனின் வீட் டில் சனிக்கிழமை திறக்கப்படுகின்றது. முன்னணியை ஓர் அரசியல் கட்சியாக மணிவண்ணன் அணியினரின் பெயரில் பதிவு செய்வதற்கான அனுமதியை தேர் தல்கள் திணைக்களம் வழங்கியதைத் தொடர்ந்தே இந்தப் புதிய தலைமை அலு வலகத்தை அமைக்கும் பணி தொடங் கப் பட்டது என்று கூறப்படுகின்றது. எனினும் அது தொடர்பில் உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் வெளியாகவில்லை. இன்று அலுவலகத் திறப்பு நிகழ்வில் அதுபற்றிய தகவல்கள் அறிவிக்கப்படக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த அலுவலகம் திறப்படும் நிலையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கஜேந்திரர்களுக்குச் சொந்தமானதா அல்லது மணிவண்ணன் அணியினருக்குச் சொந்தமானதா என்கிற போட்டி தீவிரமடைந்துள்ளது.

## காலி முகத்...

டங்கள் தெற்கில் பெருமெடுப்பில் வெடித்துள்ளன. அரசியல் கட்சிகளின் போராட்டங்கள் ஒருபுறம் நடக்க, இளைஞர்களின் தன்னெழுச்சியான போராட்டங்களும் தீவிரமடைந்து வருகின்றன.

காலிமுகத் திடலில் 7 நாள்களாக நடந்து வரும் எதிர்ப்புப் போராட்டத்தில் இலங்கையின் முன்னாள் கிரிக்கெட் வீரர் தம்மிக்க பிரசாத் 24 மணி நேர அடையாள பட்டினிப் போராட்டத்தில் ஈடுபட்டார். அவருக்கு ஆதரவு தெரிவித்தும் போராட்டக் காரர்களை ஆதரித்தும் புகழ்பெற்ற முன்னாள் கிரிக்கெட் வீரர் சனத் ஜெயசூரிய உள்ளிட்ட விளையாட்டுப் பிரபலங்கள் பலரும் போராட்ட இடத்திற்கு வருகை தந்திருந்தனர்.

தற்போதைய பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கும் உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் நியாயம் வழங்கக் கோரியே தான் இந்த அடையாள பட்டினிப் போராட்டத்தைத் தொடங்கினார் என்று தம்மிக்க பிரசாத் தெரிவித்தார்.

இதே கோரிக்கைகளை வலியுறுத்தி கடந்த வாரம் அவர் கட்டுவபிட்டிய தேவாலயத்தில் இருந்து கொச்சிக்கடை தேவாலயம் வரையில் ஊர்வலம் ஒன்றையும் ஏற்பாடு செய்திருந்தார்.

வெள்ளிக்கிழமை போராட்டக் களத்திற்கு வந்த மக்கள் குடும்பம் குடும்பமாக வந்து கலந்துகொண்டிருந்தார்கள். தமது பிள்ளைகள், சிறுவர்களையும் அவர்கள் கூடவே அழைத்து வந்திருந்தார்கள். இந்த நிலமை வரும் நாள்களில் மேலும் தீவிரமடைந்து பெரும் போராட்டமாக உருமாறும் என்று போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

இந்தப் போராட்டம் மக்களின் உணர்வெழுச்சியான போராட்டமாக அன்றி கொண்டாட்ட மனநிலைகொண்ட இளைஞர்களின் களியாட்டாக மாறியுள்ளது என்கிற விமர்சனங்கள் எழுப்பப்பட்டாலும் தமது நோக்கத்தில் நேர்மையும் நெஞ்சுறுதியும் இருப்பதாக போராட்டக்காரர்கள் தெரிவிக்கின்றனர்.

## பதவி...

ஒன்றை நியமிப்பதற்கான நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டிருக்கின்றனவே தவிர பதவி விலகிச் செல்லும் எண்ணம் ஏதுமில்லை என்றும் அந்த வட்டாரங்கள் உறுதிப்படுத்தின.

அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ச பதவி விலகிச் செல்லவேண்டும் என்றும் இந்த ஆட்சியைக் கலைத்துவிட்டு தேர்தல் ஒன்றுக்குச் செல்லவேண்டும் என்றும் போராடும் மக்கள் வலியுறுத்துகிறார்கள். அரச தலைவர் வீட்டுக்குச் செல்வது மட்டுமல்ல நிறைவேற்று அதிகார அரச தலைவர் முறையே முற்றாக ஒழிக்கப்படவேண்டும் என்று எதிர்க் கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன. இந்தக் கோரிக்கைகளில் எதுவும் உடனடியாக நிறைவேறுவதற்கான வாய்ப்புக்கள் இல்லை என்றும் கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## லிட்ரோ...

நிலையைக் கட்டுப்படுத்துவதற்குப் பதிலாக அதனைத் தீவிரப்படுத்துவதற்கே முயற்சித்தார்கள்" என்று அவர் தெரிவித்திருக்கிறார்.

லிட்ரோ நிறுவனத்திற்குள் காணப்பட்ட ஊழலைத் தடுத்து நிறுத்துவதற்குத் தான் எடுத்த நடவடிக்கைகளின் காரணமாகவா பிரச்சினைகளை அதிகப்படுத்த அமைச்சர்களும் அதிகாரிகளும் முயற்சித்தார்கள் என்கிற சந்தேகம் தனக்கு எழுந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

லிட்ரோ காஸ் சிலிண்டர்கள் பயன்படுத்தப்பட்ட அடுப்புகள் வெடித்த சம்பவங்களின் பின்னணியில் காஸ் இறக்குமதியில் காணப்பட்ட ஊழலே காரணம் என்றம் அவர் தெரிவித்தார்.

# அரசுக்கு எதிரான போராட்டத்துக்குத் தலைமை தாங்குவது யார்...?

ரவீந்திரன்

மகிந்த குடும்பம் அரசியலில் இருக்கவேகூடாது, கோட்டாபய வீட்டுக்குச் செல்லவேண்டும், இடைக்கால அரசு என்ற பேச்சுக்கே இடமில்லை, கோத்தா கோ ஹோம் என்கிற வாசகங்களைக் கொண்ட பதாகைகள் இலங்கையின் எல்லா இடங்களிலும் புகழ் அடைந்துள்ளன. தொடக்கத்தில் இந்த நிலைப்பாட்டைச் சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி முன்னெடுத்தது. பின்னர் மலையகக் கட்சிகள், ஜே.வி.பி, பல்கலைக்கழக மாணவர்கள் - பணியாளர்கள் எனப் பலரும் களத்தில் இறங்கினர். இந்த நிலையில் தற்போது அரசியல் கட்சிகள் - தலைவர்கள் ஒதுக்கப்பட்டு இளைஞர்களும் இளம் பெண்களும் களத்திலுள்ளனர். தமக்கு ஆதரவாகப் பொதுமக்கள் தமது சகல நடவடிக்கைகளையும் கைவிட்டு நாடு முழுவதும் போராட்டத்தில் ஈடுபடுமாறும் விநயமாகக் கேட்டுள்ளனர். ஆனால் மக்கள் போராட்டத்திற்குப் போவதைவிடவும் வரிசைகளில் நிற்பதற்கு நீண்ட நேரத்தைச் செலவிடவேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

சாதாரண மக்கள் மட்டத்தில் படுமோசமான பொருளாதார நிலை காணப்படுவதால் போராட்டத்தில் இணைவதைவிட வரிசையில் நின்று ஏதாவது அத்தியாவசியப் பொருள்களில் ஒன்றை வாங்கிவிடுவதே அவர்களுக்குத் தேவையாக இருக்கிறது. இந்த எதிர்பாராத இறுக்க நிலையைப் பயன்படுத்தி மற்றுமோர் கூட்டத்தினர் பொருள்களைப் பதுக்குவதிலும் அதிக விலைக்கு விற்பனை செய்வதிலும் ஈடுபடுகின்றனர்.

### போராட்டத்தில் என்ன குறைபாடு...?

அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு என்பதுபோல எதிர்ப்பவர்கள் அனைவரும் இணைந்து செயற்படவேண்டும் எனக்கேட்டு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார் தேர்தல் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மகிந்த தேசப்பிரிய. இது உண்மையான கோரிக்கைதான். ஆனால் இந்தப் பொருளாதாரப் பாதிப்பால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ள ஏழைகளை போராட்டக் களத்தில் காணவில்லை. இலங்கையில் தொகையில் அதிகமுள்ள ஏழைகள் போராட்டத்திலிருந்து ஒதுங்கியே உள்ளனர். தமது நாளாந்தச் சீவியத்துக்கான வழிகளைத் தேடுவதற்கே அவர்களுக்கு நேரம் போதாமலுள்ளபோது அவர்களால் எப்படிப் போராட்டத்தில் கலந்துகொள்ள முடியும்? அல்லது நாடாளுமன்ற அரசியலுக்கும் தமக்கும் வெகு தூரம் என ஒதுங்கிவிட்டனர். அவர்களைப் போராட்டக் களத்திற்குக் கொண்டுவரும் எந்த முயற்சியும்கூட எடுக்கப்படவில்லை.

அரசியல் கட்சிகளுக்கிடையே பெரிய கருத்து மோதல்கள் தலைதூக்கியுள்ளன. எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுடன் மைத்திரி அணியோ, ஜே.விபியோ இணைந்து பணியாற்றும் நிலை இல்லை. மலையக மக்களில் ஒரு பகுதியினர் சஜித்துக்கு ஆதரவாக உள்ளனர். முஸ்லிம்களின் ஆதரவு பெரியளவில் இல்லை. தமிழரும் அவ்வாறான நிலைப்பாட்டிலேயே உள்ளனர். இத்தகைய நிலையில் எதிர்த் தரப்பினர் ஒன்றிணைவதற்கான வாய்ப்புக்கள் பெரியளவில் இல்லை என்பதே உண்மை.

**இந்தப் பொருளாதாரப் பாதிப்பால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ள ஏழைகளை போராட்டக் களத்தில் காணவில்லை. இலங்கையில் தொகையில் அதிகமுள்ள ஏழை கள் போராட்டத்திலிருந்து ஒதுங்கியே உள்ளனர்.**




### தமிழில் பதாகைகள் இல்லை

பல முனைகளில் போராட்டங்களில் தமிழ் - முஸ்லிம் மக்களில் ஒரு சிலர் கலந்துகொண்டிருந்த போதிலும் தமிழில் எழுதப்பட்ட பதாகைகள் பெருமளவுக்கு இல்லை என்றே கூறலாம். இது இனிவரப்போகும் அல்லது எதிர்பார்க்கும் ஆட்சி மாற்றம் சிங்களவருக்கு மட்டுமே என்ற நிலைப்பாட்டைத் தோற்றுவித்திருக்கிறது. தமிழில் பதாகைகள் இல்லாத போதிலும் முஸ்லிம்களில் ஒரு பிரிவினர் தாமும் போராட்த்தில் கலந்திருப்பதை அடையாளப்படுத்தும் வகையில் காலி முகத்திடலில் போராட்டக்காரர்களுக்கிடையில் நோன்பு திறக்கும் சடங்கை மேற்கொண்டு வருகின்றனர். இந்தளவுக்குக்கூட வடக்குக் கிழக்குத் தமிழர் களத்தில் இறங்கவில்லை.

தமிழ்க் கட்சிகளைப் பொறுத்தவரை சஜித் அணியினர் கொண்டுவர எதிர்பார்க்கும் கோட்டாபயவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு ஆதரவளிப்பது மட்டும் என்ற அளவில் சுருங்கியிருக்கிறது நிலைப்பாடு. இது கோட்டாபயவின் ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வரவேண்டும் என்ற எண்ணம் மட்டுமே. அவ்வாறு ஆதரவளிப்பதற்கு முன் புதிதாக எழுச்சி பெறும் சக்திகளுக்கு என்ன நிபந்தனைகளுடன் ஆதரவளிப்பது என்ற அளவுக்குத் தமிழருக்கான அரசியல் தீர்வை எதிர்பார்க்கும் தமிழ்க் கட்சிகள் முன்னேறியதாகத் தெரியவில்லை. இதற்குத் தமிழ்த் தலைவர்களிடம் காணப்படுகின்ற ஒவ்வாமையே காரணமாகும்.



### தகவல் தொழில்நுட்பக்காரரின் போராட்டம்

ஐ.ரி. எனப்படும் தகவல் தொழில்நுட்பம் இலங்கையில் நன்கு பிரபலமடைந்துள்ள நிலையில் அதிகம் சம்பாதிப்பதற்காகப் பலரும் அந்தத் துறையைத் தெரிவு செய்கின்றனர். இதில் சிங்கள நகர்ப்புற இளைஞர், இளம் பெண்கள் அதிகம் ஈடுபட்டுள்ளனர். இவர்களில் பலர் இலங்கையில் இருந்தவாறே பன்னாட்டு நிறுவனங்களில் பணியாற்றி வருகின்றனர். (நள்ளிரவுக்குப் பின்பான நேரத்தில் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் தமது நிறுவனங்கள் இயங்கிக் கொண்டிருக்கும் நேரத்தில் இங்கு பணியாற்றுகின்றனர்) இவர்கள் குறைந்தபட்சம் தமது பூர்வீக விவசாய நிலங்களில் வாழ்வதையோ, பூர்வீக மீன்பிடிக் கிராமங்களில் வாழ்வதையோ விடுத்துக் கொழும்பை நோக்கி நகர்ந்து மாடிக் குடியிருப்பு, கார், சுப்பர்மார்க்கெட், கிரடிற் கார்ட், குளிரூட்டப்பட்ட வீடுகள் - அறைகள் எனத் தமது வாழ்க்கை முறையை மாற்றியிருக்கின்றனர். இவர்களுக்கு இலங்கையின் சாதராரண கிராமப்புற மக்களின் வாழ்க்கை நிலை, துன்பங்கள் புரிவதில்லை. இவ்வாறானவர்களே காலி முகத்திடலில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இத்தகவல் தொழில்நுட்ப வேலைகளுக்கு அத்தியாவசியமான மின்சாரம் இல்லாவிட்டால் குளிரூட்டிகள் இன்றி அறைகளுக்குள் இவர்களால் இருக்க முடியாது. வேலைக்குத் தேவையான இணையம் கிடைப்பதில்லை. இவற்றைப் பெற்றுக்கொள்வதற்காகக் கோட்டாபய அரசை வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என்று போராடுகின்றனர். அவர்களுக்குத்

நட்சத்திரா

14



# ஏன்...? அப்படி...?

## பூர்வீக இனங்களை ஏன் அழிக்கின்றனர்?

ஒரு பிரதேசத்தின் பூர்வீக இனங்களை அழிப்பதில் அந்த நிலங்களில் புதிதாகக் குடியேறியவர்கள் அதிக கவனம் செலுத்துகிறார்கள். அமெரிக்காவின் பூர்வீக மக்களான செவ்விந்தியர்களைக் கொலம்பஸ் அமெரிக்காவைச் சென்றடைந்த பின்னர் எறும்புகளைக் கொல்வதுபோல கொன்று குவித்தார்கள். ஆஸ்திரேலியச் சுதேசிகளான அபோர்ஜீன்களை அங்கு குடியேறியோர் அழித்தனர். அபோர் ஜீன்களை அழிப்பதற்கு அவர்கள் கையாண்ட ஒரு வழிமுறை கிருமித் தொற்றுகளை ஏற்படுத்தக்கூடிய கோட் சூட்களை அந்தப் பூர்வீக மக்களிடம் கொடுத்து வெறும் தேகத்தில் ஒருவருக்கொருவர் மாறி மாறி அணிய வைத்து அதன் மூலம் ஒரு வகைக் கொள்ளை நோயைப் பரப்பிமையாகும். இதனால் அந்தப் பூர்வீக மக்கள் வகைதொகையின்றி இறந்தார்கள்.

பின்னர் அந்தப் பழங்குடிகளின் குழந்தைகளை மிருகக்குட்டிகளைப் பிடிப்பதுபோல கலைத்துப் பிடித்து நகரத்துக்குக் கொண்டுசென்று தமது உணவு, உடை, மொழி என்பவற்றைப் புகுத்தி அவர்களைப் பழங்குடி நிலையிலிருந்து மாற்றினார்கள். பழங்குடியினரைக் காடுகளுக்குள் வாழவிடாமல் நகரங்களுக்குள் வரவைத்துப் பாண் போன்ற அவர்களுக்குப் பழக்கமில்லாத உணவுகளை வழங்கி நீரிழிவு போன்ற நோய்களை உருவாக்கி அழித்து வருகின்றனர்.

இதைவிட சில நாடுகளின் பழங்குடியினரின் இனத்தை அழிக்கும் வகையில் நாட்டைக் கைப்பற்றியவர்களால் அந்தப் பழங்குடியினப் பெண்கள் வன்புணரப்பட்டு இனச் சுத்திகரிப்புச் செய்யப்பட்டுள்ளனர்.

வாழ்விடமான காடுகளை அழித்துப் பல நாடுகளில் பழங்குடிகளை நிர்க்கதியாக்கியுள்ளனர். பூர்வீக மக்கள் அல்லது பழங்குடியினரை அடையாளமின்றி அழிப்பதன் மூலம் பிற்பட்ட காலத்தில் குடியேறியவர்கள் தம்மை அந்த நிலத்தின் பூர்வீக மக்களாக மாற்ற முனைகின்றனர். குடியேறிகள் தாம் நிலத்தைக் கொள்ளையடித்த செயற்பாட்டைக் காலப்போக்கில் பேசுவதற்கு ஆள்களில்லாதுபோய்விடத் தமது பூர்வீகம் ஆஸ்திரேலியா, அமெரிக்கா என்பதாக்கிவிடுகிறார்கள் குடியேறிகள். மொழியை அழித்தல், வாழும் நிலத்தை அழித்தல் போன்றன ஓர் இனத்தை அழிப்பதற்கான மூலோபாயங்களாக ஆக்கிரமிப்பாளர்களால்



மேற்கொள்ளப்படுகின்றன. கொள்ளையர்களின் தேசங்கள் இவ்வாறு உலகு முழுதும் இருக்கின்றன.

---

### அரசுக்கு எதிரான ...

தடையின்றிய மின்சாரம் கிடைத்தால் ஏனைய விடயங்களைக் கைவிட்டு விடுவர்.

இதைவிட அதிகம் சிரமப்படாது பணம் உழைக்கும் மற்றுமோர் பிரிவினர் பங்குச் சந்தை வியாபாரத்தில் ஈடுபடுபவர்கள். அவர்களும் பொருளாதாரப் பின்னடைவால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களின் ஆதரவும் கொழும்பு மையப் போராட்டத்துக்கு உள்ளது.

**இலங்கைக் கலாசாரம் இல்லை**

இலங்கைக்கு என ஒரு கலாசாரம் உண்டு. எத்தகைய பொதுவெளிப்போராட்டத்திலும் அது வெளிப்படும். ஆனால் தற்போது நடந்து வரும் போராட்டம் தகவல் தொழில்நுட்ப இளைஞர், யுவதிகளால் அதிகம் முன்னெடுக்கப்படுவதால் மேலைத்தேயப் பாணியே இதில் இழையோடியுள்ளது. தம்மைத் தடுத்து நிறுத்தும் காவல்துறையினருக்கு மலர் கொடுப்பது, ஆடல் பாடல், மேலைத்தேய உடை, தற்காலிகக் கொட்டகைகள், உணவுப் பரிமாற்றம் போன்ற விடயங்கள் ஊடகங்களில் முதன்மைப்படுத்தப்படுகின்றன. இந்தக் கலாசாரம் எவ்வாறு இலங்கை இளைஞர் யுவதிகளை ஆக்கிரமித்தது என்றால் மேலை நாடுகளின் அரச சார்பற்ற நிறுவனங்களின் கலாசாரமாக இது அவர்களுக்குள் புகுத்தப்பட்டது. வெளிநாட்டு நிறுவனப் பணியாளர்கள் என்ற ரீதியிலும் வர்த்தக அரசியல் ரீதியிலுமாக இதன் பின்னணியை நோக்கலாம். இந்தப் போராட்டக்காரர்களுக்குப் பின்னால் ஒரு வெளிநாட்டின் மறைகரம் இருப்பதை இது உறுதிப்படுத்துகிறது.

இலங்கையிலுள்ள பல்கலைக்கழகப் பேராசியர்கள், விரிவுரையாளர்களை அமெரிக்கா, மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு புலமைப்பரிசில் கொடுத்து அழைத்து ஜனநாயகம், மனித உரிமை என்ற போர்வையில் சுதேச அரசுகளுக்கு எதிராகச் செயற்படுவதற்குத் தயார்ப்படுத்துவதன் மூலம் உள்



நாட்டில் குறிப்பிட்ட விரிவுரையாளர்கள் தமது மாணவர்கள் மூலம் இந்தக் கருத்துகளை வலுவடையச் செய்து கிளர்ச்Pயில் ஈடுபடுத்துவதும் மறைகரச் செயற்பாடுகளே. தற்போதைய போராட்டமானது நடைமுறையிலிருக்கும் அரசை எதிர்ப்பது, நடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களை வீட்டுக்கு அனுப்புவது, ஊழலற்ற நல்லாட்சியை உருவாக்க முனைவது எனப் பல தலைப்புகளில் நடக்கிறது. இவற்றுக்கு அப்பால் இலங்கையில் கொரோனா கால முடக்கத்துக்குப் பின்பு ஒரு குதூகலச் சூழலை இந்தப்ப போராட்டம் இளைஞர் இளம் பெண்களுக்குக் கொடுத்திருக்கிறது. அதேவேளை காலிமுகத்திடல் போராட்டத்தில் கலந்துகொண்டு குதுகலங்கொள்வதற்குச் சாதாரண மக்களால் முடியவில்லை.

இந்த நிலையில் இந்தப் போராட்டத்தின் மூலம் ஊழலற்ற நேர்மையான ஒரு தலைவர் ஒருவரின் முகத்தை இதுவரை போராட்டக்காரர்கள் முன் வைக்கவேயில்லை. போராட்டக்காரர்களை ஒன்றிணைக்கும் ஒரு வேலைத்திட்டமோ, கால அட்டவணையோ இல்லாதிருப்பதும் முக்கிய குறைபாடுகள். நாடு முழுதும் அரசுக்கு எதிராக நடக்கின்ற இத்தகைய போராட்டங்கள் மூலம் தெளிவாகத் தெரிவது என்னவென்றால் மக்களுக்கு நாடாளுமன்ற அரசியலில் நம்பிக்கை இல்லாது போய்விட்டது என்பதே.





நியூட்டன்

# ஸ்டாலினா...? கோத்தாவா...?

படகுகள் மூலம் இந்தியாவைச் சென்றடைந்த இலங்கை அகதிகளிடம் ஏன் இலங்கையிலிருந்து வந்தீர்கள்? என விசாரித்தபோது இலங்கையில் பொருளாதாரச் சிக்கல் காரணமாகச் சாப்பாட்டுக்குக்கூட வழியில்லாத நிலை காணப்படுவதால் உயிர் தப்புவதற்காகத் தமிழகத்தை நாடி வந்தோம் என்று அந்த அகதிகள் கூறியுள்ளனர் என்று ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன. இதன் எதிர்வினையாக இலங்கையிலுள்ள தமிழ் மக்களுக்கு உணவு மற்றும் மருந்துப்பொருள்களை வழங்குவதற்குத் தமிழ்நாடு அரசு தயாராக உள்ளதாகவும் அதற்கான உரிய வழிமுறைகளை மத்திய அரசை மேற்கொள்ளுமாறும் இந்திய அயலுறவு அமைச்சர் ஜெய்சங்கருக்கு அவசர அழைப்பொன்றைத் தமிழ்நாட்டு முதலமைச்சர் ஸ்டாலின் விடுத்திருக்கிறார் என்றும் ஊடகங்கள் வாயிலாக அறியமுடிகிறது.

இதைவிட இலங்கையில் பட்டினிச் சாவு ஏற்படப்போகிறது என்கிற வகையிலான செய்திகளைப் பூதாகரமாக்கி இந்தியத் தமிழ்ச் செய்தி ஊடகங்கள் வெளியிடுகின்றன. அத்தகைய செய்தி ஒன்றில் இலங்கையில் சாப்பாட்டுப் பார்சலுடன் தெருவில் சென்றால் அதைப் பறித்துக்கொண்டுபோய்ச் சாப்பிடுகிறார்கள் என்கிற புரளியும் வெளியாகியது. இலங்கையில் வாழ்கின்ற சிங்களவரோ, தமிழரோ, முஸ்லிம்களோ அந்தளவுக்குத் தரக்குறைவான வாழ்க்கை நிலையில் இல்லை. மிக நீண்ட கால உள்நாட்டுப்போரின்போதுகூட ஒருவரிடம் இருக்கும் சாப்பாட்டை அடித்துப் பறிக்கும் நிலை இருந்ததில்லை. ஆனால் ஊடகங்கள் பரபரப்புக்காக இத்தகைய செய்திகளை அறிக்கையிடுகின்றன.

**எம்.ஏ.சுமந்திரனின் பதில்**

இலங்கையில் வடக்கிலும் கிழக்கிலும் மலையகத்திலும் கொழும்பிலும் வாழ்கின்ற தமிழருக்கு உணவு மற்றும் மருந்துப்பொருள்களை வழங்குவதற்கு ஸ்டாலின் அரசு விரும்புகிறது என்று செய்திகள் வெளியாகிய நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரான சுமந்திரன், இலங்கையிலுள்ள தமிழருக்கு மட்டும் உணவுப் பொருள்களும் மருந்துகளும் வழங்குவது நியாயமானதல்ல. தற்போதைய நெருக்கடியில் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் என மூவினத்தவர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். தமிழர்களுக்கு மட்டும் உதவி வழங்குவது நியாயமானதல்ல. முழு நாட்டவருக்கும் அவற்றை வழங்குவதே நியாயமானது - எனக் குறிப்பிட்டிருந்தார். அது சரியான நிலைப்பாடே. ஆனால் அந்தக் கோரிக்கையை அவர் இந்திய அரசிடம் முன்வைப்பதற்குப் பதிலாக தமிழ்நாடு அரசிடம் முன்வைப்பது சரியா என்பதும் கேள்விக்குரியதொன்றுதான். ஏனெனில் தமிழர்கள் என்கிற இன நெருக்கத்தின் - தொப்புள்கொடி உறவின் - அடிப்படையில்தான் தமிழ்நாடு அரசு உதவ முன்வந்தது என்கிற அடிப்படையையும் மனங்கொள்ளவேண்டும்.

சுமந்திரனின் இந்த நிலைப்பாட்டைத் தமிழ்நாட்டின் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான ரவிக்குமார் இவ்வாறு கண்டித்துள்ளார். தமிழக முதல்வர் இலங்கை மக்களுக்கிடையே பிளவை உண்டாக்க முயற்சிக்கிறார் என்ற தோற்றத்தைக் காட்டுவதற்குச் சுமந்திரன் எத்தனிக்கிறார். என்பதாக அவரது கண்டனம் அமைந்தது. இதுவும்கூடப் புரிந்துணர்வற்ற ஒரு கருத்தே. பட்டினி பஞ்சம் என்று வருகின்ற போது அதனால் பாதிக்கப்படுவர்கள் எல்லோரும் மக்களே அவர்களுக்குள் தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் என்கிற வேறுபாடில்லை என்பதை ரவிக்குமார் புரிந்துகொள்ளவேண்டும்.



**தமிழரின் அயலவர் சிங்களவரே**

இலங்கை ஒரு தீவு. இங்குள்ள வடக்குக் கிழக்குப் பிரதேசம் தமிழ் மக்களின் பூர்வீக நிலமாகும். அவர்களின் வடக்குக் கிழக்கு எல்லைகளில் அயலவர்களாக இருப்பவர்கள் சிங்களவரே தவிர வேறு நாட்டவர்கள் அல்லர். தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு ஒன்றைக்கூட இலங்கையிலுள்ள பெரும்பான்மைச் சிங்கள ஆட்சியாளர்களே வழங்க வேண்டியுள்ளது. எனவே தமிழ் மக்கள் தமது அயலவரைப் பகைத்துக்கொள்ளும் எந்த உதவியையும் வெளியே இருந்து பெறாதிருப்பதே நியாயமானது.

**1987 இந்திய உணவுப்பொதி**

**1987**ஆம் ஆண்டு ஆனி (ஜூன்) மாதம் **4**ஆம் நாளன்று 'ஒப்பிரேசன் பூமாலை' என்ற பெயரில் இந்திய வான்படைக்குச் சொந்தமான வானூர்திகள் யாழ்ப்பாணத்தில் உணவுப்பொதிகளை வீசின. அதன் பின்னர் இலங்கை - இந்திய ஒப்பந்தமும் அதைத் தொடர்ந்து இந்தியப் படைகளின் வருகையால் வடக்குக் கிழக்கில் ஏற்பட்ட அவலங்களும் ஈழத்தமிழ் மக்களின் மனதில் மிக ஆழமாகப் பதிந்துள்ள நிலையில் தமிழ்நாட்டு முதலமைச்சர் உணவுப் பொதிகளையும் மருந்துகளையும் உதவி என்ற பெயரில் வழங்கவுள்ள செய்தி தமிழர்களில் ஒரு பகுதியினர் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தும் என்பதும் எதிர்பார்க்கப்படக் கூடியதே.

இலங்கை அரச தலைவர் கோட்டாபயவைத் தனிப்பட்ட முறையில் வெறுக்கும் யாழ்ப்பாணத்துப் பொதுமகன் ஒருவர் இதுபற்றிக் கூறுகையில், ''எனக்குக் கோத்தாவைப் பிடிக்காது ஆனால் ஸ்டாலினா? கோத்தாவா? என்று ஒரு தெரிவு வந்தால் நான் கோத்தாபயவையே ஆதரிப்பேன்'' - என்றார். இந்தியத் தரப்புத் தொடர்பில் அவருக்குள் இருக்கின்ற தெளிவான அரசியல் விம்பத்தையே அது காட்டுகிறது.

**இலங்கை ஒரு தீவு. இங்குள்ள வடக்குக் கிழக்குப் பிரதேசம் தமிழ் மக்களின் பூர்வீக நிலமாகும். அவர்களின் வடக்குக் கிழக்கு எல்லைகளில் அயலவர்களாக இருப்பவர்கள் சிங்களவரே தவிர வேறு நாட்டவர்கள் அல்லர். தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு ஒன்றைக்கூட இலங்கையிலுள்ள பெரும்பான்மைச் சிங்கள ஆட்சியாளர்களே வழங்க வேண்டியுள்ளது**



# என்னதான் நடந்தது பாகிஸ்தானில்?

பரத்

பாகிஸ்தானின் அரசமைப்புச் சட்டமும் பெரும்பாலும் பிரிட்டிஷார் கொண்டுவந்த 'இந்திய அரசமைப்புச் சட்டம் 1935' என்பதையே அடிப்படையாகக் கொண்டது. பாகிஸ்தானை 'இஸ்லாமியக் குடியரசு' என்கிறது அரசமைப்புச் சட்டம். நாட்டின் அரச தலைவர், தலைமை அமைச்சர் ஆகிய பதவிகளுக்கு முஸ்லிம் அல்லாத ஒருவர் நியமிக்கப்படவோ, தேர்ந்தெடுக்கப்படவோகூடாது என்பது முக்கியமான அம்சங்களில் ஒன்று.

1974இல் கொண்டுவரப்பட்ட சட்ட திருத்தமானது, அகமதியாக்கள் முஸ்லிம்கள் அல்லர் என்று அறிவித்தது. முஸ்லிம் அல்லாதவர்களுக்கு நாடாளுமன்றத்தில் ஆறு இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. இஸ்லாமிய நாடுகளுடன் பாகிஸ்தானின் உறவை வலுப்படுத்துவது அவசியம் என்று அரசமைப்புச் சட்டம் வலியுறுத்துகிறது. பாகிஸ் தானின் தண்டனையியல் சட்டத்தில் இஸ்லாமியச் சட்டப்படி திருத் தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

இஸ்லாமியர் அல்லாதவர்கள் சிறுபான்மையினராகக் கருதப்பட்டு சட்டப்படி பாதுகாக்கப்படவேண்டும் என்கிறது அரசமைப்புச் சட்டம். ஆங்கிலம், உருது அதிகாரப்பூர்வ மொழிகள். (பங்களாதேஷ் பிரிவதற்கு முன்னால் வங்காளியும் தேசிய மொழியாக அங்கீகரிக்கப்பட்டிருந்தது.)

**உரிமைகளும் கடமைகளும்**

உள்நாட்டு - வெளிநாட்டு ஆபத்துகள் நேரிடும்போது நெருக்கடி நிலையை அறிவிக்க அதிபருக்கு அதிகாரம் இருக்கிறது. உச்ச நீதிமன்றம்தான் எல்லாவித சட்டச் சிக்கல்களையும் தீர்க்க வேண்டிய இறுதி நீதி அமைப்பு. அது சுதந்திரமானது.

நாட்டுக்குள் மக்கள் எங்கு வேண்டுமானாலும் வசிக்கவும் வேலை பார்க்கவும் தொழில் செய்யவும், அவரவர் மதத்தைப் பின்பற்றவும் உயிரையும் உடைமைகளையும் காத்துக்கொள்ளவும் உரிமை படைத்தவர்கள். அடிமைத்தனம் கூடாது. மொழியுரிமை உண்டு. அரசால் குற்றஞ்சாட்டப்படும்போது நியாயமான நீதி விசாரணை பெற குடிமக்களுக்கு உரிமை உண்டு. அரசின் சேவைகளில் பாரபட்சம் இருந்தால் நீதிமன்றங்களை நாடி நியாயம் பெறலாம்.

பாகிஸ்தானில் படைத்துறை, குறிப்பாக தரைப்படை மேலாதிக்கம் மிகுந்த அமைப்பு என்பது உண்மைதான். ஆனால், அந்நாட்டு நாடாளுமன்றம், நீதிமன்றம் ஆகியவனவும் முற்றிலுமாக செல்வாக்கு இல்லாதவை கிடையாது. அவற்றுக்கு என்ன அதிகாரம் இருக்கிறது என்பதே அண்மையில் இம்ரான்கான் விடயத்தில் வெளிப்பட்டிருக்கிறது.

பாகிஸ்தானில் இப்போது நடைமுறையில் இருப்பது 'பாகிஸ்தான் இஸ்லாமியக் குடியரசு அரசமைப்புச் சட்டம் -1973' ஆகும். ஜுல்பிகர் அலி புட்டோ தலைமை அமைச்சராக இருந்தபோது எதிர்க்கட்சிகளின் உதவியோடு வடிவமைக்கப்பட்டது இது. சட்ட நிர்வாகம், அரசியல் கலாசாரம், அரசியல் நிர்வாக அமைப்பு முறைக்கு வழிகாட்ட அரசமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்டது.

**எப்படி நிர்வகிக்கப்படுகிறது பாகிஸ்தான்?**

பாகிஸ்தான் என்பது பஞ்சாப், சிந்து, பலூசிஸ்தான், கைபர் பக்துன்க்வா ஆகிய நான்கு மாநிலங்களைக் கொண்டது. அரசுக்கு அரசமைப்புச் சட்டம் வழங்கும் அதிகாரங்கள் எப்படிப்பட்டவை, நாடாளுமன்றம், நீதித் துறை, நிர்வாகத் துறை, தரைப்படை ஆகியவற்றின் அமைப்பு - அதிகாரம் - பங்களிப்பு ஆகியவை என்ன என்பது அரசமைப்புச் சட்டத்தில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் அரச தலைவர் அதிக அதிகாரங்கள் இல்லாதவர், சம்பிரதாயமான தலைவர். நாட்டின் நிர்வாகத்துக்கு தலைமை அமைச்சர் தலைமையிலான தேசிய அமைச்சரவைதான் பொறுப்பு. அரச தலைவரைவிட தலைமை அமைச்சர்தான் அதிகாரம் மிக்கவர். நாட்டின் நீதித் துறை ஆணைகளும் சட்டங்களும் இஸ்லாமியர்களின் புனித மறை நூலான குரான், சுன்னா ஆகியவற்றின் அடிப்படையில் மட்டுமே இருக்கவேண்டும். நாடாளுமன்றம் இயற்றும் சட்டம் இவ்விரண்டுக்கும் எதிராக அல்லது முரணாக இருந்தால் அது செல்லுபடியாகாது.

அரசமைப்புச் சட்டத்தைத் திருத்தலாம். நாடாளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பங்குக்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் ஆதரிக்கும் சட்டத் திருத்தங்கள் செல்லுபடியாகும். ஆனால், அவையும் நடைமுறையில் உள்ள அரசமைப்புச் சட்டத்துக்கோ, குர் ஆனுக்கோ, சுன்னாவுக்கோ விரோதமாக இருத்தல்கூடாது.

(16ம் பக்கம் பார்க்க)

# மருத்துவப் பேரழிவு நோக்கி நகர்கிறதா நாடு?

அனுசியா



உயிர் காக்கும் மருந்துகளுக்கு இலங்கையில் கடும் தட்டுப்பாடு நிலவுகிறது. இந்த நிலை இன்னும் சில வாரங்களுக்கு நீடித்தால், ஆயிரக்கணக்கானவர்கள் இறந்துபோவார்கள் என்று இலங்கை மருத்துவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். ஆனால், நாட்டில் போதுமான அளவு மருந்துகள் கையிருப்பில் உள்ளன என ஆட்சியாளர்கள் அறிவிக்கின்றனர். உண்மை என்ன?

"இலங்கையில் மருந்துப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு நிலவுவதால் 'மருத்துவப் பேரழிவு' நிகழ்கிறது" என்கிறார் இலங்கை அரசு மருத்துவர்கள் சங்கத்தின் பேச்சாளர் வாசன் ரத்னசிங்கம். "இலங்கை மருத்துவமனைகளில் 237 அத்தியாவசிய மருந்துகளுக்கும், 5 உயிர் காக்கும் மருந்துகளுக்கும் தட்டுப்பாடு நிலவுகிறது. இலங்கையில் உள்ள சுமார் 30,000 அரசு மருத்துவமனைகளிலும் இந்தத் தட்டுப்பாடு நீடிப்பதால், பெரும்பாலான மருத்துவமனைகளில் அறுவை சிகிச்சைகள் தடைபட்டுள்ளன. சில மருத்துவமனைகளில் அறுவை சிகிச்சை உபகரணங்களுக்குக்கூடத் தட்டுப்பாடு நிலவுகிறது.

ஆனால், முழுப் பூசணிக்காயை சோற்றுக்குள் மறைக்கும் வகையில், இலங்கையில் மருந்துகளுக்குத் தட்டுப்பாடு இல்லை என இலங்கை ஆட்சியாளர்கள் அறிவித்துள்ளனர். மருத்துவமனைகளில் பணியாற்றும் மருத்துவர்களான எங்களுக்கு உண்மை நிலை தெரியும்.

**இந்த நிலை நீடித்தால், கொரோனா பரவல், ஆழிப்பேரலை (சுனாமி), 30 ஆண்டு காலப் போரால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையின் கூட்டுத்தொகையைவிட, மருத்துவ அவசர நிலையால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்**

இந்த நிலை நீடித்தால், இலங்கையின் மருத்துவக் கட்டமைப்பு முழுமையாக உடைந்துவிடும். இதனால், பல்லாயிரக்கணக்கானவர்கள் உயிரிழக்க நேரிடும். இந்த அவலம் இலங்கை சந்தித்த சுனாமிப் பேரவலம், கரோனா பரவல் இறப்புகளைவிடவும் அதிகமாக இருக்கும். இந்த நிலையைத் தடுக்கும் வகையில் பன்னாட்டு உதவியைக் கோரியுள்ளோம்" என்றார்.

இலங்கையில் ஏற்பட்ட அந்நியச் செலாவணி பற்றாக்குறை, மருத்துவத் துறையையும் விட்டுவைக்கவில்லை என்கிறார்கள் பொருளாதார நிபுணர்கள்.

இலங்கையில் ஏற்பட்ட டொலர் பற்றாக்குறையால், எரிபொருள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களை இறக்குமதி செய்ய முடியவில்லை. அதேபோல, மருந்துப் பொருள்களையும் இறக்குமதி செய்ய முடியவில்லை. இலங்கையில் மருந்துப் பொருள்கள் உற்பத்தி மிகச் சொற்பமாகவே நடக்கிறது. மருந்துகளுக்கு இறக்குமதியையே பெரும்பாலும் நம்பியிருக்கவேண்டியுள்ளது. இந்நிலையில், கடந்த பல மாதங்களாகவே இலங்கைக்கு மருந்துப் பொருள்கள் வரவில்லை. இறக்குமதி தடைபட்டுள்ள நிலையில், இலங்கையில் மருந்துகளுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது.

"இலங்கையில் மருந்துப் பொருள்களுக்கு நிலவும் தட்டுப்பாடு தொடர்பாக உண்மை நிலையை அரசு மறைத்து வருகிறது" என்கிறார் மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் டாக்டர் செனல் பெர்னாண்டோ. அவர் மேலும் கூறுகையில், "இலங்கையில் உள்ள அனைத்து மருத்துவமனைகளிலும் மருந்துத் தட்டுப்பாடு நிலவுகிறது. இலங்கை அரசு இதை மூடி மறைத்து வருகிறது. மருத்துவர்களும் கையிருப்பில் உள்ள சொற்ப மருந்துகளைக் கொண்டு நிலைமையைச் சமாளித்து வருகிறார்கள். இந்த மருந்துகளில் பெரும்பாலானவை இன்னும் இரு வாரங்களில் முடிந்துவிடும். இந்த மருந்துகள் முழுமையாக முடியும் போது, இலங்கையில் நினைத்துப் பார்க்க முடியாத மருத்துவப் பேரவலம் ஏற்படும். மருந்துத் தட்டுப்பாட்டால் ஏற்படும் இறப்புகள் மருத்துவமனைகளில் பெரும் கலவரங்களை ஏற்படுத்தும். இப்போதாவது அரசு உண்மை நிலைகளை ஒப்புக்கொண்டு, மருந்துகளை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். இது தொடர்பாக இந்திய அரசின் உதவியைக் கோரியுள்ளோம்" என்றார்.



மருத்துவச் சேவைக்கு முரணான செயல்களில் ஈடுபடுமாறு இலங்கை அரசு தங்களை வற்புறுத்துகிறது என இலங்கை மருத்துவர்கள் கூறுகிறார்கள்.

இது தொடர்பாக இலங்கை மருத்துவச் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் "அத்தியாவசிய அறுவை சிகிச்சைகளை மட்டும் மேற்கொள்ளுமாறு இலங்கை அரசு கூறுகிறது. இதனால், யாருக்கு மருத்துவம் பார்ப்பது, யாருக்கு பார்க்காமல் விடுவது என்ற கடினமான முடிவை எடுக்கும் நிலைக்கு மருத்துவர்கள் தள்ளப்பட்டுள்ளனர். இது மருத்துவத்தின் அடிப்படைக்கு முரணானது.

இந்த நிலை நீடித்தால், கொரோனா பரவல், ஆழிப்பேரலை (சுனாமி), 30 ஆண்டு காலப் போரால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையின் கூட்டுத்தொகையைவிட, மருத்துவ அவசர நிலையால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். அரசு இப்போதாவது விழித்துக் கொண்டு மருத்துவ நிபுணர்களிடம் உண்மை நிலையைக் கேட்டறிந்து மருந்து தட்டுப்பாட்டைப் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று தெரிவித்துள்ளது.

அறுவை சிகிச்சைக்கு தேவையான மருந்துப் பொருள்களுக்கு கடும் தட்டுப்பாடு நிலவுகிறது என்கிறார்கள் அறுவை சிகிச்சை நிபுணர்கள்.

"அறுவை சிகிச்சைக்கு அத்தியாவசியமான அட்ராக்யூரியம், நியோஸ்டிக்மைன் உள்ளிட்ட மருந்துகளுக்கு கடும் தட்டுப்பாடு நிலவுகிறது. இதனால், அரசு மருத்துவமனைகளில் அறுவை சிகிச்சைகளை செய்ய முடியாத நிலை நிலவுகிறது.

அவ்வளவு ஏன், இலங்கை மருத்துவமனைகளில் சாதாரண மருத்துவ உபகரணங்களுக்கே தட்டுப்பாடு நிலவுகிறது. நோயாளிகளுக்கு மருந்துகளை கனெக்ட் செய்யும் செட் குழாய் , தூள் மருந்துகளை கரைக்கப் பயன்படுத்தும் டிஸ்டில்ட் வாட்டர்கூட பெரும்பாலான மருத்துவமனைகளில் கையிருப்பில் இல்லை. உயிர் காக்கும் மருந்துகள் இல்லாமல் அறுவை சிகிச்சை மேற்கொள்வது பெரிய பின்விளைவுகளை ஏற்படுத்தும்.

பெரும்பாலான மருத்துவமனைகளில் யூரினரி கதீட்டர், சக்ஷன் டிரெய்ன் ஆகியவை இல்லை. இதனால் உயிர் காக்கும் அறுவை சிகிச்சைக்கு வரும் நோயாளிகளிடமே, அறுவை சிகிச்சைக்கு தேவையான அடிப்படை பொருள்களைக் கொண்டு வந்தால் அறுவை சிகிச்சை செய்கிறோம் எனக் கூறுகிறோம். இலங்கையில் உள்ள பிரபல மருத்துவமனைகளிலேயே இந்தப் பொருள்கள் இல்லாதபோது, சாதாரண மக்கள் அதை எங்கே தேடிப் பெறுவார்கள்" என்றனர் அவர்கள்.

இலங்கையில் மருந்துத் தட்டுப்பாட்டால் ஆய்வகச் சோதனைகள் ஏறத்தாழ முழுமையாக முடங்கியுள்ளன. இலங்கையின் மிகப் பெரிய

# சிறைக்குள்...

52



தர்மராசா

## சிறைச்சாலையில் வரவேற்பு அடி

பூசாச் சிறையில் கடைசி அறைக்குப் பக்கத்தில் பிளாஸ்ரிக் கதிரைகள் இரண்டு எப்போதுமே போடப்பட்டிருக்கும் அதில் சிறைச்சாலை ஊழியர்கள் அமர்ந்திருப்பது வழக்கம். அவர்கள் அந்த இடத்தில் இல்லாத நேரத்தில் கைதிகளில் யாராவது அந்தக் கதிரைகளில் இருப்பது வழக்கம். ஒரு நாள் காலையில் அருள் உடற்பயிற்சி செய்துவிட்டு அதில் ஒரு கதிரையில் இருந்து கொண்டு மற்றக் கதிரையில் தனது கால்களைத் தூக்கி வைத்துக்கொண்டிருந்தார். திடீரென அங்கு வந்த சிறைச்சாலை ஊழியர் அருளுக்குப் பேசினார். அந்த அதிகாரிக்குப் பேசச் சந்தர்ப்பம் கொடுத்ததை நினைத்துக் கவலைப்பட்டோம். "அவருக்கு எப்போதாவது ஒரு கரைச்சலைக் கொடுக்கவேண்டும்" என்றார் அருள். நான் கூறினேன், "எமக்குக் கதைக்கக்கூடிய நியாயம் இருந்தால் ஒரு விடயத்தில் கடைசி வரை சவால் விடலாம். எமது பக்கத்தில் பலவீனம் இருப்பதால் இப்போதைக்குப் பேசாமலிருப்போம்" என்று.

சேரன் என்ற நண்பர் சிறையில் தான்பட்ட துன்பங்களை இவ்வாறு நினைவுகூர்ந்தார். "1995. 12.29 அன்று என்னை மகர சிறைச்சாலைக்கு மாற்றினார்கள். அங்கு சிறை அறையில் விட்டபோது அங்கிருந்த சிங்களக் கைதிகள் 'கொட்டியா' (புலி) என்று சொல்லிக் கடுமையாக அடித்தார்கள். அந்தக் காலகட்டத்தில் புலிச் சந்தேகநபர்கள் அதிகமாக இல்லாதிருந்ததால் ஓரிருவர் அகப்படும்போது எல்லாச் சிங்களக் கைதிகளும் சேர்ந்து தாக்குவார்கள். எனக்கு முகமெல்லாம் காயம் ஏற்பட்டுக் குருதி ஒழுகிக்கொண்டிருந்தபோது கொள்ளையடித்த வழக்கொன்றில் சிறையிலிருந்த படை அதிகாரி ஒருவர் ஓடிவந்து என்னைக் காப்பாற்றி "அவனுக்கு யாரும் அடிக்கக்கூடாது" என்று மற்றவர்களை வெருட்டிவிட்டு எனக்குத் தேநீர் வாங்கிக் கொடுத்தார். களுத்துறைச் சிறைச்சாலைக்கு மாற்றப்படும்வரை எனக்கு ஆதரவாக இருந்தவர் அவர் மட்டும்தான் - என்றார் சேரன்.

மகர சிறையில் ஒரு நாளுக்கு ஒருபோத்தல் தண்ணீர் மட்டும் கிடைக்கும். அதில்தான் அன்றைய நாளைச் சமாளிக்கவேண்டும். குளிக்க வசதியில்லை. கடுமையான தண்டனை வழங்கும் நிலைதான் அங்கு நடைமுறையாக இருந்தது. அங்குள்ள 'டி' பிரிவுக்கு மாற்றப்பட்ட பின்னர் ஓரளவு குளிக்க வசதி இருந்தது என்று கூறினார் சேரன். மகசின் சிறைக்குள் சென்றவுடன் "வரவேற்பு அடி" போடுவார்கள் என்றும் சொன்னார். சிறைச்சாலை ஊழியர்கள் கைதிகளை அடித்து முட்டுக்காலில் நடக்கவிடுவார்கள். தான் களுத்துறைக்குச் சென்றபோது 'சி' பிரிவில் சிங்களக் கைதிகளுடன் கலந்துபோட்டார்கள், அங்கு தமிழ்க் கைதிகள் 20 பேர் வரையில் இருந்தனர் என்றும் சிங்களக் கைதிகள் அதிகம் துவேசமாக நடந்துகொண்டனர் என்றும் கூறினார். தமிழ்க் கைதிகளில் பெரும்பாலானவர்கள் சிறியவர்கள் என்பதால் சிங்களக் கைதிகளை எதிர்க்கும் வல்லமை அவர்களிடம் இருக்கவில்லை. சேரனுக்கு அப்போது 20 வயது என்றும் சின்னப் பையன்களைச் சிங்களக் கைதிகள் தன்னினச் சேர்க்கைக்கு உட்படுத்துவதால் அதற்கு எதிராகத் தான் பிரச்சினைப்பட்டபோது தன்னை ஒரு ஜெயிலர் கடுமையாகத் தாக்கினார் என்றார். பின்னர் பிரதம ஜெயிலருடன் கதைத்து 'டி' வார்ட்டைத் தமிழ்க் கைதிகளுக்கு ஒதுக்கிக் கொடுத்தார்கள். இந்த விடயத்தில் களுத்துறை அத்தியட்சகராக இருந்த பெனாண்டோ என்பவர் உதவினார் என்று கூறினார். அதே பெனாண்டோ என்ற நபர் 1983 வெலிக்கடைச் சிறைக்கைதிகளின் கொலையின்போது கைதிகளின் கதவைத் திறந்துவிட்டு கைதிகளைக் கொலை செய்ய உதவினார் என்றும் சேரன் கூறினார்.

பொதுவாக எல்லாச் சிறைகளிலும் தலைமயிர் வெட்டுவது ஒரு சிறப்பு நிகழச்சி. நான் முதன்முதலாகப் போகம்பரைச் சிறையில் தலைமயிர் வெட்டினேன். ஹலீல் என்ற கைதி ஒருவன் சவரம் செய்கின்ற சவர அலகால் (றேசர்) தலைமயிரை வெட்டினார். ஒரு சீப்பை வைத்து தலைமயிரை மிதத்திப் பிடித்துச் சவர அலகால் பக்குவமாக வெட்டினார். இரண்டாவது தடவையாகக் களுத்துறைச் சிறையில் வெட்டினேன். அங்கு சிறை நிர்வாகம் கத்திரிக்கோலை ஒரு குறிப்பிட்ட நாளில் மட்டும் கைதிகளிடம் வழங்கி வைத்திருந்தது. கோவிலுக்காகக் கட்டப்பட்ட அறைகளில் கதிரை போட்டு இருக்க வைத்து வெட்டினார்கள். குருநகரைச் சேர்ந்த மென்சர் என்பவர் எனக்கு வெட்டினார். மிகவும் உற்சாகமானவர். "உங்க ளுக்கு நோ டேற் வெட்டா...?" என்று கேட்டார். எனக்கு அவர் கேட்டது புரியவில்லை. அப்படியென்றால் என்ன என்று கேட்டேன். "மறு வழக்குத் தவணைப் படிவத்தில் 'நோ டேற்" (கால வரையறையற்ற) போட்டிருந்தால் 6 மாதம் தொடக்கம் 1 வருடம் வரை வழக்கு வரச் சுணங்கும். தலைமயிரை நல்லாக் கட்டையாக வெட்டினால் 6 மாதங்களுக்குப் பிரச்சினையில்லை. அதுதான் "நோ டேற் வெட்டு" என்றான். சாதாரணமாக வெட்டுமாறு நான் கூறினேன்.

(தொடரும்)

## மருத்துவப் ...

மருத்துவமனையான கொழும்பு அரசு மருத்துவமனையில், மறு அறிவிப்பு வரும் வரை ஆய்வகச் சோதனைகளை நிறுத்துமாறு இலங்கை சுகாதாரத் துறை உத்தரவிட்டுள்ளது. இதேபோல, நாட்டிலுள்ள பெரும்பா லான மருத்துவமனைகளில் ஆய்வகச் சோதனைகள் முடங்கியுள் ளன. இதனால், பல்லாயிரக்கணக்கான நோயாளிகள் பாதிப்படைந்துள்ளனா்.

இந்தச் சூழலில், புதிதாகப் பிறந்த குழந்தைகளின் உயிரைக் காப்பாற்ற இலங்கை அரசை நம்பிப் பய னில்லை என பகிரங்கமாக சா்வதேச உதவியை நாடியுள்ளனா் சிசு மருத் துவா்கள் (நியோநேட்டாலஜிஸ்ட்ஸ்).

இது தொடா்பாக பெரிநேட்டல் சொசைட்டி ஆஃப் ஸ்ரீலங்கா அமைப்பின் தலைவா் எல்.பி.சி.சமன் குமார கூறுகையில் ‘ குழந் தைகளின் நுரையீரலுக்கு ஆக்சி ஜனை வழங்கும் வகையில் மூக்கு அல்லது வாய் வழியாக மூச்சுக்குழாயில் வைக்கப்படும் எண்டோட்ரா ஷியல் குழாய்கள் தீா்ந்துவிட்டன. இதனால், ஒரு குழந்தைக்கு பயன்படுத்திய குழாய்களை மீண்டும் சுத்தப்படுத்தி பயன்படுத்துகிறோம். இப்படிப் பயன்படுத்துவது தவறு எனத் தெரிந்தும் பயன்படுத்துகிறோம்.

நிலைமை கைமீறிப் போயுள்ள நிலையில் பன்னாட்டு உதவியை நாடியுள்ளோம். எண்டோட்ராஷியல் குழாய்களை வழங்குமாறு சா்வதேச மருத்துவ அமைப்புகளுக்கு பகிரங்க கோரிக்கை விடுத்துள்ளோம்.

மேலும், குழந்தை மருத்துவத் துக்குத் தேவையான இன்ட்ரா வீனஸ் அமினோ ஆசிட் சொல்யூ ஷன், இன்ட்ரா வீனஸ் லிபிட் சொல் யூஷன், பிளட் கேஸ் அனலைஸா் உள்ளிட்டவற்றுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது என்றாா்.

எந்தெந்த மருந்துகள் கையிருப் பில் இல்லை என்பதை அரசு இது வரை தெளிவுபடுத்தவில்லை. ஆனால், வெறும் தலைவலிக்கு பயன்படுத்தப்படும் பாராசிட்டமல் உள்பட ஏறத்தாழ அனைத்து மருந்து களுக்கும் இலங்கையில் தட்டுப்பாடு நிலவுகிறது என்கிறாா்கள் களத்தில் உள்ள இலங்கை மருத்துவா்கள்.

கையறு நிலையில் இருக்கிறது இலங்கை அரசு!

54



ஐயங்கொண்டான் சுவாமிகள்

# எமையறிதல்

இயல்புக்கோ யதார்த்தத்துக்கோ உட்படாத ஆசைகள் அனேகமாக எதிர் விளைவுகளையே தந்துவிடக்கூடும் என்பதை நினைவிற்கொள்வது அவசியம். நான் என்கிற விடயம் போலவேதான் ஆசை என்பதும். நியாயமற்ற அல்லது யதார்த்தமற்ற போதனைகளால் குழப்பப்பட்டிருக்கிறோம் என்பதே உண்மையானது. ஆசைப்படுதல் என்பது தவறல்ல என்பது மட்டுமல்ல ஆசையானது தேவையை மட்டுமே நிறைவுசெய்யும் வகையில் அமையவேண்டும் என்பதும் உண்மையே. இதனை நாம் மனங்கொள்ளவேண்டுமெனினும் மனம் என்கிறதுதான் எல்லாமே.

ஆசையென்கிற ஒன்று இல்லாத வாழ்க்கையை கற்பனை செய்து பார்க்கவாவது முடிகிறதா? தேவையின் உந்துதலுக்கு உழைப்பு அவசியப்படுகிறது. அந்த உழைப்பினது இலக்காக ஆசையே அமைந்து முன்னுந்துகிறது என்பதை மறந்துவிடுகிறோம். இங்குதான் நாம் ஆன்மீகவாதிகளது போதனைகளை கேள்விக்குட்படுத்தவேண்டிய அவசியமுள்ளது. நாம் அவ்வாறாக எந்தவிதமான கேள்விக்கும் உட்படுத்துவதில்லை என்பதே யதார்த்தமானது. அவ்வாறு செய்யின் நிறையப் பிரச்சினைகளிலிருந்து வெளிவர முடியும்.

ஆசைகளைத் துற என்று போதிக்கிறவர்களே இறையடிப் பேரின்பப் பெருவாழ்வைப் பெற தானதர்மம் செய்யுங்கள் என்பதோடு நின்றுவிடாமல் கடவுளிடம் மன்றாடுங்கள் என்றும் சொல்லிக்கொண்டிருக்கிறார்களே ஏன்? கடவுள் என்றொன்று இருக்கிறதா? எங்கே? என்பவை தொடர்பான தெளிவோடுதான் உள்ளனரா? அது சரி அது என்ன பேரின்பப் பெருவாழ்வு? அது எப்படியிருக்கும்? எங்கே இருக்கும்? அவையாவது தெரியுமா?

ஒன்றுமேயில்லாத வெறும் கற்பனையை அடையவேண்டுமென்கிற ஆசையையல்லவா தூண்டுகிறார்கள்? இது தானங்கள் வழியாக சும்மா இருந்து வயிறு வளர்ப்பவர்களது சுரண்டல் உத்தியாக இல்லையா? முன் பகுதிகளில் பேசிக்கொண்டதுபோல இல்லாத ஒன்றிடம் அசைப்பட வைப்பதுதான் அவர்களது புனிதமான பணியா? அவர்களைக் காலில் விழுந்து வணங்கிக் கொண்டாடுகின்ற எமது அறிவுதான் ஆறாம் அறிவான பகுத்தறிவா?

அறிவு என்பது அறிதலினூடாக அடையப்படக்கூடியதா? அல்லது தொட்டுணர் பட்டறிவினூடாக அடையக்கூடியதா? நாம் எப்போதுமே ஆராய்ந்து உணர்வதைவிடவும் போதனைகளில் மயங்கிப் பின்தொடர்வதை விரும்புகிறோம். அதையே பெருமையாகவும் கொள்கிறோம். வானத்தில் இத்தனை நட்சத்திரங்கள்தான் இருக்கின்றன என யாரோ ஒருவன் சொல்லிவிட்டால் அதனை மனனம் செய்கிறோம். அவனே இவ்வளவு என்று சொல்லிப் பணம் கொடுத்தால் எண்ணிப் பார்க்கத் தயங்கோம். இதுதான் நாம். இதுதான் எமது மனம்.

இப்படியானதுதான் எமது அறிவு. எதையும் பார்த்தோ கேட்டோ பெறமுடிந்த தகவலை நாம் எப்போதாவது எண்பிக்கும்படியாக எமது பட்டறிவையும் பகுத்துணரும் திறனையும் பாவித்திருக்கிறோமா? எவனோ சொன்னான் எவரெவரோ பின்பற்றுகிறார்கள் என்கிறதை மட்டுமே காரணமாகக்கொண்டு நாமும் கண்களை இறுக மூடிக்கொண்டு பின்பற்ற முயல்கிறோம்.

எவனோ சொன்னது அவனது தனிப்பட்ட தேவை கருதியது. நானும் அவனும் ஒன்றா? எனக்கான தேவையும் அவனுக்கான தேவையும் ஒன்றா? முன்செல்கிற செம்மறியாட்டை காரணகாரியமறியாது மந்தையிலுள்ள ஏனைய ஆடுகள் பின்தொடர்வதற்கும் எமக்கும் வேறுபாடு என்ன? நாமம் செம்மறியாடுகளும் ஒன்றென்று கூறினால் கோபம் வருகிறதே? ஏன்? எல்லாம் தெரியுமென்கிற எண்ணம்தான் காரணமா? எமக்கு எல்லாம் தெரியுமா?

ஒன்றுமே தெரியாது என்பதுதான் தெரிந்து வைத்திருக்கிற உண்மை. அதனை ஏற்றுக்கொள்வதே உயர்வான அறிவு. தெரியாது என்பதுதான் தெரிந்துகொள்வதற்கான வரைபடம் என்பதைக் கூட உணரமுடியாதவர்களாகவே அலைகிறோம். தெரியாது என்பதைத் தரக்குறைவாக எண்ணுவதைவிடவும் தெரியும் என்பது அதிகம் தரக்குறைவானது என்பதை ஏற்றுக்கொள்ளும் வரை அலைவதைத் தடுக்கவேமுடியாது. உண்மையை ஏற்றேயாக வேண்டும். மனம் என்கிற குழப்பவாதிதான் அதையும் தடுத்துக்கொண்டிருக்கிறது. ஏன்? சிந்திப்போம்.

---

# பழி பாவம் உண்மையோ?

கதிரேசன் காத்தவராயன்

அதிலை வரிசத்தைக் கொண்டாட கோயிலடிக்குப் போனன். முருகேசர் காரசாரமாய் ஏதோ சொல்லிக்கொண்டு நிண்டார். சம்பர் கனகர் தம்பர் முத்தர் ஆக்கள் கேட்டுக்கொண்டு நிண்டினம். சாமியை அவசர அவசரமாய் சுகங்கேட்டுக்கொண்டு நானும் போனன். "என்னப்பா வரியம் வலுகலாதியான கொண்டாட்டந்தான்போலை..." எண்டு சம்பர் வரவேற்றார்.

"ஓஓஓ... அதுதானிப்ப இல்லாதகுறை" எண்டு சொல்ல அது எரிச்சலோடை கூட்டுச்சேர்ந்துதான் வெளியாலை வந்துது. தம்பராக்கள் பெருமூச்சொண்டாலை ஆமோதிச்சினம். "கடுமையான கதை நடந்துகொண்டிருந்த மாதிரிக் கிடந்தது?" எண்டு நான் கேக்க "இப்ப எதப்பா கடுமையில்லை?" எண்டார் முருகேசர். "ஏன் முருகேசு! அப்பிடியென்னப்பா கடுமையாக் கிடக்குது? வருசக் கொண்டாட்டத்தைப் பாரன்? ஆருக்கு என்ன பிரச்சனை?" எண்டன் நான்.

கனகர் படக்கெண்டு "என்னப்பா கதிரேசு தட்டுப்பாடுகள், ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள் , காலிமுகத்திடலிலை நடக்கிறதுகள் தெரியேல்லையோ? அதுகள் பிரச்சனையில்லையோ?" எண்டு கேட்டார். அந்த நேரம் வல்லியம்மான் வந்து சேந்தார். "என்ன அது காலிமுகத்திலை நடக்கிறது தெரியாதோ? நடக்கட்டும் நடக்கட்டும். நாங்கள் பட்ட கஸ்ரங்களைக் காணாமலிருந்தவை அனுபவிக்கினம்... வற்றாப்பளையாச்சியின்ரை கோவம் சும்மா விடுமோ?" எண்டு ஒரு சிரிப்புச் சிரிச்சார் வல்லியம்மான்.

"இப்ப தட்டுப்பாடு எண்டதுதான் அவங்கடை கொதிப்புக்குக் காரணம்... அந்தக் காலம் சாமானுகளே இல்லாமலுக்கல்லே வாழ்ந்தனாங்கள்?" எண்ட தம்பற்ரை கதைக்குள்ளை முத்தர் குறுக்கிட்டார். "அதுகளை விடப்பா... தலைக்கு மேலாலை எத்தினை விதமான பிளேனுகள் குண்டு போட்டதுகள்... அதைவிட செல்லடியள்... நாங்கள் பட்டதுகளிலை ஒரு ஆயிரத்திலை ஒண்டாவது அவங்கள் பட்டவங்களே?" எண்டார் முத்தர்.

"எடஎட நீயும் பேக்கதையல்லே பறையிறாய்... அதுக்கு முதல்லை உதே காலிமுகத்திடலிலைதானே நாங்கள் அடி வாங்கினநாங்கள்? அந்த நேரம் லொறியிலை போய் நானும் அதிலை இருந்தனான்... அடிச்ச அடி... வேட்டியளையும் உரிஞ்செறிஞ்சல்லே உதைச்சவங்கள்... அப்ப நாங்கள் தமிழர்... நீதிக்காகய்ப் போராடுற கூட்டத்துக்கே இனம் பாத்துத்தான் அரசாங்கம் இருக்குது..." எண்டு பொரிஞ்சார் வல்லியம்மான்.

"உண்மைதானம்மான் நாங்கள் கனக்க விசயங்களை மறக்கிறம்... அதோடை நாட்டு நடப்புகளை சரிவரப் பாக்கிறதுமில்லை... முள்ளிவாய்க்காலிலை நாங்கள் கட்டின சீலைக்கூடாரங்களையும் இப்ப அவங்கள் போட்டிருக்கிற வசதியான பாதுகாப்பான கூடாரங்களையும் ஒப்பிட்டுப்பாத்தாத் தெரியும் உண்மையான நிலைமை" எண்டார் முருகேசர். "எரிவாயுக்குத் தட்டுப்பாடெண்டும் பிரச்சனைப் பட்டுக்கொண்டு போராட்டக்காறர் சமையல் செய்யிறதும் எரிவாயுவிலைதான்.. படங்களிலை கவனிச்சனீங்களே?" எண்டார் கனகர்.

"அதுக்குள்ளை ஒரு முக்கியமான விசயம்... கவனிச்சனிங்களே? ராசபக்ச குடும்ப ஆட்சி வேண்டாம் எண்டுறதுதான் அவங்கடை பிரச்சனை... பொருளாதாரச் சீர்கேட்டுக்கு அவங்கள்தான் காரணம் எண்டு நினைக்கிற நினைப்பும் பிழையல்லோ? தமிழனுக்கெதிராய்ப் போர் செய்ததுதான் காரணம் அதுவும் எல்லாக் கட்சியுந்தான் காரணமெண்டிற விசயத்தைத் தெரியாத மோட்டுக்கூட்டமல்லே?" எண்டார் முருகேசர்.

"இஞ்சார் முருகேசு உழைக்கக்கூடின வலுவான ஒரு இளஞ்சந்ததியை தமிழனையுந்தான் சிங்களவனையுந்தான் கொஞ்சநஞ்சமே அழிச்சவங்கள்... நாடு என்னண்டு உருப்படும்..." எண்டுகொண்டு வல்லியம்மான் போட்டார். "மான் கடுமாள்தான்"ண்டார் தம்பர். "ஒண்டு சொல்லட்டே சனம் தெளிவாகிறதுக்கு இன்னுங் காலங்கிடக்கு... தெளிவடையிற கட்டத்திலை சனந்தான் இருக்குமோ நாடுதான் இருக்குமோ? தமிழனை அடிச்சது பிழையெண்டிறதை கொஞ்சப் பேராவது ஏற்றுக்கொள்ளுகினமில்லே? நாங்கள் நடக்கிறதை புதினம் பாப்பம்... அப்ப வரட்டே" எண்டுகொண்டு வீட்டை வந்திட்டன்.




# மலையைக் கடந்து வந்த கரடி

**ஆலிஸ் மன்ரோ**

**தமிழில் இல. சுபத்ரா**

(கடந்த வார தொடர்ச்சி)

கனவில், சக ஊழியன் ஒருவனிடம் ஏதோ ஒரு கடிதத்தைக் காண்பிக்கிறான் க்ராண்ட். அவன் சமீபத்தில் அதிகம் சிந்தித்திராத ஒரு பெண்ணின் அறைத்தோழியிடம் இருந்து வந்திருந்த அது விழுமிய ரீதியானதாகவும் வெறுப்பாலானதாகவும் குறைகூறி அச்சுறுத்துவதாகவும் இருந்தது. மிக கண்ணியமாகச் சமீபத்தில் அவளிடமிருந்து விலகியிருந்த அவன் அதன்மூலம் பிரச்சினைகள் ஏதும் வருமென்று எண்ணியிருக்கவே இல்லை. ஆனால் அவள் உயிரை மாய்த்துக்கொள்ளத் துணிந்தது குறித்தெல்லாம் விலாவாரியாக அதில் எழுதப்பட்டிருந்தது.

சக ஊழியன் ஒரு நண்பனைப் போலத்தான் தோன்றினான். வீட்டிற்கு வந்தவுடன் கழுத்துப்பட்டையைக் கழற்றி எறிந்துவிட்டு வெளியேறி, தன் அலுவலகத்திற்கோ வகுப்பிற்கோ வரும் போதையூட்டும் இளம்பெண்ணுடன் எங்கோ ஒரு மெத்தையில் கிடந்தபடி கஞ்சாவையும் தூபத்தையும் நுகர்கிற கணவர்களில் ஒருவனாகத்தான் அவன் இருந்தான். ஆனால் இப்போது அவன் மாற்றிப் பேசினான்.

'நான் சிரிக்கவில்லை,' என்றான் அவன் க்ராண்டிடம். அவன் சிரிக்கிறான் என்றே க்ராண்ட் நினைக்கவில்லை.

'நானாக இருந்தால் ஃபியோனாவை இதற்குத் தயார்படுத்தத்தான் முயல்வேன்' என்றான் அவன்.

இதைக் கேட்டு ஃபியோனாவைக் காண மெடோலேக்கிற்குச் - பழைய மெடோலேக்கிற்கு- செல்கிற க்ராண்ட் தனது வகுப்பறைக்குள் நுழைகிறான். அவன் பாடத்தைத் தொடங்குவதற்காக எல்லோரும் அங்கே காத்திருக்கிறார்கள். உயரமான கடைசி வரிசையில் உணர்ச்சிகளற்ற முகத்துடன் கருப்பாடை அணிந்து துக்கம் அனுஷ்டிக்கிற தோற்றத்தில் சில பெண்கள் அமர்ந்திருந்தனர். கசப்பு மண்டும் தங்களது முறைப்பை அவனை விட்டு விலக்காத அவர்களில் யாருமே அவன் நடத்திய எதையும் பொருட்படுத்தவோ குறிப்பெடுக்கவோ இல்லை.

எதனாலும் பாதிக்கப்படாதவளாக ஃபியோனா முதல் வரிசையில் அமர்ந்திருந்தாள். 'அடச்சே,'என்ற அவள், 'இந்த வயதுப் பெண்கள் எப்படித் தற்கொலை செய்துகொள்ளப் போகிறோம் என்பது பற்றித்தான் எப்போதும் பேசிக்கொண்டு திரிவார்கள்' என்றாள்.

கனவிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டவன் மாத்திரைகளை உண்டுவிட்டு எது உண்மை எது கனவு என்பதைப் பிரித்தறிய முயன்றான்.

ஒரு கடிதம் வரத்தான் செய்தது. அவனது அலுவலகக் கதவில் 'எலி' என்று எழுதப்பட்ட போது, தன்மேல் ஒரு பெண் தீவீரமாக மோகம் கொண்டிருந்ததாக அவன் ஃபியோனாவிடம் கூறினான். கிட்டத்தட்ட கனவில் சொன்னதைப்போன்ற ஏதோ ஒன்றைத்தான் அவள் சொன்னாள். சக ஊழியன் இவ்விஷயத்தில் இருந்திருக்கவில்லை, யாரும் தற்கொலை செய்துகொள்ளவும் இல்லை. க்ராண்ட் அவமானப்படுத்தப்படவும் இல்லை. இரண்டாண்டுகளுக்குப் பிறகு அது நிகழ்ந்திருந்தால் எதிர்கொண்டிருக்கக் கூடியதைவிட சுலபமாகவே பிரச்சினைகள் தீர்ந்தன. என்றாலும் விஷயம் வெளியே பரவியது. கிறிஸ்துமஸ் கொண்டாட்டங்களுக்கு வெகு சிலரே இவர்களை அழைத்திருந்தனர். புத்தாண்டின் மாலையைத் தனியே கழித்தனர். மது அருந்திய க்ராண்ட், ஃபியோனாவிற்கு ஒரு புதிய வாழ்க்கையை உறுதியளித்தான். அதற்கான தேவை எதுவும் இருந்திருக்கவேயில்லை, கடவுள் புண்ணியத்தில் பாவமன்னிப்புக் கோருகிற தவறையெல்லாம் செய்துவிடவில்லை அவன்.

ஒரு பெண் பித்தனின் (கனவில் வந்த அந்தச் சக ஊழியன் அடைந்தவற்றுள் பாதி வெற்றியைக்கூட அடைந்திடாத க்ராண்ட் தன்னை அப்படித்தான் அழைத்துக்கொள்ள வேண்டுமாயின்) வாழ்வில் பெருந்தன்மைக்கோ தியாகத்திற்கோ இடம் இருப்பதாக இதுவரை எங்கேயுமே சொல்லப்படவில்லை. ஒரு பெண்ணின் கர்வத்தையும் பலவீனத்தையும் அங்கீகரிக்கும் பொருட்டு, உள்ளுக்குள் உணராத போதும் சற்றே கூடுதலான அன்பை - இலேசான ஈடுபாட்டை - க்ராண்ட் காட்டியிருக்கிறான்தான். எல்லாவற்றிற்கும் பிரதியுபகாரமாகச் சுயமரியாதையைக் காயப்படுத்தியதாகவும் சுரண்டியதாகவும் சிதைத்ததாகவும் இப்போது குற்றப்படுத்தப்படுகிறான். ஃபியோனாவிற்குத் துரோகமிழைத்தது உண்மைதான். எத்தனையோ பேர் தங்கள் மனைவியை விட்டுவிட்டுப் போனதுபோல இவனும் போயிருந்தால் சரியாக இருக்குமோ? அவன் ஒருபோதும் அப்படி நினைத்ததில்லை. அவன் ஃபியோனாவுடன் படுப்பதை ஒருபோதும் குறைத்துக்கொள்ளவே இல்லை. ஓர் இரவுகூட வீட்டிலிருந்து வெளியே தங்கியதில்லை. சான் ஃப்ரான்சிஸ்கோவிலோ மனிடோலின் தீவின் ஒரு குடிலிலோ வார இறுதியைக் கழிக்கும் பொருட்டு அவளிடம் நீண்ட கதைகளைச் சொல்லியதும் இல்லை. தொடர்ந்து ஆய்வுக்கட்டுரைகள் சமர்பித்து, குழுக்களில் பங்குபெற்று தன் தொழிலில் முன்னேறியவாறே இந்தப் போதைகளை அவன் இலாவகமாகக் கையாண்டான். வேலையையோ திருமணத்தையோ தூக்கி எறிந்துவிட்டு கிராமத்திற்குச் சென்று தச்சு வேலை செய்யவோ தேனீ வளர்க்கவோ அவன் ஒருபோதும் எண்ணியிருக்கவில்லை.

ஆனால் இறுதியில் அதுபோன்ற ஒன்றுதான் நடந்தேறியது. குறைவான ஓய்வூதியத்துடன் அவன் விருப்ப ஓய்வு பெற்றுக்கொண்டான். ஜார்ஜியன் விரிகுடாவிற்கு அருகில் உள்ள அந்தப் பெரிய வீட்டில் சில காலம் திகைப்பும் சிலகாலம் துறவு மனநிலையுமாக வசித்த ஃபியோனாவின் அப்பா இறந்தபிறகு அந்தப் பண்ணை வீடும் சொத்தும் அவளுக்கே வந்துசேர்ந்தன. அவர் பிறந்து வளர்ந்ததும் அங்கேதான்.

அது ஒரு புதிய வாழ்க்கை. ஃபியோனாவும் அவனும் அந்த வீட்டைச் செம்மைப்படுத்தினர். வயல்களின் ஊடாகப் பனிச்சறுக்க முடிந்தது. அதிகம் சகஜத்தன்மை கொண்டவர்கள் இல்லை எனினும் கொஞ்சம் கொஞ்சமாகச் சில நண்பர்களைக் கண்டடைந்தார்கள். மூச்சுமுட்ட வைக்கிற சல்லாபங்கள் இல்லை, இரவு விருந்துகளில் மேஜைக்குக் கீழே ஆண்களின் கால்சட்டைக்குள் நுழைகிற பெண்கால்கள் இல்லை. வலைவீசுகிற மனைவிகளும் இல்லை.

குற்ற உணர்வு நீங்கி நிதானமாக யோசித்தபோதுதான் சரியான நேரத்தில் இது நடந்துவிட்டதென்பதை க்ராண்டால் புரிந்துகொள்ள முடிந்தது. பெண்ணியவாதிகளும் துயருற்றிருந்த அந்தப் புத்திகெட்ட பெண்ணும் அவளது நண்பர்கள் என்று அறியப்பட்ட கோழைகளும் சரியான நேரத்தில் அவனை வெளியேற்றி இருக்கிறார்கள். இன்னும் இன்னும் மோசமாகிக்கொண்டிருந்த, ஃபியோனாவையே விலையாகத் தர நேர்ந்திருக்க வாய்ப்புள்ள ஒரு சூழலிலிருந்து அவர்கள் அவனை வெளியேற்றி இருந்தார்கள்.

மெடோலேக்கிற்குத் திரும்பிச் செல்ல வேண்டிய அந்த முதல்நாளில் க்ராண்ட் அதிகாலையிலேயே எழுந்துகொண்டான். புதிய பெண்களைச் சந்திக்கத் திட்டமிட்ட அந்தப் பழைய நாட்களில் உணர்ந்தது போலவே உள்ளுக்குள் பரவசமாக உணர்ந்தான். அது காமம் சார்ந்ததென அறுதியிட்டுவிட முடியாது (அந்தச் சந்திப்புகள் சகஜமாகியிருந்த போது அதில் அது மட்டும்தான் எஞ்சியிருந்தது). அதில் ஒரு கண்டுபிடிப்பிற்கான - கிட்டத்தட்ட ஒரு ஆன்மீக அறிதல் - எதிர்பார்ப்பு இருந்தது. கூச்சமும் பணிவும் எச்சரிக்கையும்கூட.

சாலையில் ஏராளமான பனி இருந்தது. ஆனால் பனிக்காலத்தின் தொடக்கத்தில் இருக்கிற கடினமான மின்னுகிற பனி உடைந்திருந்தது. சாம்பல் வானத்தின் கீழே குவியல் குவியலாகக் கிடந்த இந்தப் பனி குப்பை போல் தோற்றமளித்தது. மெடோலேக் நகருக்கு அருகே மலர் அங்காடி ஒன்றினைக் கண்டவன் ஒரு பெரிய பூங்கொத்தினை வாங்கிக்கொண்டான். இதற்குமுன் ஃபியோனாவிற்கு அவன் பூங்கொத்தே பரிசளித்ததில்லை. வேறு யாருக்குமே தந்ததில்லை. கேலிச்சித்திரங்களில் வரும் நம்பிக்கையற்ற ஒரு காதலன் போலவோ தவறிழைத்துவிட்ட ஒரு கணவன் போலவோ அவன் கட்டடத்திற்குள் நுழைந்தான்.

'அட, இவ்வளவு காலையிலேயே நார்சிஸஸ் பூக்களா! நீங்கள் நிறைய செலவு செய்திருக்க வேண்டும்' என்றாள் க்றிஸ்டி. அவனுக்கு முன்பாக முகப்புக்கூடத்தில் நடந்துசென்றவள் விளக்கை எரியச் செய்துவிட்டு ஜாடியைத் தேடினாள். மிகவும் பருத்திருந்த அந்த இளம்பெண் கூந்தல் தவிர்த்து மற்ற எதன் தோற்றம் குறித்தும் அக்கறை கொள்ளாதவள் போல் தோன்றினாள். பொன்நிறமான அது செழித்து அடர்ந்திருந்தது. சுவாரஸ்யமற்ற அந்த உடலுக்கும் முகத்துக்கும் மேலே, மதுவிடுதியில் காக்டெய்ல் பரிமாறுகிற அல்லது ஆடை கழற்றி நடனமாடுகிற பெண்ணிற்குரிய சிகையலங்காரம் போன்ற சொகுசுடன் பொதிந்து வைக்கப்பட்டிருந்தது அது.

'அங்கே' முகப்பறையின் தூரத்தில் கைகாட்டினாள் க்றிஸ்டி, 'கதவின் மேலேயே பெயர் எழுதப்பட்டிருக்கும்' என்றாள்.

அதே போலவே நீலப்பறவைகளால் அலங்கரிக்கப்பட்ட பெயர்ப் பலகையில் அது காணப்பட்டது. கதவைத்தட்ட வேண்டுமா என

யோசித்த அவன், கதவைத் தட்டிவிட்டு அதைத் திறந்து அவளது பெயர் சொல்லி அழைத்தான்.

அவள் அங்கே இல்லை. அலமாரி மூடியிருந்தது. படுக்கை கசங்கலின்றி இருந்தது. படுக்கைக்கு அருகிலுள்ள மேஜையிலும் கொஞ்சம் திசுத் தாள்கள் ஒரு டம்ளர் நீரையும் தவிர வேறொன்றுமில்லை. எந்தப் புகைப்படமோ சித்திரமோ புத்தகமோ பத்திரிகையோ இல்லை. அதையெல்லாம் அலமாரிக்குள் வைக்கவேண்டும் போல!

செவிலியின் மேஜைக்குத் திரும்பச் சென்றான். 'இல்லையா?' என வினவிய க்றிஸ்டியின் ஆச்சரியம் செயற்கையாகத் தோன்றியது. கையில் பூக்களுடன் தயங்கி நின்றான். 'சரி. சரி. நாம் அந்தப் பூங்கொத்தை இங்கே பொருத்தலாம்' என்றாள். பள்ளியின் முதல் நாளில் காணநேர்கிற ஒரு பின்தங்கிய குழந்தையைப் போல அவனை எண்ணியபடி பெருமூச்செறிந்தவாறே முகப்பறையைக் கடந்து பொதுவான சந்திப்பறை போன்ற விலாசமான கண்ணாடி அறைக்கு அவனை அழைத்துச் சென்றாள். சுவரையொட்டி சாய்வு நாற்காலிகளில் சிலர் அமர்ந்திருக்க, தரைவிரிப்புக்கு மேலே மையமாய்ப் போடப்பட்டிருந்த மேஜையைச் சுற்றி மற்றவர்கள் அமர்ந்திருந்தனர். யாருமே பார்ப்பதற்கு அவ்வளவு மோசமாக இல்லை. சக்கர நாற்காலி தேவைப்படும் அளவிற்கு உடல் நலிவுற்ற முதியவர்களாய் இருந்தபோதும் கண்ணியமாய் இருந்தனர். திரு. ஃபகூஹரைக் காண இவர்கள் வந்தபோது சில அதிர்ச்சியூட்டும் காட்சிகளைக் காண நேர்ந்தது. தாடி வளர்ந்த சில மூதாட்டிகள், அழுகிய பழம் போல வீங்கி வெளித்தள்ளிய கண் கொண்ட ஒருவன், தடுமாறுபவர்கள், தலை ஆடுபவர்கள், பைத்தியம்போல உளறுபவர்கள். ரொம்பவும் மோசமான நபர்களைக் களையெடுத்து விட்டது போன்ற தோற்றம் இப்போது.

'பார்த்தீர்களா?', மென்மையான குரலில் வினவினாள் க்றிஸ்டி, 'அமைதியாகச் சென்று அவளுக்கு ஹலோ மட்டும் சொல்லுங்கள். அதிர்ச்சியூட்டிவிட வேண்டாம். செல்லுங்கள்.'

சீட்டு விளையாட்டு நிகழ்ந்த மேஜைகளில் ஒன்றிற்கு நெருக்கமாக அமர்ந்திருந்த ஃபியோனாவின் பக்கவாட்டுத் தோற்றத்தை அவன் பார்த்தான். ஆனால் அவள் விளையாடவில்லை. அவளது முகம் சற்றே பூசினாற்போல் தெரிந்தது. இதற்கு முன்பு இல்லாததுபோல அவளது கன்னக்கதுப்பு வாயின் முனையை மறைத்திருந்தது. அவளுக்கு நெருக்கமாக அமர்ந்திருந்த ஆணின் விளையாட்டை அவள் பார்த்துக்கொண்டிருந்தாள். அவள் பார்க்கும் விதமாக அவன் சீட்டுகளைச் சாய்த்துப் பிடித்திருந்தான். மேஜைக்கு அருகே க்ராண்ட் சென்றபோது அவள் நிமிர்ந்து பார்த்தாள். மேஜையில் விளையாடிக்கொண்டிருந்த அனைவருமே, தொந்தரவு எதையும் அனுமதிக்க விரும்பாதவர்கள் போல, எரிச்சலுடன் நிமிர்ந்து பார்த்தனர். ஆனால் ஃபியோனா தனது வெட்கம் கலந்த கவிழ்ந்த அமைதியான வசீகரமிக்க புன்னகையை அவனுக்குத் தந்தாள். நாற்காலியைப் பின்னால் தள்ளி எழுந்து சுற்றி வந்தவள் விரலினை வாயில் அழுத்திக்கொண்டாள். 'ப்ரிட்ஜ் விளையாடுகிறார்கள்- மிகத் தீவிரமாக. அதில் வெறித்தனமாக இருக்கிறார்கள்.' அவனிடம் பேசியவாறே காஃபி மேஜைக்கு அழைத்து வந்தாள்.

என் கல்லூரி நாட்களில் இதே போல் நான் சில காலம் இருந்ததை நினைவுகூர முடிகிறது. நானும் என் நண்பர்களும் வகுப்பிற்கு மட்டம் போட்டு விட்டு பொது அறையில் அமர்ந்து புகைத்தபடி கொலைவெறியுடன் விளையாடுவோம்.

'நீங்கள் எதாவது சாப்பிடுகிறீர்களா? தேநீர் தரட்டுமா? இங்கே காஃபி அப்படி ஒன்றும் நன்றாயில்லை.'

க்ராண்ட் ஒருபோதும் தேநீர் அருந்தியதில்லை.

அவனால் அவளது இடையைச் சுற்றி அணைத்துக்கொள்ள முடியவில்லை. அவளது குரலிலும் சிரிப்பிலும் இருந்த ஏதோ ஒன்று - விளையாடிக்கொண்டிருந்தவர்களிடமிருந்தும் அவர்களது வெறுப்பிலிருந்தும் அவனைக் காத்து நிறுத்திய அந்த ஒன்று - அதை முடியாததாக்கியது.

'நான் உனக்குக் கொஞ்சம் பூக்கள் கொணர்ந்தேன்' என்றான். 'அவை உனது அறையைப் பிரகாசமாக்கக்கூடும் என நினைத்தேன். ஆனால் நான் சென்றபோது நீ அங்கே இல்லை.'

'ம்ம், இல்லை,' என்ற அவள், 'நான் இங்கே இருந்தேன்' எனக் கூறியபடி மேஜையை நோக்கித் திரும்பினாள்.

'உனக்கு ஒரு புது நண்பன் கிடைத்திருக்கிறான்' என்றபடி அவள் அருகில் அமர்ந்திருந்த மனிதனை நோக்கித் தலையாட்டினான் க்ராண்ட். இப்படிச் சொல்வதற்கும் அந்த மனிதன் நிமிர்வதற்கும் சரியாக இருந்தது. அவன் நிமிர்ந்து நோக்குவதை உணர்ந்ததாலோ க்ராண்ட்டின் வார்த்தைகளாலோ ஃபியானோவும் அவனைத் திரும்பி நோக்கினாள்.

'அது ஆப்ரே' என்றாள். 'சுவாரஸ்யம் என்னவென்றால் அவனைப் பல வருடங்களுக்கு முன்பே எனக்குத் தெரியும். என் தாத்தா இரும்புப் பொருட்கள் வாங்குகிற கடையில் அவன் வேலை பார்த்தான். நானும் அவனும் எப்போதும் ஒருவரை ஒருவர் கிண்டல் செய்தபடியே இருப்போம். ஆனால் என்னிடம் நெருங்குவதற்கான தைரியத்தை கடைசி வரை அவன் அடையவே இல்லை. கடைசி வார இறுதியில்தான் அவன் என்னைப் பந்து விளையாட்டிற்கு கூட்டிச் சென்றான். ஆனால் அது முடிவதற்குள்ளாகவே என்னை அழைத்துச் செல்வதற்கு என் தாத்தா வந்துவிட்டார். என் தாத்தா பாட்டியைக் காண்பதற்காக நான் கோடை விடுமுறையில் அங்கே சென்றிருந்தேன்- அவர்கள் பண்ணை வீட்டில் வசித்தார்கள்.'

'பியோனா, அவர்கள் எங்கே வசித்தார்கள் என்பது எனக்குத் தெரியும். நாம் அங்கேதான் வசிக்கிறோம், வசித்தோம்.'

'நிஜமாகவா?' என வினவியளின் கவனம் இங்கேயே இல்லை. தூரத்தில் சீட்டாடுகிற அவன் இவளுக்கு அதிகாரமிக்க கண் ஜாடைகளை அனுப்பிக்கொண்டிருந்தான்.

> **சக்கர நாற்காலியை எடுப்பதற்காக அவள் காருக்குள் குனிந்த போது அவளது சட்டையின் பின்நுனி அகலத் திறந்தது. ஒடுங்கிய வயிறும் அகன்ற புட்டமும் அவனது மனக்கண்ணில் தோன்றின**

அவனுக்கும் க்ராண்டின் வயதோ அல்லது கொஞ்சம் கூடுதலோதான் இருக்கும். முரடான வெண்முடிக்கற்றை நெற்றியில் விழுந்திருக்க அவனது தோல் சொரசொரப்பாகவும் வெளிறியும் இருந்தது. வெண்மஞ்சள் நிறம் கொண்ட அது சிறுவனின் பழைய சுருக்கம் விழுந்த கையுறையைப்போல் இருந்தது. நீண்ட அவனது முகம் கம்பீரமாகவும் துக்கம் படிந்ததாகவும் இருக்க, வலிமைமிக்க ஊக்கமிழந்த ஒரு முதிய குதிரையின் சாயல் இருந்தது அவனிடம். ஆனால் ஃபியோனாவின் விஷயத்தில் அவன் ஊக்கம் இழந்ததாகத் தெரியவில்லை.

புதிதாய்ப் பூரித்திருந்த முகத்தில் வெட்கம் படிய, 'நான் போய்விடுவதுதான் நல்லது" என்றாள் அவள். 'நான் அங்கே அமராமல் அவன் விளையாட முடியாதென நினைக்கிறான். இது வேடிக்கையானது, எனக்கு இப்போது அந்த விளையாட்டே தெரியாது. நான் இப்போது கிளம்பினால் நீங்கள் சமாளித்துக் கொள்வீர்கள்தானே? இது எல்லாமே உங்களுக்கு வித்தியாசமாகத் தோன்றலாம், ஆனால் எவ்வளவு சீக்கிரம் நாம் இதற்குப் பழகிவிடுகிறோம் என்பதை அறியும் போது நீங்கள் ஆச்சரியமடைந்துவிடுவீர்கள். ஒவ்வொருவரைப் பற்றியும் நீங்கள் அறிந்துகொள்வீர்கள். ஒரு சிலர் தங்களை மூடிமறைத்துக் கொள்வதுண்டுதான் - நாம் எல்லோரையுமே நம்மைப் பற்றி அறிந்துகொள்ள வேண்டுமென எதிர்பார்க்க முடியாதில்லையா?'

தன் நாற்காலிக்குள் மீண்டும் நுழைந்து கொண்டவள் ஆப்ரேயின் காதில் ஏதோ சொன்னாள். அவன் அவளது விரல்களை தன் கரத்தின் பின்புறத்தால் தட்டினான்.

க்றிஸ்டியைத் தேடிச்சென்ற க்ராண்ட் முகப்பறையில் அவளைப் பார்த்தான். ஆப்பிள், திராட்சை, பழரசங்கள் நிறைந்த குடுவைகளை ஒரு வண்டியில் வைத்து தள்ளிக்கொண்டிருந்தாள் அவள்.

'வேறென்ன?' என்றாள் அவள்.

'நான் யார் என்பதாவது அவளுக்குத் தெரியுமா?' என்றான். அவனால் அதுகுறித்து முடிவுக்கு வரவே இயலவில்லை. அவள் விளையாட்டிற்காக அப்படிச் செய்திருக்கலாம். அப்படிச் செய்யக்கூடியவள்தான். புதிதாக அங்கே தங்குவதற்கு வந்தவர்களில் ஒருவன் இவன் என்பதுபோல இறுதியாக அவள் பேசிய பாசாங்கு அவளைக் காட்டிக்கொடுத்துவிட்டது. அது ஒருவேளை பாசாங்காக இருந்தால்..

'நீங்கள் ஒரு தவறான தருணத்தில் அவளைச் சந்தித்துவிட்டீர்கள், அவ்வளவுதான். அவள் விளையாட்டில் இருந்தாள்ள என்றாள் க்றிஸ்டி.

'அவள் விளையாடவில்லையே?'

'ஆனால் அவளது நண்பன் விளையாடினானே? ஆப்ரே.'

'சரி.. யார் இந்த ஆப்ரே?'

'அதுதான் அவன். ஆப்ரே. அவளது நண்பன். பழரசம் அருந்துகிறீர்களா?'

வேண்டாம் எனத் தலையாட்டினான் க்ராண்ட்.

'பாருங்கள், இதுபோன்ற உறவுகளை அவர்கள் இங்கே பெறத்தான் செய்கிறார்கள். சில காலங்களுக்கு அது நீடிக்கவும் செய்கிறது. 'சிறந்த நண்பன்' என்பது போல. இதுவும் ஒரு காலம்தான்.'

'அவள் நிஜமாகவே என்னை மறந்திருக்கலாம் என்று சொல்கிறீர்களா?'

'இருக்கலாம். இன்று அப்படியிருக்கலாம். நாளை ஒருவேளை மாறலாம், நமக்குத் தெரியாதில்லையா? தொடர்ந்து இங்கே வந்து செல்லும்போது நீங்களே அறிந்துகொள்வீர்கள். இதை அவ்வளவு தீவிரமாக எடுத்துக்கொள்ளத் தேவையில்லை என்பதை அறிவீர்கள். கொஞ்சம் கொஞ்சமாக இதைப் புரிந்துகொள்ள கற்றுக்கொள்ளுங்கள்.'

கொஞ்சம் கொஞ்சமாக. ஆனால் விஷயங்களில் அப்படி எந்த மாற்றமும் ஏற்படவுமில்லை, அதை ஏற்றுக்கொள்ள அவன் பழகவுமில்லை. ஃபியோனாதான் இவனைப் பழகிக்கொண்டதாகத் தோன்றியது, ஆனால் தனிப்பட்ட ஆர்வம்கொண்டு தொடர்ந்து அவளைப் பார்க்க வருகிற ஒரு பார்வையாளனாக மட்டுமே. அவளது பழங்கால நடத்தை விதிகளின்படி, தவிர்க்க வேண்டிய தொந்தரவென்றும் அவள் இவனைக் கருதலாம். அவள் அவனிடம் ஒருவகையான ஒட்டுதலற்ற, வெளியாளுடனான அன்பையே வெளிப்படுத்தினாள். அது அவனை அவளிடம் அந்த முக்கியமான வெளிப்படையான கேள்வியைக் கேட்பதிலிருந்து தடுத்து வைத்தது. கிட்டத்தட்ட ஐம்பது ஆண்டுகளாக இவன்தான் அவளது கணவன் என்பது அவளுக்கு நினைவிருக்கிறதா? அது போன்ற ஒரு கேள்வி அவளைத் தர்மசங்கடப்படுத்தும் என அவன் எண்ணினான் - அவளை எண்ணி அல்ல, அவனை எண்ணி.

களைக்கொல்லிகளையும் 'அதுபோன்ற வேறு அனைத்துப் பொருட்களையும்' விவசாயிகளுக்கு விற்கிற ஒரு பிரதிநிதியாக ஆப்ரே பணியாற்றியதாக க்றிஸ்டி க்ராண்டிடம் கூறியிருந்தாள். முதுமையோ ஓய்வோ அடைவதற்கும் முன்பாகவே அவன் ஒரு வித்தியாசமான சிக்கலை எதிர்கொள்ள வேண்டியதாகிவிட்டது.

'அவனது மனைவிதான் அவனைப் பார்த்துக் கொள்கிறாள். ஒரு சிறிய ஓய்வின் பொருட்டு தற்காலிகமாக அவனை இங்கே விட்டிருக்கிறாள். இப்போது அவளது சகோதரிக்காக ஃப்ளோரிடாவிற்குச் சென்றிருக்கிறாள். உங்களுக்குத் தெரியுமா, அவள் ரொம்பவும் சிரமப்பட்டுவிட்டாள். அவனைப் போன்ற ஒருவனுக்கு இப்படி ஒரு பிரச்சினை வருமென யாரும் நினைத்திருக்கவே மாட்டார்கள் - விடுமுறைக்காக வெளியே சென்றிருந்தபோது எதோ ஒரு பூச்சியினால் கடும் காய்ச்சல் தொற்றியிருக்கிறது. பிறகு அவன் கோமா நிலைக்குச்சென்று இன்று இருக்கிற நிலையில் விட்டிருக்கிறது.'

பெரும்பாலான பின்மதியங்களில் இந்த ஜோடியைச் சீட்டாட்ட மேஜையில் பார்க்க முடியும். ஆப்ரே தடித்த விரல்களுள்ள பெரிய கைகளைக் கொண்டிருந்தான். சீட்டுகளைக் கையாளுவதில் அவனுக்குச் சிரமம் இருந்தது. அவனுக்காகச் சீட்டுகளைக் கலைத்துத் தந்த ஃபியோனா அவ

னது விரல்களிலிருந்து அது நழுவுகின்ற சமயங்களில் சட்டெனச் செயல்பட்டு அதை நேராக்கினாள். தூரத்திலிருந்து அவளது துள்ளலான நகர்வுகளையும் புன்னகை ததும்பும் மன்னிப்புக் கோரல்களையும் க்ராண்ட் பார்த்தபடியிருப்பான். அவளது முடிக்கற்றை அவனது முகத்தில் படும்போது கணவனுக்குரிய முகச்சுழிப்பை ஆப்ரே வெளிப்படுத்துவதையும் அவன் காண முடிந்தது. அவள் நெருக்கமாய் இருக்கிற தருணங்களில் ஆப்ரே அவளைத் தவிர்க்க முயன்றான். ஆனால் க்ராண்ட் அங்கே வருவதற்கான உரிமையை ஒப்புக்கொள்வதன் அடையாளமாக அவள் அவனை நோக்கிப் புன்னகைப்பதையோ நாற்காலியைத் தள்ளி எழுந்துவந்து தேநீர் தருவதையோ பார்க்கும்போது அவனது முகம் சோகத்தையும் திகைப்பையும் அணிந்துகொள்ளும். சீட்டுகளைக் கையிலிருந்து நழுவவிட்டு ஆட்டத்தைக் கெடுத்துவிடுவான். உடனே ஃபியோனா பரபரப்பாகி அதையெல்லாம் சரிசெய்ய வேண்டி வந்துவிடும்.

சீட்டாட்ட மேஜையில் இல்லாத சமயங்களில், ஃபியோனாவும் ஆப்ரேயும் முகப்புக்கூடத்தில் நடந்துகொண்டிருப்பதைக் காண முடியும். அவனது ஒரு கை, பதிக்கப்பட்டுள்ள நீள்கம்பியைப் பற்றியிருக்க, மறுகை ஃபியோனாவின் தோளையோ கரத்தையோ பிடித்திருக்கும். கட்டடத்தின் ஒரு புறம் இருக்கும் கண்ணாடி அறையிலிருந்து மறு புறம் இருக்கும் தொலைக்காட்சி அறைக்குச் செல்வதற்கெல்லாம் சக்கர நாற்காலி இன்னமும் தேவைப்பட்டதென்றாலும், ஃபியோனா இப்படி அவனைச் சக்கர நாற்காலியில் இருந்து சற்று விடுவித்ததை செவிலியர்கள் பெரிய அதிசயம் என்றே குறிப்பிட்டனர்.

கண்ணாடி அறையில் எப்போதுமே இந்த ஜோடி வெப்பமண்டலத் தோற்றம் கொண்ட அடர்த்தியான பசுஞ்செடிகளின் மத்தியில்தான் அமர்ந்திருக்கும், பந்தலுக்குக் கீழேயும்கூட. எப்போதேனும் க்ராண்ட் பசுஞ்செடிகளுக்கு மறுபுறம் நின்று அவர்கள் பேசுவதைக் கவனிப்பதுண்டு. இலைகளின் சலசலப்பும் தெறிக்கின்ற நீரோசையும் கலந்து ஃபியோனாவின் மென்மையான குரலும் சிரிப்பும் ஒலிக்கும். பிறகு சப்தமான சிரிப்பும். முன்பிருந்தது போல இப்போது ஆப்ரேவின் குரல் ஒலிப்பதில்லை என்றபோதும் அவனால் பேச முடிந்தது. இப்போது அவன் ஏதோ சொல்வதுபோலத் தெரிகிறது. தடிமனான ஈரசைச் சொற்கள். கவனம், என் அன்பே, அவன் இங்கிருக்கிறான்.



புதன்கிழமைகளிலும் சனிக்கிழமைகளிலும் மட்டும் அவளைப் பார்க்கச் செல்லும்படி தன்னை க்ராண்ட் சிரமப்பட்டு பழக்கிக்கொண்டான். சனிக்கிழமைகளில் விடுமுறை நாளின் சலசலப்பும் பரபரப்பும் நிறைந்திருக்கும். கும்பல் கும்பலாகக் குடும்பங்கள் வந்தன. பெரும்பாலும் அம்மாக்கள்தான் எல்லாவற்றிற்கும் பொறுப்பு; அவர்கள்தான் தொடர்ச்சியாக உரையாடிக்கொண்டிருப்பார்கள். ஆண்கள் பயந்ததுபோலும் பதின்வயதினர் அடக்கப்பட்டது போலவும் காட்சியளித்தனர். எந்தக் குழந்தைகளோ பேரக்குழந்தைகளோ ஆப்ரேவைக் காண வந்ததாகத் தெரியவில்லை. சீட்டாட்ட மேஜைகளை ஐஸ்கிரீம் கொண்டாட்டங்கள் எடுத்துக்கொள்வதால் அவர்கள் சனிக்கிழமை அங்கு வருவதில்லை. கண்ணாடி அறை வேறெதையும்விட அவர்கள் இருவரது நெருங்கிய உரையாடல்களுக்கென பெயர் பெற்றிருந்தது. இப்போது அது மூடப்பட்டிருக்கும் ஃபியோனாவின் அறைக்குள் நிகழ்ந்துகொண்டிருக்கலாம். பூட்டியிருந்த அதன் வெளியேயே சற்று நேரம் நின்று அதில் ஒட்டப்பட்டிருந்த டிஸ்னி-பாணி பெயர்ப்பலகையை ஆத்திரம் நிறைந்த வெறுப்புடன் நோக்கிக்கொண்டிருந்த க்ராண்டால் அதைத் தட்டாமல் இருக்க முடியவில்லை.

அவர்கள் ஆப்ரேயின் அறையில் இருக்கலாம். ஆனால் அது எங்கே இருக்கிறதென்பது அவனுக்குத் தெரியவில்லை. மேலும் மேலும் அந்த இடத்தை அறிந்துகொள்ள முயன்று மேலும் மேலும் தாழ்வாரங்களையும் சாய்தளங்களையும் இருக்கைகளையும் அவன் அறிந்துகொண்டாலும் இன்னமும் அவற்றுள் தொலைந்துபோக வாய்ப்புள்ளவனாகத்தான் இருந்தான். ஒரு சனிக்கிழமையில் ஒரு ஜன்னலின் வழியாக ஃபியோனாவைப் பார்த்தபோது - அது ஃபியோனாவாகத்தான் இருக்கவேண்டும் - பனி அகற்றப்பட்ட ஒரு பாதையில் அவள் ஆப்ரேவைச் சக்கர நாற்காலியில் வைத்து நகர்த்திக்கொண்டிருந்தாள். ஊரில் பல்பொருள் அங்காடியில் அவன் பார்க்கிற பெண்கள் போல, மட்டமான ஒரு கம்பளித் தொப்பியும் நீல, ஊதா சுருள்களால் அலங்கரிக்கப்பட்ட மேலங்கியும் அணிந்திருந்தாள். ஒரே அளவுடைய பெண்களது ஆடைகளைச் சரியாகப் பிரித்துத் தருவதில் அவர்கள் கவனம் செலுத்தியிருக்காமல் இருக்கக்கூடும், அந்தப் பெண்களுக்கும் அவர்களது ஆடைகள் நினைவில் இருக்கப் போவதில்லையே! அவர்கள் அவளது கூந்தலையும் கத்தரித்திருந்தார்கள். தேவதை போன்ற அவளது ஒளிவட்டமே நீங்கியிருந்தது.

வழக்கம்போல் சீட்டாட்டங்கள் நிகழ்ந்தபடியும் கைவினைப் பொருட்கள் அறையில் பெண்கள் பட்டுப்பூக்களையும் அலங்கார பொம்மைகளையும் உருவாக்கிக்கொண்டுமிருந்த ஒரு வழக்கமான புதன்கிழமையில் ஆப்ரேயையும் ஃபியோனாவையும் அவன் சந்தித்தான். தன் மனைவியுடனான சுருக்கமான நட்பார்ந்த பித்துப்பிடிக்கும் உரையாடலை அவன் மேற்கொள்ள வாய்த்தது - 'உனது முடியை ஏன் அவர்கள் வெட்டிவிட்டார்கள்?' என அவன் அவளிடம் கேட்டான்.

தலைமேல் கைவைத்து அதைச் சோதித்த ஃபியோனா, 'ஏன்? நான் அதற்கு வருந்தவேயில்லை' என்றாள்.

முதன்முதலில் க்ராண்ட் ஆங்லோ-சாக்ஸன் இலக்கியமும் ஆங்கில இலக்கியமும் கற்பித்தபோது வழக்கமான மாணவர்களே வகுப்பிற்கு வந்தனர். ஆனால் சில வருடங்களுக்குப் பிறகு அவனால் ஒரு மாற்றத்தை உணர முடிந்தது. திருமணமான பெண்கள் கல்லூரிக்குத் திரும்பச் செல்ல ஆரம்பித்தனர். ஒரு வேலைக்கோ அல்லது இப்போதிருப்பதைவிட நல்ல வேலைக்கோ தங்களைத் தகுதிப்படுத்திக் கொள்வதற்காக இல்லை, வழக்கமான வீட்டு வேலைகளுக்கும் பொழுதுபோக்கிற்கும் மாற்றாக இன்னும் ஆர்வமூட்டும் எதையேனும் சிந்திப்பதற்கு வேண்டித்தான் அது. அவர்களது வாழ்வை வளப்படுத்திக் கொள்வதற்காக. அப்பாடத்தை அவர்களுக்குக் கற்பித்த ஆசிரியர்களையும் அது இயல்பாகவே உள்ளடக்கிக் கொண்டது. தினந்தோறும் அவர்கள் சமைத்துப்போட்டுப் படுக்கையைப் பகிர்ந்துகொண்ட ஆண்களைவிட இந்த ஆண்கள் புதிதானவர்களாகவும் விரும்பத்தக்கவர்களாகவும் தோன்றினர்.

க்ராண்டின் பாடத்தைத் தேர்ந்தெடுத்தவர்கள் ஏற்கெனவே ஸ்காண்டிநேவியன் இலக்கியத்தில் அறிமுகம் உடையவர்களாகவோ, வேக்னர் அல்லது வரலாற்று நூல்கள் மூலமாக நார்ஸ் புராணத்தை அறிந்தவர்களாகவோ இருக்கலாம். அவன் செல்டிக் மொழியைக் கற்பிப்பதாக எண்ணியவர்களும் உண்டு, அவர்களுக்கு செல்டிக்கைச் சார்ந்த எல்லாமுமே ஏதோ ஒரு மர்மமான கவர்ச்சியை அளித்தன. அப்படிப்பட்டவர்களிடம் நேர்மையாகவே அவன் கூறிவிடுவான்.

'அழகான மொழியொன்றைக் கற்க வேண்டுமென நினைத்தால் ஸ்பானிஷ் கற்றுக்கொள்ளுங்கள். மெக்ஸிகோவிற்குச் செல்லும்போது அது உங்களுக்கு உபயோகப்படும்.'

சிலர் அவனது எச்சரிக்கையை ஏற்றுக்கொண்டு வெளியேறிவிட்டனர். வேறுசில பெண்களோ அவனது குரலின் கட்டாயப்படுத்தலைத் தனிப்பட்ட வகையில் தீவிரமாக எடுத்துக்கொண்டு மிகத் தீவிரமாக உழைத்து, அவனது அலுவலகத்திற்குள்ளும் திருப்தியான ஒழுங்குபடுத்தப்பட்ட வாழ்க்கைக்குள்ளும் தங்களது முதிர்ச்சியால் விளைந்த ஆச்சரியமூட்டும் இணக்கத்தின் மலர்தலையும் ஒப்புதலுக்கான நடுங்கும் நம்பிக்கையையும் கொணர்ந்தனர்.

ஜாக்வி ஆடம்ஸ் என்கிற ஒரு பெண்ணை அவன் தேர்ந்தெடுத்தான். ஃபியோனாவிற்கு எதிர்ப்பதமாக அவள் இருந்தாள் - குட்டையாக, குண்டாக, கரிய கண்களுடன், உணர்ச்சிமிக்கவளாக. முரணாக, முன்பின் அறியாதவளும்கூட. அவளது கணவனுக்குப் பணிமாறுதல் ஆகும்வரை ஓராண்டிற்கு இந்தத் தொடர்பு நீடித்தது. அவளது காரில் அவர்கள் விடைபெற்றுக்கொண்டபோது கட்டுப்படுத்த முடியாமல் ஜன்னி வந்ததுபோலக் குலுங்கி அழுதாள் அவள். அவனுக்குச் சிலமுறை கடிதங்களும் எழுதினாள். ஆனால் அவை உணர்ச்சிமிக்கவையாகத் தோன்றியதால் எப்படி பதில் எழுதுவதென அவனுக்குத் தெரியவில்லை. பதில் எழுதுவதற்கான காலத்தை அவன் நழுவவிட்டுக்கொண்டே வந்தபோது எதிர்பாரா மாயம்போல, ஜாக்விக்கு மகள் வயது இருக்கக் கூடிய ஒரு பெண்ணுடன் அவனுக்குத் தொடர்பு ஏற்பட்டது.

அவன் ஜாக்வியுடன் ஆர்வமாக இருந்தபோது கிறுகிறுக்கும்படியான ஒரு மாற்றம் நிகழ்ந்திருந்தது. நீண்ட கூந்தலுடைய, செருப்பணிந்த பெண்கள் அவன் அலுவலகத்திற்குள் நுழைந்து உடலுறவுக்குத் தயாரென வெளிப்படையாக அறிவித்தனர். ஜாக்வியுடன் பழகும்போது தேவைப்பட்ட கவனமான முன்னெடுப்புகளும் மென்மையான உணர்வுகளுமெல்லாம் மலையேறியிருந்தன. எல்லோரையும் போலவே அவனையும் ஒரு சூறாவளி தாக்கியது. உணர்ச்சிமயமான காட்சி அரங்கேற்றங்களும் அவதூறுகளும் வெடித்துக் கிளம்பின, ஆனால் ஒருவகையில் அதெல்லாம் நல்லதாகத்தான் போயிற்று. தண்டனைகள் வழங்கப்பட்டன, வேலையிலிருந்து நீக்கப்பட்டனர். வேலையிழந்தவர்கள் அதைவிடச் சிறிய, கூடுதல் சகிப்புத்தன்மை கொண்ட கல்லூரிகளிலோ தனியார் கற்பித்தல் மையங்களிலோ பணியில் சேர்ந்தனர். இதனால் விட்டுச்செல்லப்பட்ட அவர்களது மனைவியர் அதிர்ச்சியிலிருந்து மீண்டு, தங்களது கணவர்களை மயக்கிய இளம்பெண்களின் ஆடையையும் காமம் சார்ந்த அலட்சிய மனோபாவத்தையும் அணிந்து கொண்டனர். கணித்துவிட முடிகிறவையாய் இருந்த அலுவலகக் கொண்டாட்டங்கள் இரகசியச் சுரங்கங்களாய் ஆகின. ஸ்பானிஷ் ஃப்ளூ போன்ற ஒரு பெருந்தொற்று பரவியது. இம்முறை தொற்றினால் பாதிக்கப்படவே பலரும் விரும்பினர். பதினாறிலிருந்து அறுபது வயதிற்கிடையிலான வெகுசிலரே மீந்திருக்க விரும்பினர்.

அது கொஞ்சம் மிகைப்படுத்தல் என்பது உண்மைதான். ஃபியோனாவிற்கு விருப்பம் இருந்தது. க்ராண்டும் அதிக உணர்ச்சிவயப்படவில்லை. வாழ்வின் நலன் சார்ந்து ஒரு மாபெரும் முன்னேற்றம் நிகழ்ந்திருப்பதாக அவன் உணர்ந்தான். பன்னிரண்டு வயதிற்குப் பின்பு ஒருபோதும் இல்லாதவாறு சற்றே சதை போட்டிருப்பதாக உணர்ந்தான். ஒரே நேரத்தில் இரண்டு படிகள் ஏறினான். அலுவலக ஜன்னலூடாகத் தெரிந்த மேகங்களுக்கிடையேயான போட்டியை, பனிக்கால சூரிய அஸ்தமனத்தை, அண்டை வீட்டாரின் வரவேற்பறை, திரைச்சீலைகளுக்கிடையே ஒளிரும் பழமையான விளக்கின் ஒளியினை, மாலையில் பனிச்சறுக்கிய மலையிலிருந்து வீடு செல்ல விரும்பாமல் குழந்தைகளிடும் கூச்சலைப் புதிதாக இரசித்தான். அடுத்த கோடையில் அவன் பூக்களின் பெயர்களைக் கற்றுக்கொண்டான். தனக்கு மரணதண்டனை அளித்த ராஜா எரிக் ஃப்லடேக்ஸின் மீது கவிஞன் ஒருவன் பாடிய கம்பீரமும் கோரமுமான ஹேவ்யுலேஸ்ன் (H'FUDLAUSN) பாடலை வகுப்பறையில் ஒப்புவித்தான். அவனது, குரலற்ற மாமியார்தான் அவனுக்கு அதனைப் பயிற்றுவித்திருந்தாள் (அவளுக்குத் தொண்டையில் புற்று இருந்தது).

ஐஸ்லாண்டிக் மொழியை ஃபியோனா ஒருபோதும் கற்றுக்கொள்ளவேயில்லை, அம்மொழியில் இருந்த -க்ராண்ட் பயிற்றுவித்த ஆய்வுசெய்த - கதைகளை ஒருபோதும் அவள் மதித்ததுமில்லை. அதன் நாயகர்களை அவள் 'முதிய ஞ்சால்' என்றோ 'பழைய ஸ்னோர்ரி' என்றோ அழைத்தாள். ஆனால் கடந்த சில ஆண்டுகளில் அவள் இந்த நாட்டின் மீது கொஞ்சம் ஆர்வம்கொண்டு சுற்றுலாக் கையேடுகளைப் பார்க்க ஆரம்பித்தாள். வில்லியம் மோரிஸ், ஆடன் போன்றோரின் பயணங்களைப் பற்றி வாசித்தாள். அங்கு செல்லவெல்லாம் அவள் திட்டமிடவில்லை. நாம் அறிந்த, விரும்பிய, ஏங்கிய ஆனால் சென்று பார்க்க முடியாத ஏதேனும் ஒரு இடம் அங்கு

இருக்கலாம் என்றாள்.

என்றாலும் அடுத்தமுறை மெடோலேக்கிற்குச் சென்ற போது ஐஸ்லாந்திற்குச் சென்ற ஒரு பெண் பிரயாணியால் வரையப்பட்ட பத்தொன்பதாம் நூற்றாண்டுப் புத்தகத்தை ஃபியோனாவிற்காக எடுத்துச் சென்றான். அது ஒரு புதன்கிழமை. சீட்டாட்ட மேஜைக்கு அவளைக் காணச் சென்ற போது அவள் அங்கே இல்லை.

'அவள் அங்கு இல்லை. அவளுக்கு உடல்நலமில்லை' என்று அவனை அழைத்தாள் ஒரு பெண். அவளது குரல் சுய பிரக்ஞை மிகுந்ததாகவும், இவன் அவளை அறியாவிட்டாலும் அவன் இவளை அறிவாள் என்கிற பரவசம் மிகுந்ததாகவும் ஒலித்தது. ஃபியோனாவைப் பற்றி, ஃபியோனாவின் வாழ்க்கை பற்றி இவன் அறிந்ததைவிட அதிகமாக அறிந்திருக்கிறோம் என்பதனால் வந்த மகிழ்வாகவும் அது இருக்கலாம்.

'அவனும் இங்கு இல்லை' என்றாள் கூடுதலாக.

அவன் க்றிஸ்டியைத் தேடிச் சென்றபோது அவளுக்கு இவனிடம் உரையாட நேரம் இருக்கவில்லை. முதன்முதலாக வந்திருப்பது போல் தோன்றிய, அழுதுகொண்டிருந்த ஒரு பெண்ணிடம் அவள் பேசிக்கொண்டிருந்தாள்.

ஃபியோனாவைப் பற்றி அவன் வினவியபோது, 'பெரிதாக ஒன்றுமில்லை' என்றாள். 'அவள் இன்றைய நாளை படுக்கையில் கழிக்கிறாள். கொஞ்சம் மனமுடைந்திருக்கிறாள்.'

ஃபியோனா படுக்கையில்தான் நேராக அமர்ந்திருந்தாள். இதற்குமுன் இந்த அறைக்கு வந்த சமயத்தில் இது இப்படி உயர்த்த முடிகிற ஒரு படுக்கை என்பதை அவன் கவனித்திருக்கவில்லை. கழுத்து வரை மூடிய அங்கி ஒன்றை அணிந்திருந்த அவளது முகம் எதோ மாவு பூசியதுபோல வெளிறி இருந்தது.

அருகில் சக்கர நாற்காலியில் எவ்வளவு முடியுமோ அவ்வளவு நெருக்கமாக அமர்ந்திருந்தான் ஆப்ரே. வழக்கமாக அவன் அணிகிற அசுவாரசியமான சட்டையைப் போலன்றி ஒரு மேலங்கியும் கழுத்துப்பட்டையும் அணிந்திருந்தான். வசீகரமான அவனது நூல்தொப்பி படுக்கையில் இருந்தது. எங்கோ ஒரு முக்கியமான காரியத்திற்காகச் சென்று வந்ததைப் போலத் தோன்றினான் அவன்.

அது என்னவாயினும், அவன் அதனால் மிகவும் சோர்ந்திருப்பதாகத் தோன்றியது. அவனது முகமும் துக்கம் பூண்டிருந்தது. துக்கம் மண்டிய முகத்துடன் நிமிர்ந்து அவனைப் பார்த்த அவர்களது முகத்தில், வந்திருப்பது அவனென்பதைப் பார்த்ததில் ஒரு ஆசுவாசம் படர்ந்தது. அவர்கள் நினைத்த ஆள் இல்லை அவன். ஒருவரது கரத்தை ஒருவர் பற்றியிருந்த அவர்கள் அதை விடுவித்துக்கொள்ளவில்லை.

மெத்தையிலிருக்கும் தொப்பி. மேலங்கியும் கழுத்துப்பட்டையும்.

ஆப்ரே எங்கேயும் சென்று வந்திருக்கவில்லை. அவன் எங்கே சென்று வந்தான் அல்லது யாரைப் பார்த்து வந்தான் என்பதல்ல விஷயம். அவன் எங்கே போகிறான் என்பதுதான் விஷயம்.

ஃபியோனாவின் மற்றொரு கரத்தின் அருகே படுக்கையில் புத்தகத்தை வைத்தான் க்ராண்ட்.

'இது ஐஸ்லாந்தைப் பற்றியது. இதைப் பார்க்க உனக்குப் பிடிக்கும் என நினைத்தேன்' என்றான்.

'ஏன், நன்றி,' என்ற ஃபியோனா புத்தகத்தைப் பார்க்கவில்லை.

'ஐஸ்லாந்து' என்றான் அவன்.

அவளும் 'ஐஸ்லாந்து' என்றாள். சொல்லின் முதல்பகுதியில் ஆர்வம் தொனித்தது போல் தோன்றினாலும் மறுபகுதி உணர்வற்று ஒலித்தது. என்னவாயினும், தனது தடித்த கரத்தினை அவளது கரத்திலிருந்து விடுவித்துக்கொள்ள முயலும் ஆப்ரேவை நோக்கி அவள் தனது கவனத்தைத் திருப்பியாக வேண்டும். 'என்ன இது?' என்றாள் அவள், 'என்ன இது என் அன்பே'. இத்தனை மென்மையான பதத்தை அவள் இதற்கு முன் பிரயோகித்து க்ராண்ட் பார்த்ததேயில்லை.

'அட, வேண்டாம்,' என்ற அவள், 'அட இங்கே பார்,' என்றபடி படுக்கைக்கு அருகில் இருந்த பெட்டியில் இருந்து டிஸ்யூக்களை எடுத்தாள், ஆப்ரே அழுதுகொண்டிருந்தான். 'இங்கே, இங்கே' என்றபடி கொஞ்சம் க்ளீனெக்ஸ்களை எடுத்தவள் அவனது முகத்தில் அவற்றை வைத்து அலங்கோலமாகத் துடைத்தாள். க்ராண்டை நோக்கித் திரும்பியவள், 'இங்கிருப்பவர்கள் நீங்கள் சொன்னால் கேட்பார்களா? நீங்கள் அவர்களுடன் பேசுவதைப் பார்த்திருக்கிறேன்' என்றாள் இரகசியமாக.

எதிர்ப்பையோ சோர்வையோ வெறுப்பையோ வெளிப்படுத்தும்படியான ஒரு ஒலியை உண்டாக்கினான் ஆப்ரே. அவனது உடலின் மேற்பகுதி அவளைக் கட்டிக்கொள்ள விரும்புவது போல முன்னோக்கி உந்தியது. அவள் படுக்கையிலிருந்து பாதி வெளியே வந்து அவனைப் பற்றி அணைத்துக்கொண்டாள். அவளுக்கு உதவுவது சரியென க்ராண்டிற்குப் படவில்லை.

'அமைதி,' என்றாள் ஃபியோனா. 'அமைதியாய் இரு என் இனியவனே. நாம் ஒருவரை ஒருவர் சந்தித்துக்கொள்ளலாம். சந்தித்தே ஆக வேண்டும். நான் உன்னை வந்து பார்ப்பேன். நீ என்னை வந்து பார்ப்பாய்.'

அவள் மார்பில் முகம் புதைத்தபடி ஆப்ரே மீண்டும் அதே போன்ற ஒலியை ஏற்படுத்தினான். அங்கிருந்து வெளியேறுவதைவிட கண்ணியமாக வேறெதையும் செய்ய முடியும் என க்ராண்ட் கருதவில்லை.

அவன் க்றிஸ்டியை நோக்கி ஓடியபோது, 'அவனது மனைவி சீக்கிரம் இங்கே வரக்கூடாதா என்றிருக்கிறது எனக்கு' என்றாள் அவள். அவள் வந்து அவனை அழைத்துச்சென்றால் இந்தத் துயரக் காட்சிகளெல்லாம் ஒரு முடிவுக்கு வரும். நாங்கள் சீக்கிரம் இரவுணவைப் பரிமாற வேண்டும். இன்னமும் அவன் அங்கேயே இருந்தால் நாங்கள் எப்படி அவளை எதையாவது சாப்பிட வைப்பது?'

'நான் இருக்க வேண்டுமா? என வினவினான் க்ராண்ட்.

'எதற்காக? அவள் ஒன்றும் நோயுறவில்லையே?''

'அவளுக்குத் துணையாக' என்றான் அவன்.

க்றிஸ்டி மறுத்துத் தலையாட்டினாள்.

'இது மாதிரி விஷயங்களிலிருந்து அவர்களே தான் மீள வேண்டும். அவர்களுக்குப் பெரும்பாலும் குறுகிய கால மறதி உண்டு. சில நேரங்களில் அதுவும் நல்லதற்குத்தான்.'

ஃபியோனாவின் அறைக்கு மீண்டும் செல்லாமலேயே க்ராண்ட் கிளம்பினான். காற்று இதமாகவும் காகங்கள் சப்தமிட்டுக்கொண்டும் இருப்பதையும் அவன் கவனித்தான். வாகனங்கள் நிறுத்தும் பகுதியில் வண்ணக்கோடுகளிட்ட கால்சட்டை அணிந்த ஒரு பெண் மடிக்கப்பட்ட சக்கர நாற்காலியை கார் டிக்கியிலிருந்து வெளியே எடுத்துக்கொண்டிருந்தாள். ஃபியோனா அவளது துயரிலிருந்து மீளவில்லை. உணவுகளைக் கைக்குட்டையில் மறைத்து வைத்துக்கொண்டு, உண்டுவிட்டது போல் நடித்தாளே தவிர உண்ணவில்லை. அவளுக்கு நாளில் இருமுறை சத்து பானம் வழங்கப்பட்டது-யாரேனும் அருகேயே அமர்ந்து அவள் அதை விழுங்குவதை உறுதிசெய்ய வேண்டியிருந்தது. தினசரி படுக்கையிலிருந்து எழுந்து உடைமாற்றிக்கொண்ட போதும் அதன்பிறகு அவள் செய்ய விரும்பியதெல்லாம் அறையிலேயே அமர்ந்திருப்பதுதான். க்றிஸ்டியோ, பார்வையிட வரும்போது க்ராண்டோ அவளைத் தாழ்வாரத்திற்கோ வெளியிலோ நடத்தி அழைத்துச்செல்லாவிடில் அவளுக்கு உடற்பயிற்சியே இருந்திருக்காது. அவளது கண்கள் அழுது அழுது சிதைந்தும் மங்கலாகவும் ஆகியிருந்தன. அவளது சட்டை பட்டன்கள் - அவளுடையதுதானா - அலங்கோலமாகப் பொருத்தப்பட்டிருக்கும். கூந்தலை வாரிக்கொள்ளாமலோ நகங்களைக் கத்தரிக்காமலோ இருக்கும் நிலைக்கு அவள் இன்னும் வரவில்லை. ஆனால் சீக்கிரமே அந்நிலைமை வரக்கூடும். அவளது தசைகள் வலுவிழந்து வருவதாகக் கூறிய க்றிஸ்டி, தன்னைக் கவனித்துக்கொள்ளாவிடில் நடப்பதற்கு உதவியாக அவளுக்கு ஏதேனும் கருவியை நாங்கள் தர வேண்டியிருக்கும் என்றாள்.

'ஆனால் அப்படி ஒரு பழக்கம் ஏற்பட்டுவிட்டால் அவர்கள் முழுவதுமாக அதையே சார்ந்திருக்கத் தொடங்கிவிடுவார்கள், அதிகம் நடக்கவே மாட்டார்கள். அதையும் நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். நீங்கள் அவளுக்கு நிறைய கவனம் செலுத்த வேண்டும். அவளை ஊக்கப்படுத்த முயலுங்கள்.'

ஆனால் க்ராண்டிற்கு அதற்கான வாய்ப்பு கிடைக்கவில்லை. அவன்மீது ஃபியானோ ஒருவகை வெறுப்பை வளர்த்துக்கொண்டுவிட்டதைப் போலத் தோன்றியது. அவள் அதை மறைக்க முயன்றபோதும் இயலவில்லை. ஒரு வேளை ஒவ்வொருமுறை அவனைப் பார்க்கும் போதும், ஆப்ரேவுடனான அவளது கடைசித் தருணங்களும் க்ராண்ட் அவளுக்கு உதவவில்லை என்பதும் அவளுக்கு நினைவுக்கு வந்திருக்கலாம்.

அவர்களது திருமணத்தைப் பற்றிச் சொல்வதில் எந்தப் பயனும் இருப்பதாக அவனுக்கு இப்போது தோன்றவில்லை.

மேற்பார்வையாளர் தனது அறைக்கு அவனை அழைத்திருந்தாள். சத்துபானங்கள் வழங்கப்பட்டும் கூட ஃபியோனாவின் எடை குறைந்துகொண்டிருப்பதாக அவள் கூறினாள்.

'உங்களுக்குத் தெரியும் என நினைக்கிறேன், இங்கே முதல் தளத்தில் நெடுநாட்களுக்கு நாங்கள் யாரையும் படுக்கையில் வைத்து கவனித்துக்கொள்வதில்லை. அவ்வப்போது உடல்நிலை சரியில்லாமல் போனால் தற்காலிகமாக நாங்கள் கவனித்துக்கொள்வதுண்டு. ஆனால் தன்னைக் கவனித்துக்கொள்ள முடியாத அளவிற்கும் நடமாட முடியாதவாறும் பலவீனமாக அவர்கள் மாறும்போது நாங்கள் மேல்தளங்கள் பற்றி யோசிக்க வேண்டியிருக்கும்.'

அந்த அளவிற்கு அவள் படுத்த படுக்கையாகிவிடவில்லையே என்றான் அவன்.

'இல்லை, தன் உடலிற்கு அவள் தெம்பூட்டிக்கொள்ளவில்லை என்றால் அந்த நிலைதான் நேரும். அந்த எல்லையில்தான் அவள் இப்போது இருக்கிறாள்.'

மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்குத்தான் இரண்டாம் தளம் எனத் தான் நினைத்ததாக க்ராண்ட் கூறினான்.

'அதுவும்தான்' என்றாள் அவள்.

ப்ளகாக்ஸ் லேன் என்றழைக்கப்பட்ட தெருவில் பயணித்துக்கொண்டிருந்தான் க்ராண்ட். அங்கிருந்த வீடுகள் எல்லாமே ஒரே சமயத்தில் - முப்பது நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு - கட்டப்பட்டதைப் போலத் தோன்றின. விசாலமானதாகவும் வளைந்தும் சென்ற அந்தச் சாலையின் ஓரத்தில் நடைபாதைகள் இருக்கவில்லை. ஃபியோனாவின் நண்பர்கள் தங்களுக்குக் குழந்தைகள் பிறந்தபோது இதுபோன்ற இடங்களுக்கு குடிபெயர்ந்தனர். இன்னமும்கூட அவர்கள் இங்கே வசித்தனர். வாகன நிறுத்துமிடத்தின் கதவுகளில் கூடைப்பந்தாட்ட வளையங்கள் பொருத்தப்பட்டிருக்க பாதைகளில் மூன்று-சக்கர மிதிவண்டிகள் நிறுத்தப்பட்டிருந்தன. மலையடிவாரத்திலும் சில வீடுகள் இருந்தன. சாலைகளில் சக்கர அச்சுக்கள் பதிந்திருந்தன, ஜன்னல்கள் மென்தகடுகளால் அடைக்கப்பட்டோ வெளிறிய கொடிகள் தொங்க விடப்பட்டோ இருந்தன. ஆனால் அந்த வீடுகள் புதியதாக இருந்தபோது குடிவந்து, பின் அங்கிருந்து கிளம்புவதற்கான தேவையோ வசதியோ ஏற்படாத சிலரால் முடிந்த அளவிற்கு அவை நன்றாகத்தான் பராமரிக்கப்பட்டிருந்தன.

ஆப்ரேவிற்கும் அவனது மனைவிக்கும் சொந்தமானதென தொலைபேசிப் புத்தகத்தில் குறிக்கப்பட்டிருந்த ஒரு வீடும் அவற்றில் ஒன்றுதான். முன்பகுதியில் செவ்வகக் கற்கள் பதிக்கப்பட்டிருக்க அதன் ஓரங்களைப் பதுமராகப் பூக்கள் அலங்கரித்தன. சீனப் பூக்களைப் போலவே விறைப்பாக நின்ற அவை வெளிர்சிவப்பும் நீலமும் என மாறி மாறிப் பூத்திருந்தன.

ஆப்ரேவின் மனைவி அணிந்திருந்த வண்ணக் கால்சட்டையைத் தவிர அவள் பற்றி அவனுக்கு வேறெதுவும் நினைவில் இல்லை. சக்கர நாற்காலியை எடுப்பதற்காக அவள் காருக்குள் குனிந்த போது அவளது சட்டையின் பின்நுனி அகலத் திறந்தது. ஒடுங்கிய வயிறும் அகன்ற புட்டமும் அவனது மனக்கண்ணில் தோன்றின.


இன்று அவள் வண்ணக் கால்சட்டை அணிந்திருக்கவில்லை. பழுப்பு பெல்ட்டுடைய தளர்ந்த கால்சட்டையும் வெளிர்சிவப்பு ஸ்வெட்டரும் அணிந்திருந்தாள். வயிறு பற்றி அவன் நினைத்தது சரிதான், அவள் அணிந்திருந்த இறுக்கமான பெல்ட் அதை அவள் எடுத்துக்காட்ட விரும்பியதைத் தெரிவித்தது. அவள் அப்படிச் செய்யாமலேயே இருந்திருக்கலாம் - ஏனெனில் அதற்கு மேலேயும் கீழேயும் அவள் பிதுங்கிக்கொண்டிருந்தாள்.

கணவனைவிட அவள் பத்து அல்லது பன்னிரண்டு வயது இளையவளாக இருக்க வேண்டும். குட்டையான அவளது சுருள்முடி செயற்கையாகச் செந்நிறமாக்கப்பட்டிருந்தது. அவளுடைய நீலக் கண்கள்- ஃபியோனாவின் நீலத்தைவிட வெளிறிய நீலம் - ராபின் பறவையின் தட்டையான முட்டை அல்லது இரத்தினக்கல்லின் நீலம் - இலேசாகப் புடைத்துச் சாய்ந்திருந்தன. வால்நட்-வண்ண அலங்காரம் முகத்தின் சுருக்கங்களை வெளிப்படையாக்கியிருந்தது அல்லது அது அவளது ஃப்ளோரிடா பழுப்பாக இருக்கலாம்.

தன்னை எப்படி அறிமுகப்படுத்திக்கொள்வதெனத் தெரியவில்லை என்றான் அவன்.

'உங்கள் கணவரை நான் மெடோலேக்கில் பார்த்திருக்கிறேன். அங்கே நான் அடிக்கடி செல்வதுண்டு.'

கன்ன அசைவுகளில் ஆங்காரம் வெளிப்படும் விதமாக 'ஆமாம்' என்றாள் அவள்.



கணேசன்

# குடைச்சல் கொடுக்கும் குடல் இறக்கம்

வயிற்றில் ஏற்படும் நோய்களில் சில வயிற்றுக்கு வெளியேயும் தெரியும். இந்த ரகத்தில் 'நான்தான் முதலாவது' என்று முந்திக்கொள்வது 'ஹெர்னியா' எனும் குடல் இறக்கம்! குடலின் ஒரு பகுதி அல்லது கொழுப்புத் திசு, வயிற்றின் தசைச் சுவர் ஒரு துவாரம் வழியாக வெளியில் பிதுங்கித் தெரியும். அது தான் 'குடல் இறக்கம்' அல்லது 'குடல் பிதுக்கம்' (HERNIA). பிறந்த குழந்தை முதல் வயதானவர் வரை எவருக்கும் இது வரலாம் என்றாலும் நடுத்தர வயதைக் கடந்தவர்களுக்கும் முதியோருக்கும் வருவது அதிகம்.

**'குடல் இறக்கம்' என்றால் என்ன?**

ஊதிய பலூனை இதற்கு ஓர் உதாரணமாகச் சொல்லலாம். நீண்ட பலூனில் காற்றை ஊதும் போது, அது நல்ல பலூனாக இருந்தால் ஒரே சீராக விரிவடையும். சிலவற்றில் ஒன்றிரண்டு இடங்களில் சில புடைப்புகள் தெரியும். பலூனில் காற்றின் அழுத்தம் அதிகமாகும்போது பலம் குறைந்த பகுதியில் அப்படிப் புடைப்பு ஏற்படுகிறது. இப்படித்தான் வயிற்றில் குடல் பிதுக்கமும் உண்டாகிறது. இதைக் கொஞ்சம் விரிவாகவே பார்ப்போம்.

உடலிலேயே வயிற்றின் முன்பக்கமும் பின்பக்கமும்தான் தசைகளின் ராஜ்ஜியம் அதிகம். இவற்றில் முதுகுப் பக்கம் தூண்போல் நிற்கும் முதுகெலும்பும் அதைச் சுற்றியுள்ள தசைகளும் பலம் வாய்ந்தவை. அதனால் அங்கு ஆபத்து இல்லை.

**சிறிய நெல்லிக்காய் அளவுக்குப் புடைப்பு தெரிவது குடல் இறக்கத்தின் ஆரம்ப அறிகுறி. நீண்ட தூரம் நடந்தால், பலமாக இருமினால், மலம் கழிக்க முக்கினால் இந்தப் புடைப்பு பெரிதாகும்**

முன்பக்கம் உள்ள தசைகள் சற்றே பலம் குறைந்தவை. இதற்குக் காரணமும் இருக்கிறது. வயிற்றின் உறுப்புகளை ஒரு போர்வைபோல் போர்த்தியிருக்கும் இந்தத் தசைகள், நாம் மூச்சு விடும்போது உப்பி மீண்டும் பழைய நிலைக்கு வரத் தோதாக இருக்கின்றன. இதனால்தான் நாம் மூச்சு விடும்போதெல்லாம் வயிற்றுத் தசைகள் மேலும் கீழும் அசைந்துகொண்டே இருக்கின்றன. இந்தத் தசைகளின் பலவீனம் குடல் இறக்கத்துக்குப் பாதை தருகிறது.

வயிற்றில் எந்த இடத்திலும் குடல் இறக்கம் ஏற்படலாம் என்ற போதிலும், தொப்புள், தொடை, அறுவை சிகிச்சைத் தழும்பு ஆகிய இடங்களில் ஏற்படவே வாய்ப்புகள் அதிகம். தொப்புளுக்கு மேலும் கீழும் வகிடு எடுத்ததுபோல் இருக்கும் மையக்கோட்டில் உள்ள தசைகள் ரொம்பவே பலம் குறைந்தவை. சிலருக்கு இந்த இடத்திலும் குடல் இறக்கம் ஏற்படுவதுண்டு.

குடல் இறக்கம் வரும் இடத்தைப் பொறுத்து இதன் வகை பிரிக்கப்பட்டுள்ளது.

**1. தொடை இடுக்கு குடல் இறக்கம் (INGUINAL HERNIA)**

ஆண்களை அதிகம் பாதிக்கிற ரகம் இது. அடிவயிறும் தொடையும் இணைகிற இடத்தில் உட்பக்கமாக இது ஏற்படுகிறது. வயிற்றையும் விதைப்பையையும் (SCROTUM) இணைப்பதற்கு சின்ன 'குகைப் பாதை' இருக்கிறது. ஆண்களுக்கு இதன் வழியாக விந்துக் குழாய், ரத்தக் குழாய், நிணநீர்க் குழாய், நரம்பு எனப் பல சங்கதிகள் விதைப்பைக்குச் செல்கின்றன.

பொதுவாகவே, ஆண்களுக்கு இந்தப் பாதை டி.வி. கேபிள் வயர் மாதிரி மிகவும் இறுகலாக இருக்கும். சாதாரணமாக, வயிற்றி லிருந்து எதுவும் இதன் வழியாக வெளியில் வரமுடியாது. சிலருக்கு மட்டும் பரம்பரை, உடல் வாகு அல்லது நோய் காரணமாக இங் குள்ள வயிற்றுச் சுவர் பலமிழந்து தளர்ந்து போகும். அப்போது 'குகைப் பாதை'யில் கொஞ்சம் இடம் கிடைக்கும். இதற்காகவே காத்திருந்தது போல், குடலின் சிறு பகுதி விதைப்பைக்குள் இறங்கிவிடும். அங்கே புதிதாக ஒரு வீக்கம் தோன்றும். இதுதான் தொடை இடுக்கு குடல் இறக்கம். வலப் பக்கம், இடப்பக்கம் என இரண்டு பக்கமும் இது ஏற்படலாம்.

**2. மேல் தொடை குடல் இறக்கம் (FEMORAL HERNIA)**

பெரும்பாலும் பெண்களுக்கு வருகிற குடல் இறக்கம் இது. மேல் தொடையின் தொடக்கத்தில் ஒரு குழாய்ப் பாதை (FEMORAL CANAL) இருக்கிறது. இதன் வழியாக வயிற்றிலிருந்து காலுக்கு ரத்தக் குழாய்கள், நரம்புகள், நிணநீர்க் குழாய்கள் செல்கின்றன. இது பலம் இழந்துவிடும்போது இந்த வகை குடல் இறக்கம் ஏற்படுகிறது.

**3. தொப்புள் குடல் இறக்கம் (UMBILICAL HERNIA)**

சிலருக்குத் தொப்புள் தசைகள் பலவீனமாகும் போது அங்கே குடல் இறக்கம் ஏற்படுகிறது. அப்போது தொப்புள் பெருத்துத் தொங்குகிறது. இன்னும் சிலருக்கு அறுவை சிகிச்சை தழும்பில் இது ஏற்படுகிறது. என்ன காரணம்? இவர்களுக்கு அறுவை சிகிச்சை செய்யும்போது தையல் போட்டிருப்பார்கள். நாளாக நாளாக, சில காரணங்களால் இந்தத் தையல் போட்ட இடத்தைச் சுற்றி தசைகள் பலவீனமாகும். அப்போது அதன் அருகில் இருக்கும் குடல் பகுதி அந்தத் தழும்பு வழியாக வெளியில் 'எட்டிப் பார்க்கும்'. இதுதான் 'தழும்பு குடல் இறக்கம் (INCISIONAL HERNIA). உடல் பருமனாக உள்ள பெண்களுக்குத்தான் இந்த பாதிப்பு அதிகம். மேலும், பெண்களுக்கு 'சிசேரியன்', கர்ப்பப்பை நீக்கும் அறுவை சிகிச்சை, குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை என வயிற்றில் அறுவை சிகிச்சை தழும்புகள் ஏற்பட வாய்ப்புகள் அதிகம். இதனால் அங்கே குடல் இறக்கம் தோன்றவும் வாய்ப்பு மிக அதிகம்.

**காரணிகள் என்ன?**


குடல் இறக்கம் ஏற்பட இதுவரை சொன்ன காரணங்களோடு இன்னும் பல காரணிகளும் உண்டு. நாட்பட்ட ஆஸ்துமா, தீராத இருமல், அதிக பளுவைத் திடீரெனத் தூக்குவது, நீடித்த மலச்சிக்கல், சிறுநீர்த் துளை அடைப்பு (STRICTURE URETHRA), புராஸ்டேட் வீக்கம், வயிற்றில் ஏற்படும் கட்டிகள், கர்ப்பம், முதுமை.

**என்ன அறிகுறிகள்?**

சிறிய நெல்லிக்காய் அளவுக்குப் புடைப்பு தெரிவது குடல் இறக்கத்தின் ஆரம்ப அறிகுறி. நீண்ட தூரம் நடந்தால், பலமாக இருமினால், மலம் கழிக்க முக்கினால் இந்தப் புடைப்பு பெரிதாகும். குழந்தைகள் அழும்போதும் இதே நிலைமைதான்.

இதைத் தொட்டால் வலிக்காது. படுக்கும் போது அதுவாகவே சமர்த்தாக மறைந்துவிடும். அல்லது விரலால் தள்ளினால் வயிற்றுக்குள் போய்விடும். எனவே, நம்மில் பலர் இதைப் பெரிய பிரச்சினையாக எடுத்துக்கொள்வதில்லை. இதை வெளியில் சொல்ல வெட்கம் தடுக்கும் என்பதால் இதற்கு சிகிச்சை எடுக்க வருபவர்கள் ரொம்பவே குறைவு!

இந்தப் புடைப்பு கொஞ்சம் கொஞ்சமாக மாம்பழம் சைஸுக்கு வளர்ந்துவிடும். அப்போது இது வயிற்றுக்குள் திரும்பிப் போக சண்டித்தனம் செய்யும். அப்படியானால், வயிற்றுக்குள் போக முடியாத அளவுக்கு வீக்கம் பெரிதாகிவிட்டது என்று அர்த்தம். இது அங்குள்ள நரம்பை அழுத்தும். இதனால் அங்கே 'யாரோ பிடித்து இழுக்கிற மாதிரி' வலி ஆரம்பிக்கும். அடுத்ததாக வயிறு உப்பி 'காற்று' போகாது. இந்த



# சூரிய மண்டலத்தின் மிகப் பெரிய பனி உருண்டை!

சூரிய மண்டலத்தில் சூரியனுக்கு அடுத்தபடியாக வடிவில் மிகப் பெரிய கோள் வியாழன். வியாழன் கோளின் எடை எவ்வளவு இருக்கும் தெரியுமா? சூரிய மண்டலத்தின் அனைத்துக் கோள்களின் எடையைப்போல் இரு மடங்குக்கும் மேல் எடை அதிக கொண்டது வியாழன் கோள்.

வடிவத்திலும் எடையிலும் மிகப் பெரிய வியாழன் கோளுக்குச் சந்திரன்களும் அதிகம். நாம் வசிக்கும் பூமிக்கு ஒரே ஒரு சந்திரன்தான்! ஆனால், வியாழன் கோளுக்கு 86 சந்திரன்கள் உள்ளன. இவற்றில் ஒன்றான 'கானிமீட்' சந்திரன், புதன் கோளை விடப் பெரியது. இதன் குறுக்களவு 5260 கிலோ மீட்டர்.

வியாழன் கோளை இரவு வானில் பார்க்க முடியும். ஆனால், இங்கிருந்து பார்க்கும்போது பெரிய கோளாகத் தெரியாது. சிறிய ஒளிப்புள்ளியாகத்தான் தெரியும். ஆவணி (ஓகஸ்ட்) மாதத்தில் சூரிய உதயத்துக்கு முன்னால் கிழக்கு நோக்கிப் பார்த்தால் வெள்ளி (வீனஸ்), வியாழன் (ஜூபிடர்) ஆகிய இரண்டு கோள்களும் நன்றாகத் தெரியும். இவை இரண்டில் வெள்ளி மிகப் பிரகாசமாக இருக்கும். வியாழன் சற்றுப் பிரகாசம் குறைந்ததாகக் காணப்படும்.

பூமிக்கும் வியாழனுக்கும் உள்ள தூரம் பூமிக்கும் சூரியனுக்கும் உள்ள தூரத்தைப் போல குறைந்தது ஐந்து மடங்கு உள்ளது. சூரியனை எட்டுக் கோள்கள் சுற்றி வருகின்றன. பூமி மூன்றாவது கோள். வியாழன் ஐந்தாவது கோள். சூரியனிலிருந்து மிகத் தொலைவில் உள்ளது வியாழன். இதன் காரணமாக வியாழனிலிருந்து பார்த்தால் சூரியன் சிறியதாகத் தெரியும். ஆகவே வியாழனில் சூரியனின் வெப்பம் படாது. கடுங்குளிர் வீசும். இதனால்தான் வியாழன் கோள் மிகப் பெரிய பனிக்கட்டி உருண்டையாக உள்ளது. அதாவது வியாழன் கோளில் தொடக்க காலத்தில் இருந்த வாயுக்கள் அனைத்தும் உறைந்து விட்டன.

சூரிய மண்டலம் தோன்றிய காலத்தில் புதன், வெள்ளி, பூமி, செவ்வாய் போன்று சூரியனுக்கு அருகிலிருந்த கோள்களின் காற்று மண்டலத்தில் இருந்த லேசான வாயுக்கள், சூரிய வெப்பம் காரணமாக வெளியேறின. வியாழன் மிகத் தொலைவில் இருந்த காரணத்தால், வெப்பமின்றி குளிர் காரணமாக வாயுக்கள் அங்கேயே உறைந்துவிட்டன. ஆகவே தான் வியாழன் கோள் பெரிய பனிக்கட்டி உருண்டையாக உள்ளது. வியாழனுக்கு அடுத்துள்ள சனி, யுரேனஸ், நெப்டியூன் கோள்களும் பனிக்கட்டி உருண்டைகளாகவே உள்ளன.

வியாழன் கோளில் சூரிய வெப்பம் பட்டால், பனிக்கட்டி அனைத்தும் உருகிவிடும். வியாழன் சிறிய கோளாக மாறிவிடும். ஏனென்றால் வியாழன் கோளின் மொத்த எடையில் எண்பது சதவிகிதம் உறைந்து போன வாயுக்கள் தாம் உள்ளன. அதனால்தான் வியாழன் கோளில் விண்கலத்தைத் தரையிறக்க முடியாது. அப்படியே இறக்கினாலும் உறைந்துள்ள பனிக்கட்டிக்குள் புதைந்துவிடும். எனவே வியாழனை ஆராய்வதற்காக அனுப்பப்பட்ட ஆளில்லா விண்கலங்கள் அனைத்துமே வியாழனைத் தொலைவிலிருந்துதான் ஆராய்ந்துள்ளன.

வியாழன் தன்னைக் கடந்து செல்லும் வால் நட்சத்திரங்கள் மீதும் அஸ்டிராய்டுகள் எனப்படும் சிறு கோள்கள் மீதும் தன்னுடைய தாக்கத்தைச் செலுத்துகிறது. அதன் காரணமாக வால் நட்சத்திரங்களும் அஸ்டிராய்டுகளும் வியாழன் மீது மோதி அழிகின்றன. அல்லது வியாழன் கோளின் ஆதிக்கத்துக்குக் கட்டுப்பட்டு, அதைச் சுற்றி வருகின்றன. இந்த அஸ்டிராய்டுகளுக்கு 'டிரோஜன்கள்' என்று பெயர்.

# பூமி நோக்கி வரும் மிகப் பெரிய வால் நட்சத்திரம்

இதுவரை இல்லாத மிகப் பெரிய வால் நட்சத்திரம் ஒன்று பூமியை நோக்கி வந்துகொண்டிருக்கிறது என்பதை அறிவியலாளர்கள் வெளிப்படுத்தியிருக்கின்றனர். மணிக்கு 35 ஆயிரம் கிலோ மீற்றர்கள் வேகத்தில் அது பூமியை நெருங்கி வருவதாக அவர்கள் கூறுகின்றனர். இந்த நட்சத்திரம் இயல்பைவிட 50 மடங்கு பெரியது.

நாசாவின் ஹபிள் தொலைநோக்கி வால் நட்சத்திரத்தின் கருப்பகுதி பனிக்கட்டியின் நிறை சுமார் 500 டிரில்லியன் டன்கள் என்று கண்டறிந்துள்ளது. இது 137 கிலோ மீற்றர் அகலம் கொண்டது.

இந்த மிகப் பெரிய வால் நட்சத்திரம் பூமியை நோக்கி வந்தாலும் இது பற்றி அதிகம் கவலைப்பட வேண்டாம் என்கிறார்கள் அறிவியலாளர்கள். ஏனென்றால் அதிகபட்சமாக சூரியனில் இருந்து ஒரு பில்லியன் மைல் தொலைவுக்குத்தான் அது நெருங்கி வரும். அதுவும் 2031ஆம் ஆண்டுக்குள் நடக்காது.

இந்த வால நட்சத்திரம் முதன் முதலில் 2010ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால் இப்போது தான் ஹபிள் தொலைநோக்கி அதன் அளவை உறுதிப்படுத்தியுள்ளது. இது இதுவரை வானியலாளர்கள் பார்த்த அனைத்து வால் நட்சத்திரங்களை விடவும் இது மிகப்பெரியது.

"இந்த வால் நட்சத்திரம் பெரியதாக இருக்க வேண்டும் என்று நாங்கள் எப்போதும் கருதிவந்தோம். இப்போது அதை உறுதிப்படுத்தி இருக்கிறோம்" என்று லாஸ் ஏஞ்சலீஸில் உள்ள கலிபோர்னியா பல்கலைக்கழகத்தின் கோள் அறிவியல் மற்றும் வானியல் பேராசிரியர் டேவிட் ஜூவிட் கூறினார்.

இந்த வால் நட்சத்திரத்தை பெஹிமோத் எனப்படும் ராட்சதப் பனி யானையுடன் நாசா ஒப்பிடுகிறது. பூமியை நோக்கி இது பாய்ந்து வருவதாகவும் குறிப்பிடுகிறது.

சிலியில் கூட்டு அமெரிக்க ஆய்வகத்தில் கறுப்பு ஆற்றல் பற்றி ஆய்வு செய்து வரும் பெட்ரோ பெர்னார்டினெல்லி, கேரி பெர்ன்ஸ்டீன் ஆகிய அறிவியலாளர்கள் இதைக் கண்டுபிடித்தனர் என நாசா விண்வெளி அமைப்பின் அறிக்கை கூறுகிறது.

மக்காவ் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் மேன்-டு ஹுய் இந்த வால் நட்சத்திரத்தை "ஒரு அற்புதமான பொருள்" என்று வியக்கிறார்.

"வால் நட்சத்திரம் மிகவும் பெரியதாக இருக்க லாம் என்று நாங்கள் யூகித்தோம். ஆனால் இதை உறுதிப்படுத்த எங்களுக்கு சிறந்த தரவு தேவைப் பட்டது."

பெர்னார்டினெல்லி-பெர்ன்ஸ்டைன் வால் நட்சத்திரம் முப்பது லட்சம் ஆண்டுகள் நீளமான நீள் வட்ட சுற்றுப்பாதையில் பயணிக்கிறது. இதனால் சூரியனிலிருந்து தோராயமாக அரை ஒளியாண்டு தொலைவு வரை அது செல்லும்.

இப்போது இந்த வால் நட்சத்திரம் சூரியனிடம் இருந்து 200 கோடி மைல்களுக்கும் குறைவான தொலைவில் உள்ளது. இது நமது சூரிய மண்டலத்தின் தளத்துக்கு கிட்டத்தட்ட செங்குத்தாக விழுந்து கொண்டிருக்கிறது என்கிறார்கள் அறிவியலாளர்கள்.

நேரத்தில்தான் அலறியடித்துக் கொண்டு சிகிச்சைக்கு ஓடுவோம். அப்போது மருத்துவர் 'நீங்கள் ஆபத்தான நிலைமையில் இருக்கிறீர்கள்' என்பார்.

**அந்த ஆபத்து எது?**

அந்த ஆபத்துக்குப் பெயர் 'முறுக்கிக்கொண்ட குடல் இறக்கம்' (STRANGULATED HERNIA). குடல் இறக்கத்தை ஆரம்பத்தில் கவனிக்காமல்விட்டால் நேரும் பேராபத்து இது. எந்த ஒரு குடல் இறக்கமும் சாதாரண நிலையில் 'கண்ணி வெடி' மாதிரி இருக்கும்! அது எப்போது வெடிக்கும் என்று சொல்ல முடியாது. வெடித்தால் விளைவுகள் விபரீதமாகும். அப்படி ஆவதுதான் மேலே சொல்லப்பட்ட குடல் இறக்கம்.

வயிற்றிலிருந்து உள்ளுக்கும் வெளிக்குமாக 'விசிட்' செய்த குடல் திடீரென்று 'கோபம் வந்து' முறுக்கிக் கொள்ளும். இதன் கழுத்தில் ஒரு முடிச்சு விழும். இதனால் அந்தப் பகுதிக்கு ரத்தம் வருவது நின்றுவிடும். குடல் அழுகி செத்துவிடும். அங்கே ஓட்டை விழுந்து வயிற்றுக்குள் மலம் கசியும். வயிறு உப்பி, வலி எடுக்கும். வாந்தி வரும். ரத்த அழுத்தம் குறைந்து மயக்கம் வரும். இதற்கு அவசர அறுவை சிகிச்சைதான் ஒரே தீர்வு. எனவே, குடல் இறக்கத்தைப் பொறுத்தவரை பிரச்சினை பெரிதாவதற்குள் அறுவை சிகிச்சை செய்து சரி செய்துவிட வேண்டும். அதற்கு யோசிக்கக் கூடாது!

**என்ன சிகிச்சைகள்?**

குடல் இறக்கத்துக்கு ஆரம்பத்திலேயே திட்டமிட்டு அறுவை சிகிச்சை செய்துகொள்பவர்களுக்கு 100% சுகப்படும். சிகிச்சைக்குத் தாமதமானால் மீண்டும் அது ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம்.

ஹெர்னியாட்டமி (HERNIOTOMY): குழந்தைகள் / இளைஞர்களுக்கு இந்த அறுவை சிகிச்சை செய்யப்படுகிறது. குழந்தைக்கு ஒரு வயது முடிந்ததும் இதைச் செய்துகொள்ளலாம். வயிற்றைத் திறந்து, குடல் இறக்கத்தைக் கண்டுபிடித்து, அதன் துவாரம்வரை திறந்து, அதிலுள்ள குடலை வயிறுக்குள் தள்ளிவிட்டு, துவாரத்தைத் தைத்து மூடுவது இதன் செயல்முறை.

ஹெர்னியோரேபி (HERNIORRAPHY): நடுத்தர வயதினருக்கு தசை மற்றும் தசைநார்கள் வலுவிழந்து போனால், 'புரோலின் இழை' கொண்டு அத்தசைகளைத் தைத்துச் சரிப்படுத்தும் அறுவை சிகிச்சை இது.

ஹெர்னியோபிளாஸ்டி (HERNIOPLASTY): வயதானவர்கள் மற்றும் புரோலின் இழை கொண்டு தசைகளைத் தைத்து வலுப்படுத்த முடியாதவர்களுக்கு 'புரோலின் வலை'யை (PROLENE MESH) அத்தசைகளுக்கு இடையில் வைத்துத் தைத்துவிடுவார்கள். இந்த வலையின் இடைவெளியில் தசைகள் வளர்ந்து இறுக்கத்தை ஏற்படுத்தும். இதன் பலனால் தசைகள் பலப்படும். மீண்டும் குடல் இறக்கம் வராது.

லேப்ராஸ்கோப்பிக் அறுவை சிகிச்சை: இதுவரை சொன்னவை எல்லாமே வயிற்றைத் திறந்து செய்யும் அறுவை சிகிச்சைகள். வயிற்றைத் திறக்காமல், 'லேப்ராஸ்கோப்பி' முறையில் சில துளைகள் மட்டும் போட்டு குடல் இறக்கம் சரிசெய்யப்படுகிறது. இப்போதைக்கு இதுதான் நவீன முறை. இதில் நோயாளிக்கு வலி குறைவு. ரத்த இழப்பு இல்லை. மருத்துவமனையில் சில நாட்களுக்குத் தங்கினால் போதும். சீக்கிரத்தில் வேலைக்குத் திரும்பிவிடலாம். எனினும், யாருக்கு மேற்கொள்வது என்பதை அறுவை சிகிச்சை மருத்துவர் தான் முடிவு செய்ய வேண்டும்.



சுசீந்திரன் - கொட்டடி

# நம்மவூர்ச் சுத்துமாத்து

## விலை அதிகரிப்பு வியாபாரம்

இந்த நெருக்கடியான காலத்தில் பொருள்களுக்கான விலைகளை அதிகரித்துப் பெரும் சுத்துமாத்துகளில் வர்த்தகர்கள் ஈடுபடுகிறார்கள். ஒருவரைப் பார்த்து மற்றவர் என்று இந்தப் பழக்கம் தொற்று வியாதி யாகப் பரவுகின்றது. இதுவரை காலமும் நம்பிக்கை - நாணயம் தவறாது ஒழுங்காக வியாபாரத்தைச் செய்துவந்த வர்த்தகர்கள்கூட இந்தச் சந்தர்ப்பத்தில் பெரும் கொள்ளையர்களாக மாறியிருக்கின்றனர். யாழ்ப்பாண நகரிலும், முழுக் குடாநாட்டிலுமே இந்தக் கொள்ளையடிப்பு மலிந்து போய்க் கிடக்கிறது. உணவுப் பொருள்கள், உடுபுடவைகள், மின்சாதனப் பொருள்கள், மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள், காகிதாதிகள் என அனைத்து வர்த்தகர்களும் தற்போதைய நாட்டு நிலைமையைக் கருத்தில் கொண்டு அதற்கு மேலாகத் தாமும் கொள்ளையடிப்பில் ஈடுபடத் தொடங்கியிருக்கிறார்கள். வெளியூர் உற்பத்திப்பொருள்களுக்கு மாத்திரமன்ற உள்ளூரில் கிடைக்கின்ற பொருள்களுக்கும் தட்டுப்பாட்டையும் கேள்வியையும் காரணம் காட்டி உச்ச விலையை அறவிடுகின்றனர். நாணயத்துடன் விலையை அதிகரிப்பவர்களும் இருக்கிறார்கள்.

உள்நாட்டு நிறுவனங்கள் தயாரிக்கும் ரயர்களுக்கான விலைகளை அந்த நிறுவனங்கள் சற்று அதிகரித்திருக்கின்றன. இதனால் அவற்றின் விலையில் அதிகரிப்பு இருக்கிறது. நெடுங்காலமாக இந்திய நிறுவனத் தயாரிப்புகள் இறக்குமதியில்லாதிருக்க உள்நாட்டு ரயர்களின் விலை அதிகரிப்பைக் காரணம் காட்டி தாம் பதுக்கி வைத்திருந்த இந்தியத் தயாரிப்பு ரயர்களுக்கு அதிக விலையை நிர்ணயம் செய்து விற்கின்றனர் வர்த்தகர்கள். இதைவிட ஏற்கனவே இறக்குமதி செய்து விலை அதிகரிப்பை எதிர்பார்த்துப் பதுக்கி வைத்திருக்கின்ற பொருள்களைக் காட்டி "இந்த முறை வந்த ஸ்ரோக்கிலை விலை கூடியிருக்குது" என்று சொல்லி அதிக விலையை அறவிடுகின்றனர்.

ரயர்கள் மாத்திரமன்றி ஆடைகளின் நிலையும் அப்படித்தான். இலங்கை ஆடை ஏற்றுமதியில் முன்னணியில் இருக்க, இப்போது ஆடை ஏற்றுமதியில் தளம்பல் நீடிக்கும் நிலையில் ஆடைகளுக்கான விலைகள் உள்நாட்டில் குறைந்திருக்கிறதா? என்றால் அதுதான் இல்லை. சிங்கள, இந்து புத்தாண்டுச் சமயத்தில் உள்ளூர் ஆடைகளுக்கும் இந்திய இறக்குமதி ஆடைகளுக்கும் விலைகள் அதிகரித்திருக்கின்றன. இலங்கையில் ஆடைகளை அதிகம் கொள்வனவு செய்யும் யாழ்ப்பாண நகரில் அனைத்து வித ஆடைகளின் விலைகளும் எகிறியிருக்கின்றன. ரயர்கள், ஆடைகள் போக நிறுவனப் பொதிகள், விலைகள் அச்சிட்டுச் சந்தைக்கு வருகின்ற பல பொருள்களின் விலைகளும் மெதுவாக அதிகரித்துத்தான் உள்ளன. இதைக் காரணம் காட்டி விலையை அச்சிட்டுக் காட்சிப்படுத்த முடியாத பொருள்களுக்குத் தாம் நினைத்த விலையை அறவிடுகின்றனர்.

அச்சிட்டு விலை அதிகரிப்பைச் செய்துள்ள பொருள்களின் விலையேற்றத்தைவிடப் பல்மடங்கில் விலை நிர்ணயம் செய்திருப்பதைக் கண்டு வர்த்தகர்களின் பதுக்கல் பொருள்களைக் கண்டறியவும் சுத்துமாத்துகளை உணரவும் முடியும்.

இதேவேளை மிக்சர் போன்ற சில தீனிகளின் விலைகள் அதிகரித்தாலும் கோதுமை மா, எரிவாயு, எண்ணெய் போன்ற பல பொருள்களின் விலை அதிகரிப்பால்தான் அப்படி என்று மனதைத் தேற்ற முடிகிறது. ஆனால், யாழ்ப்பாணத்தில் தாம் பெருமளவு முதலீட்டைப் பயன்படுத்திக் கொள்வனவு செய்தோம் என்ற காரணத்தை மட்டும் நியாயப்படுத்திப் பல வர்த்தகர்கள் தாம் பதுக்கி வைத்திருந்த பொருள்களுக்கு அறவிடும் அறாவிலைகள் நிச்சயம் கண்டிக்கத்தக்கனவே.

---

# என்னதான் ...

**அரசமைப்புச் சட்டம் உருவான வரலாறு**

பாகிஸ்தான் அரசமைப்புச் சட்டம் 1956, 1962 ஆகிய ஆண்டுகளிலும் இதற்கு முன்பாகவும் இயற்றப்பட்டிருந்தாலும், 1973இல் இயற்றப்பட்ட சட்டமே இப்போது கடைப்பிடிக்கப்படுகிறது. பாகிஸ்தான் அரசமைப்புச் சட்டத்தில் மொத்தம் 26 திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. அவற்றில் மூன்று நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படாமலேயே நடைமுறைக்கு வந்துள்ளன.

ஷரியத் நீதிமன்றம், இஸ்லாமிய சித்தாந்தப்படியான பேரவை ஆகிய இரு அமைப்புகளை அரசமைப்புச் சட்டம் உருவாக்கியிருக்கிறது. இவை சட்டத்தை, இஸ்லாமிய மத அடிப்படையில் விளக்கவும், செயல்படுத்தவும் உதவ ஏற்படுத்தப்பட்டவை.

**அரசமைப்புச் சட்டத்தின் முடக்கம்**

1962இல் இயற்றப்பட்ட அரசமைப்புச் சட்டம் 1969இல் படைத்தளபதி ஆட்சி ஏற்பட்டதும் செயல்படாமல் நிறுத்திவைக்கப்பட்டது. பிறகு 1972இல் கிட்டத்தட்ட கைவிடப்பட்டது. 1977இல் மீண்டும் படைத் தளபதி ஆட்சியைக் கைப்பற்றியபோதும் அரசமைப்புச் சட்டத்தின் செயல்பாடு நிறுத்தப்பட்டது. 1985இல் அரசமைப்புச் சட்டம் மீண்டும் செயல்பாட்டுக்குக் கொண்டுவரப்பட்டது.

1985இல் செய்த ஒரு சீர்திருத்தம் நாட்டின் உச்சபட்ச அதிகாரங்களை நாடாளுமன்றம், தலைமை அமைச்சரிடமிருந்து அரச தலைவருக்கு மாற்றியது. 2004இல் செய்யப்பட்ட திருத்தம் மீண்டும் தலைமை அமைச்சருக்கும் நாடாளுமன்றத்துக்கும் அதிகாரங்களை வழங்கியது. 2010இல் செய்யப்பட்ட திருத்தம் அதிபரின் அதிகாரங்களை மேலும் குறைத்து நாடாளுமன்ற குடியரசாக நாட்டின் நிலையை அறிவித்தது.

**இம்ரான்கானின் வீழ்ச்சி**

பாகிஸ்தான் படையினரின் உதவியோடு தலைமை அமைச்சரானவர் என்று இம்ரானை எதிர்க்கட்சிகள் விமர்சித்தன. அவருடைய பாகிஸ்தான் தேரிக் இன்சாஃப் (பிடிஐ) கட்சி நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை இடங்களைப் பெறவில்லை. ஆனால், பிற கட்சிகள் ஆதரவு தந்தன. எனவே தலைமை அமைச்சரானார்.

தேர்தலுக்கு முன்னர் அறிவித்த வாக்குறுதிகளைப் பெருமளவு இம்ரானால் நிறைவேற்ற முடியவில்லை. அதேவேளையில் எதிர்க்கட்சிகளைச் சாடுவதையும் எதிர்க்கட்சியினரை ஒடுக்குவதையும் தொடர்ந்து மேற்கொண்டார்.

தொடக்கக் காலத்தில் படையினரின் கண்ணசைவுக்கு ஏற்பச் செயல்பட்ட அவர், பதவியின் இறுதிக் காலத்தில் சுயமாகச் செயல்பட விரும்பினார், தரைப் படையின் தலைமைத் தளபதியையே பதவியிலிருந்து நீக்கவும் வழி தேடினார். நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் பெருகியிருக்கிறது.

சீனா, ரஷ்யா ஆகிய நாடுகளுடன் இம்ரான் அதிகம் நெருங்கியதும் ஆப்கன் தாலிபான்களுக்கு அவர் ஆதரவு காட்டியதும் அமெரிக்காவால் விரும்பப்படவில்லை. பாகிஸ்தானின் பொருளாதாரத்துக்கு அமெரிக்க அரசு தந்த நிதியுதவிதான் இத்தனை ஆண்டுகளாக பெருமளவு முட்டுக்கொடுத்துவந்தது. இந்த நிலையில்தான் உக்ரைன் மீது தாக்குதல் தொடுத்திருந்த நிலையிலும், ரஷ்யாவுக்கு இம்ரான் சென்றார். அதை அமெரிக்கா விரும்பவில்லை.

இந்தச் சூழலைப் பயன்படுத்திக்கொண்ட எதிர்க்கட்சிகள் இம்ரான் கானுக்கு எதிராக நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டுவந்தன. குதிரைப் பேரம் மூலம் வலுவைப் பெருக்க இம்ரான் திட்டமிட்டார். ஆனால் அவருடைய தோழமைக் கட்சியும் அவருடைய கட்சிக்காரர்களுமே அவரைக் கைவிடத் தயாராகிவிட்டனர். வாக்கெடுப்பு நடந்தால் இம்ரானுக்குத் தோல்வி உறுதி என்பது ஏற்கனவே தெரிந்துவிட்டது. சித்திரை (ஏப்ரல்) 3 பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் இம்ரான் ஆதரவு பிடிஐ கட்சி உறுப்பினர்கள் எழுந்து நின்று, 'அன்னியச் சதி காரணமாக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டதால் அதன் மீது வாக்கெடுப்பு நடத்தக்கூடாது, அதை உடனே நீக்க வேண்டும்' என்று கோரிக்கை விடுத்தனர். நாடாளுமன்ற துணை சபாநாயகர் முகம்மது காசிம் கான் சூரி அதையேற்று, அந்தத் தீர்மானம் செல்லாது என்று வாக்கெடுப்புக்கே விடாமல் தூக்கி எறிந்துவிட்டார்.

எதிர்க்கட்சிகள் மீண்டும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரக் கூடும் என்று எதிர்பார்த்து அரச தலைவர் ஆரிஃப் ஆல்வி மூலமாக நாடாளுமன்றத்தைக் கலைத்து உத்தரவிடச் செய்தார் இம்ரான். உடனே எதிர்க்கட்சிகள் அனைத்தும் உச்ச நீதிமன்றத்தை நாடின. உச்ச நீதிமன்றம் உடனடியாகத் தலையிட்டு, நம்பிக்கையில்லாத் தீர்மானம் மீது வாக்கெடுப்பு நடத்தப்படாத நிலையில் நாடாளுமன்றத்தைக் கலைக்க உத்தரவிட்டதை ஏற்க முடியாது, நாடாளுமன்றத்துக்கு மீண்டும் உயிரூட்டப்படுகிறது, நம்பிக்கையில்லாத் தீர்மானம் மீதான விவாதமும் வாக்கெடுப்பும் அவசியம் என்று சித்திரை 7இல் உத்தரவிட்டது.


பாகிஸ்தானின் வல்லமை மிக்க படைத்துறையும் உச்ச நீதிமன்றத்துக்கு சார்பாகவே இருந்தது. எனவே மீண்டும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைச் சந்திப்பதைத் தவிர இம்ரானுக்கு வேறு வழியில்லாமல் போய்விட்டது. நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டு தன்னுடைய கைப்பாவையை இடைக்காலத் தலைமை அமைச்சராக நியமிக்க இம்ரான் கானின் திட்டமிட்டிருந்தார். உச்ச நீதிமன்றம் அதற்கும் தடை விதித்துவிட்டது. இடைக்காலப் பிரதமரைத் தேர்வுசெய்யும் பொறுப்பை எதிர்க்கட்சிகளுக்கு அளித்தது. எதிர்பார்த்தபடியே நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் இம்ரான் கான் ஆட்சி பதவி இழந்துவிட்டது.

இடைக்கால அரசு, தலைமை அமைச்சர் நியமனம் ஆகியவை ஒரு பக்கம் இருந்தாலும் நாடாளுமன்ற பொதுத் தேர்தலை உடனடியாக நடத்த முடியுமா என்று தேர்தல் ஆணையத்துடன் ஆலோசனை கலந்தது உச்ச நீதிமன்றம். அடுத்த மூன்று அல்லது நான்கு மாதங்களுக்குள் தேர்தலை நடத்துவது சாத்தியமில்லை என்று ஆணையம் கூறிவிட்டது.

ஆக, உச்ச நீதிமன்றம், தேர்தல் ஆணையம், படைத்துறை என்று யாவும் தத்தமது எல்லைக்குள் நின்றிருப்பதோடு, சரியாகவும் இம்முறை செயல்பட்டிருப்பது பன்னாட்டு அளவில் கவனத்தை ஈர்த்திருக்கிறது. பாகிஸ்தானின் அரசமைப்பு மீது இது ஒரு மதிப்பைக் கொண்டு வந்திருக்கிறது.

# காலத்தால் அழிக்கவியலா மொழி

சிவகுமார்



மனிதன் தனது கருத்தைப் பேச்சாலும் எழுத்தாலும் பிறருக்குத் தெரிவிக்கும் கருவி மொழியாகும். மக்கள் வாழ்வில் பிறந்து மக்களால் வளர்க்கப்பட்டு மக்களின் வாழ்வை நாகரிகமுடையதாக உயர்த்தி வரும் அரிய கலை மொழியாகும். ஐந்தறிவு கொண்ட விலங்குகளையும் ஆறறிவுப் பெற்ற மனித சமுதாயத்தையும் வேறுபடுத்துவது மொழி. மொழியில்லாத மனித சமுதாயத்தையோ சமுதாயமில்லாத மொழியையோ காண்பதரிது. நமது முன்னோர் விட்டுச் சென்ற அறிவுக் கருவூலங்களை நாம் கண்டு துய்ப்பதற்கும் நாம் பெற்றிருக்கிற அறிவுச் செல்வத்தை நமது வழித் தோன்றல்களுக்கு வழங்குவதற்கும் மொழி பெருந்துணையாக அமைந்துள்ளது.

இப்போதைய காலகட்டத்தில் உலகில் 5,500 மொழிகள் பேசப்படுகின்றன. அழியும் தருவாயில் 516 மொழிகள் உள்ளன. எம்மொழிக்கும் மூத்த மொழியாய் மொழிகளுக்குள் செம்மொழியாய் செம்மாந்திருக்கிற மொழி தமிழ்மொழி. பிறந்து சிறந்த மொழிகளுக்குள் சிறந்தே பிறந்த மொழி தமிழ் மொழி அதனால்தான் "என்றும்உள தென்தமிழ்" எனக் கம்பர் போற்றுகின்றார். முன்னைப் பழமைக்கும் பழமையாய் பின்னைப் புதுமைக்கும் புதுமையாய் வாழ்வது தமிழ்மொழி. சங்க நூல்கள் அனைத்தும் பண்டைத் தமிழ் மக்களின் பண்பாடுகளைச் சித்தரிக்கும் பெட்டகமாகத் திகழ்கின்றன. 'இனிமையும் நீர்மையும் தமிழ் எனல் ஆகும்' எனத் தமிழின் மேன்மையை பிங்கல நிகண்டு குறிப்பிடுகின் றது. தமிழ் என்னும் சொல்லுக்கு இனிமை, நீர்மை என்னும் பொருள்களைத் தருகின்றது. நீர்மை என்னும் சொல்லுக்குத் "தன்மை" எனவும் பொருள்படும். இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழ் வலிமைமிக்கது.

தமிழ் மக்கள் வீரத்தையும் ஈகத்தையும் இரு கண்களாகப் போற்றினர். ஆகையால் சங்க இலக்கியங்கள் அகம், புறம் என இரு வகைப்பாட்டுக்குள் அடங்கும். இப்பனுவல்களில் காதல், பெருமிதம், நீதி முதலான உணர்ச்சிகள் முக்கிய இடம் வசிக்கின்றன. பழந்தமிழ் இலக்கியங்களில் அறம், மனித மாண்பு, மனிதநேயம், விருந்தோமல், ஈகை போன்ற நற்பண்புகள் மிகுதியும் தமிழர்களிடத்தில் காணப்படுகிறது. இத்தகையச் சிறப்பினை உலகில் வேறெந்த மொழியிலும் காண இயலாது.

தமிழர்கள் நாடு என்ற எல்லைக் கோடு, இனப் பாகுபாடு போன்றவற்றை துறந்து மனிதத்தை மட்டும் நேசித்த மாண்பை கணியன் பூங்குன்றனார்

'யாதும் ஊரே யாவரும் கேளீர்; தீதும் நன்றும் பிறர்தர வாரா.."(புறம்-192)

என்று பாடுகிறார். வயதில் பெரியவர், சிறியவர் என்ற வேற்றுமை களைந்து அனைவரும் மனிதனாக மதிக்கப்படவேண்டும் எனவும் வலியுறுத்துகிறார்.

தமிழர்களின் உயரிய மனிதநேயச் சிந்தனையை கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி,

'உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவதாயினும் இனிது எனத்
தமிழர் உண்டலும் இலரே..."(புறம் 182)

சாக்காடு, மூப்பு நீக்கும் அமிழ்தம் எனினும் தமிழர்கள் தனித்துண்ணும் இயல்பற்றவர்கள், பிறர் அஞ்சும் துன்பத்திற்கு தானும் அஞ்சும் இயல்பினர், புகழ் எனில் உயிரும் கொடுப்பவர், பழியெனில் உலகையே கொடுத்தாலும் பெறமாட்டார்கள். இத்தகைய சிறப்புக்குரியவர்கள் தமக்கென முயலாது பிறர்க்கென முயலும் பண்புடையவர்கள், ஆதலால் இவ்வுலகம் நிலைப் பெற்றிருக்கிறது என்று பாடுகிறார்.

வறுமையின் பிடியிலேயே வாழ்கிறவர்களின் வறுமையைப் போக்குவதை பொருள் பெற்றோர் தான் பெற்ற பெரும்பேறாகக் கருத வேண்டும்.

அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள் வைப்புழி (குறள் -226)

என்று ஈகைக்கு வள்ளுவர் நெறி வகுக்கிறார். உயர்திணை, அஃறிணை. என்ற பாகுபாடு நீக்கி அனைத்து உயிர்களையும் நேசிக்கும் வழக்கம் இருந்தது. ஆகையால் சோழ மன்னன் சிபி சக்கரவர்த்தி ஒரு புறாவின் உயிர்வதை பொருட்டு வேடனுக்கு தன் தொடைச்சதையை அரிந்து கொடுப்பதற்கு இசைகிறான். இதனை இளங்கோவடிகள்,

எள்ளறு சிறப்பின் இமையவர் வியப்ப
புள்ளுறு புன்கண் தீர்த்தோன். (சிலம்பு வழக்குரை காதை 51-52)

இளங்கோவடிகள் சிலம்பில் கண்ணகியின் கூற்றாகக் கூறுகிறார்.

தமிழர் பண்பாட்டில் ஈகையின் சிகரமாகச் சிறப்பிக்கப்படுபவர்கள் மாமன்னர்கள் அல்லர், மாறாக முல்லைக்கு தேர்தந்த பாரி, கூத்தர்களுக்கு தன் நாட்டு ஊர்களைப் பரிசாக வழங்கிய ஓரி, வேண்டுவார்க்கு வேண்டியதைத் தரும் காரி, மயிலுக்குப் போர்வை தந்த பேகன். புறநானூற்றுப் புலவர்கள் அறுவரால் பாடப்பெற்ற ஆய் அண்டிரன், சாதல் நீங்க அவ்வைக்கு நெல்லிக்கனி அளித்த அதியமான், வலக்கை கொடுப்பதை இடக்கை அறியாதவாறு கொடுக்கும் நள்ளி ஆகிய கடையேழு வள்ளல்களை தமிழ் இலக்கியங்கள் புகழ்கிறது.

இத்தைகய விழுமியங்கள் நிறைந்த பண்பாட்டை தன்னகத்தே கொண்ட தமிழ்மொழி பழந்தமிழ் இலக்கியங்கள் தொடங்கி தற்கால இலக்கியங்கள். இதழ்கள், வானொலி, தொலைக்காட்சி திரைப்படம் போன்ற ஊடகங்களுக்கு ஊற்றாகவும், நாளும் புதிதாக வளர்ந்து வருகின்ற கணினி, இணையம் ஆகியவற்றுக்கும் இடம் தந்து உலகின் மூத்த மொழியாக இருப்பினும் காலத்திற்கேற்ப நிதம் மாற்றம் பெற்றியிருங்கு நித்தமும் வளரும் மொழியாகத் தமிழ் மொழி திகழ்கிறது. காலத்தால் அழிக்கயியலாத விழுமியங்கள் கொண்ட தமிழர் பண்பாடும் தமிழ் மொழியும் என்றென்றும் நிலைத்திருக்கும்!

## உலகம் எங்கும் ஒரே கடல்!

கடலை விரும்பாதவர்கள் உண்டா? கடற்கரைக்குச் செல்வதென்றால் சிறுவரிலிருந்து பெரியவர் வரை எல்லோருக்கும் கொண்டாட்டமாகத்தானே இருக்கும்! பூமியின் மேற்பரப்பில் இந்துமாக் கடல், பசிபிக் கடல், அட்லாண்டிக் கடல், ஆர்டிக் கடல், தென் கடல் ஆகிய ஐந்து பெரிய கடல்கள் அமைந்துள்ளன.

இவற்றைத் தவிர, வங்கக் கடல், அரபிக் கடல், செங்கடல், பால்டிக் கடல், மத்திய தரைக் கடல், பாரசீக வளைகுடா என நூற்றுக்கும் மேற்பட்ட சிறிய கடல்கள் உள்ளன. நாம் பெரிய கடல்கள், சிறிய கடல்கள் என்று பிரித்துக்கொண்டாலும் உலகம் முழுவதும் ஒரே கடல்தான் இருக்கிறது! நம்ப முடியவில்லையா? ஒரு கப்பலில் ஏதாவது ஓரிடத்திலிருந்து கிளம்பினால், பூமியைச் சுற்றிவந்துவிட முடியும்! பெரிய கடல்களும் சிறிய கடல்களும் ஒன்றாக இணைந்திருக்கும்.

நிலத்தை நம் வசதிக்காக மாநிலம், மாவட்டம் என்று பிரித்து வைத்திருக்கிறோம் அல்லவா? அதே போலதான் கடலையும் நம் வசதிக்காகப் பிரித்து வெவ்வேறு பெயர்களில் அழைக்கிறோம். நிலப் பகுதியில் மேடு பள்ளம் இருக்கின்றன. ஆனால், கடலின் மேற்பரப்பில் மேடு, பள்ளம் எதுவும் இல்லை. அதனால்தான் ‘கடல் மட்டம்’ என்ற அளவைப் பயன்படுத்துகிறோம்.

கடல்களில் நீர் மட்டம் எல்லா இடங்களிலும் எப்போதும் ஒரே அளவில் இருக்காது. காரணம் காற்று காரணமாக அலைகள் வீசுகின்றன. புயல்கள் காரணமாக ராட்சச அலைகள் தோன்றுகின்றன. இவை அல்லாமல் பூமி மீது சந்திரன் செலுத்தும் ஓரளவு ஈர்ப்பு காரணமாகக் கடல் நீர் பொங்கும். பின்னர் உள்வாங்கும். பூமி தனது அச்சில் சுழல்வதால் எல்லாக் கடல்களிலும் இது நிகழும். இதை ஓத ஏற்றம் என்றும் ஓத இறக்கம் என்றும் அழைப்பார்கள்.

ஓத ஏற்றத்தின் போது கடல் நீர் கரையைத் தாண்டி வெளியே வரும். ஓத இறக்கத்தின் போது கடல் நீர் உள்ளே சென்றுவிடும்.

பசிபிக் கடல்தான் பரப்பளவில் மிகப் பெரியது. அட்லாண்டிக் இரண்டாவது இடத்திலும் இந்துமாக் கடல் மூன்றாவது இடத்திலும் இருக்கின்றன.

# தூணிலும் வேவு துரும்பிலும் வேவு



மாதவன்

"கடவுள் தூணிலும் இருப்பார் துரும்பிலும் இருப்பார்" என்பார்கள் இந்துக்கள். இவ்வாறு மற்றவர்களுக்கு உம்மாண்டி காட்டி விட்டுக் கையூட்டுப் பெறுவது, பாலியல் முறைகேடுகளில் ஈடுபடுவது, சொத்துகளை மடக்குவது, போதைப் பொருள் கடத்தல்களில் ஈடுபடுவது, கொலை செய்வது எனப் பலதையும் செய்யக்கூடாது என்று கூறுபவர்களே துணிந்து செய்வார்கள். இதையெல்லாம் கடவுள் எங்கு காணப்போறார் என்று அப்போது அவர்கள் மனதுக்குள் நினைத்தும் கொள்வார்கள். ஆனால் பிந்தைய அறிவியல் வளர்ச்சி சி.சி.ரி.வி. கமராக்கள் எனப்படுகின்ற சாதனங்களை உருவாக்கி அவர்களின் செயல்களைப் பொது வெளிக்குக் கொண்டுவந்தது. தூணிலும் துரும்பிலும் இருந்தவாறு மக்களின் நடத்தைகளை 24 மணி நேரமும் கவனித்து வருகின்ற சி.சி.ரி.வி. கமராக்கள் கடந்த காலத்தை அறிய வைக்கின்றன. கடந்த காலத்தை காண ஒரு கருவியைக் கண்டுபிடித்தால் அதைக் கண்ணால் பார்க்க முடியும் என அறிவியலாளர் அயன்ஸ்டீன் இதையே எதிர்வுகூறியிருந்தார்போலும்.

**மை பார்க்கும் நம்மவர்கள்**

சி.சி.ரி.விக் கமராக்களைபோன்ற விடயமே நம்மவர்கள் மத்தியிலுள்ள மை பார்த்தல் என்ற முறையும்கூட. வெற்றிலையில் கறுப்பு மையைப் பூசிக் குத்து விளக்கு வெளிச்சத்தில் உன்னிப்பாகப் பார்த்து அனுமானின் வழிகாட்டுதலில் களவுகளையும் வேறு சம்பவங்களையும் கண்டுபிடிக்கும் ஒரு செயல் பூர்வீக இந்திய, இலங்கையர்களிடம் இருந்தது. ஆனால், அதையெல்லாம் விட இன்றைய நிலையில் விபத்து நடந்தால் என்ன இயற்கை இடர்கள், திருட்டுகள் என எது நடந்தாலும் அயலிலுள்ள சிசிரிவி கமராக்களை ஆராய்வதே முதல் தெரிவாக உள்ளது. இதையே காவல்துறை விசாரணைகள், நீதிமன்ற விசாரணைகளின்போது முக்கிய ஆதாரங்களாக ஏற்றுக்கொள்கிறார்கள். ஒரு சம்பவத்தில் காரிலோ, மோட்டார் சைக்கிளிலோ வந்தவர்கள் அந்த இடத்தை விட்டுத் தப்பிப் போய்விட்டாலும் அவர்கள் எந்தத் திசையால் சென்றார்கள் என்பதை அறிந்து அந்தப் பக்கமுள்ள சிசிரிவி கமராக்களை ஆராய்ந்து அவர்கள் சென்ற இடத்தைக் கண்டுபிடிக்க முடிகிறது.

**நன்மையும் தீமையும்**

தற்போது இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் அரசுக்கு எதிரான போராட்டங்களில்கூட பல ஒழுங்கமைப்பாளர்களை அடையாளம் கண்டு பின்னர் சட்டநடவடிக்கைகளையோ, பழிவாங்கல்களையோ செய்வதற்கு இந்தச் சிசிரிவிப் பதிவுகள் ஆட்சியாளர்களுக்கும் ஆயுதப் படைகளுக்கும் உதவுகின்றன. எனவே இரகசியங்களை வெளிக்கொணர்வதில் இந்தச் சிசிரிவி கமராக்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. எதிர்காலத்தில் எந்தவொரு சமூகவிரோதச் செயல்களையும் இலகுவாகத் தடுப்பதற்கும் இந்தச் சிசிரிவி கமராக்களால் அதிகம் பங்களிப்புச் செய்ய முடியும்.

தற்போதுள்ள நவீன கண்டுபிடிப்புகளால் நாம் காண்கின்ற சிசிரிவி கமராக்களின் வடிவத்தில் அல்லாது உருமறைப்புச் செய்த அல்லது நுண்ணிய கமராக்கள் தயாரிக்கப்படும் நிலையில் அது பொருத்தப்பட்டிருக்கும் இடத்தைக் கண்டுபிடிப்பதே சிரமமானதாக இருக்கும். அப்போது பலர் நம்பும் கடவுள் போல தூணிலும் துரும்பிலும் மறைந்திருந்து கவனித்துக்கொண்டேயிருக்கும். அது நன்மையும் செய்யும் தீமை செய்வதிலும் ஈடுபடும்.

> **வெற்றிலையில் கறுப்பு மையைப் பூசிக் குத்து விளக்கு வெளிச்சத்தில் உன்னிப்பாகப் பார்த்து அனுமானின் வழிகாட்டுதலில் களவுகளையும் வேறு சம்பவங்களையும் கண்டுபிடிக்கும் ஒரு செயல் பூர்வீக இந்திய, இலங்கையர்களிடம் இருந்தது**

இந்த வார சமையல்

## நுங்குப் பானம்

பனைகள் நிறைந்த யாழ்ப்பாணத்தில் நிறையக் கிடைப்பது நுங்கு. ஆனால் நுங்கை நுகர்பவர்களோ வெகு குறைவு. இந்த வெப்ப காலத்தில் உடற்சூட்டைத் தணித்து, நீர்ப்பீடனத்தைப் பேணும் ஆற்றல் நுங்குக்கு உண்டு. இயற்கையின் வரம் நுங்கு. மென்பானங்களையும், போத்தலில் அடைக்கப்பட்டு வருகின்ற பழச்சாறுகளையும் அருந்துவதில் இருக்கின்ற ஆர்வம் நம்மவர்க்கு இளநீர், நுங்கு போன்ற இயற்கை வளங்களை நுகர்வதில் இருப்பதில்லை.

கற்றாளையை ஏழு நீரில் கழுவி உண்டால் உடற்சூடு தணியும், ஆரோக்கியம் மேம்படும் என்றெல்லாம் நம் முன்னோர்கள் சொல்லி வந்தபோது அதைக் கணக்கிலும் எடுக்காத நம்மவர்கள் இப்போது கற்றாழையைப் பலமுறை கழுவிப் பல மாற்றங்களை ஏற்படுத்திச் சேர்மானங்கள் சேர்த்துப் போத்தலில் அடைத்துப் பழச்சாறு வடிவில் கொடுக்கும்போது முண்டியடித்து வாங்கி அருந்துகிறார்கள். இதே நிலை எதிர்காலத்தில் நுங்குக்கும் வராது என்று சொல்லிவிட முடியாது.



ஆகவே இந்த வாரம் இயற்கையாகக் கிடைக்கும் நுங்கைப் பானமாக்கி அருந்துவது எவ்வாறு என்று பார்ப்போம். நுங்கு என்பது ருசிமிகுந்த பானம் தான். அதற்கு மேலும் ருசி சேர்க்கும் விதத்தில் இந்த நுங்குப் பானத்தை நாம் தயாரிக்கலாம்.

**தேவையான பொருள்கள்**

நுங்குகள் - 5, காய்ச்சிய பசுப்பால் கால் லீற்றர், சீனி இனிப்புக்குச் சிறிதளவு, இளம்சிவப்பு நிற நிறமூட்டி 5-6 துளிகள், குளிர்விப்பதற்கு ஐஸ் கட்டிகள்.

**எப்படிச் செய்வது**

நுங்குகளை அறுத்து நுங்குத் தசைகளை ஒரு பாத்திரத்தில் எடுத்துக்கொள்ளுங்கள். அவற்றை மின் அரைப்பானில் நன்றாக அடித்தெடுங்கள். கூடவே பசுப்பால், இளம்சிவப்பு நிறம், சீனி ஆகியவற்றையும் சேர்த்துக் கொள்ளுங்கள். பின்னர் பாத்திரம் ஒன்றில் எடுத்து ஐஸ் கட்டிகளைச் சேர்த்து நன்கு கலந்து பரிமாறுங்கள்.



சிந்தாமணி

# மயிர் நீப்போம் உயிர் காப்போம்...!

'மயிர் நீப்பின் உயிர் வாழாக் கவரிமா அன்னார் உயிர் நீப்பர் மானம் வரின்' என்கிறது திருக்குறள். அதாவது தனது மயிர்த்திரளில் இருந்து ஒரு மயிர் நீங்கினும் கவரிமான் ஆனது உயிர் வாழாது என்றும் தமது மானத்தை இழக்கின்ற உயர்வானோர் அந்தக் கவரிமானின் செயலைப்போல தமது உயிரையே துறப்பவராக இருப்பார் என்பதும் இதன் பொருளாகும்.

கோவலனுக்குப் பாண்டிய மன்னன் நெடுஞ்செழியன் கொலைத் தண்டனை அளித்தார். தன் கணவன் குற்றமற்றவன் என மன்னன் கேட்டு அறிந்ததும், அரச குலத்துக்கே பழிச் சொல் ஏற்பட்டு விட்டதே எனக் கருதி, உயிர் துறந்த பாண்டிய மன்னனைக் கவரி மானினத்தவன் எனச் சுட்டிக் காட்டுவர். காப்பியத்திலும் திருக்குறளிலும் இந்த விடயங்கள் காணப்பட்டாலும் எந்தவொரு விலங்கியல் ஆய்வாளர்களோ, பிற்கால ஆராய்ச்சியாளர்களோ கவரிமான் மயிரை உதிர்த்தால் உயிரைவிடும் என்று கண்டறிந்ததாகத் தகவல் இல்லை. மான்களைப் பிடித்து, உடம்பிலுள்ள சில பகுதிகளில் இருந்து மயிர்களை மழித்து அகற்றி சோதித்துப் பார்த்தபோது, மயிர்களை இழந்த மான்கள் உயிர் விட்டதாக இல்லை. அத்தோடு இதற்கு வேறுவிதமான விளக்கங்களும் உலாவுகின்றன.

இது ஒருபுறமிருக்க நமது - மனிதர்களின் தலைமயிரை வைத்து உயிர்காக்க முடியும் என்று நவீன ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்திருக்கின்ற விடயம் இப்போது நமக்குப் புதினம்தான்.

**மயிரை வைத்து எப்படி உயிரைக் காப்பது...?**

மனிதர்களின் தலைமயிருக்கு நீரை ஈர்க்காத ஆற்றல் இயற்கையாகவே உண்டு என்றும் அதேவேளை எண்ணெய்யை ஈர்க்கின்ற தன்மை அதிகமாக உண்டென்றும் கண்டறிந்து கடலில் கலக்கின்ற எண்ணெய்யை அகற்றுவதற்குத் தலைமயிரைப் பயன்படுத்தும் யோசனை ஒன்றை ஆராய்ச்சியாகத் தொடங்கியிருக்கிறார்கள். அதன் மூலம் பல உயிர்களைக் காப்பாற்ற முடியும் என்றும் நம்புகிறார்கள். எண்ணெய் தாங்கிக் கப்பல்கள் விபத்து, போர்கள், தொழிற்சாலைகள் வெளியேற்றம் எனப் பலவிதங்களில் கடலில் எண்ணெய் கலக்கிறது. இவற்றால் கடல்வாழ் உயிரினங்கள் தொடங்கிக் கடல்வாழ் உயிரினங்களை உணவாக்கும் மனிதர்கள் வரை பாதிப்புக்குள்ளாகின்றனர். கடல் மாசு காரணமாகப் பல இயற்கை இடர்கள் ஏற்படுகின்றன. கடலில் கலந்து அதன் மேல்மட்டத்தில் மிதக்கின்ற எண்ணெய்யை அகற்றுவதற்கு மிதக்கும் எண்ணெய்யை எரிப்பது, மிதவைகளைக் கொண்டு வளித்தெடுப்பது, உறிஞ்சியெடுப்பது, ஒரு வகை இரசாயனத் துகளை (BIODEGRADABLE DISPERSANT) விசிறி எண்ணெய்யைப் பிரித்தெடுத்து நீரைச் சுத்தப்படுத்துவது எனப் பல நடவடிக்கைகளை மேற்கொள்கிறார்கள். இவற்றையெல்லாம்விடத் தலைமயிரைக்கொண்டு கடலில் கலக்கின்ற எண்ணெய்யைத் திறம்பட அகற்ற முடியும் என்பதுதான் புதிய கண்டுபிடிப்பு.



**தலைமுடி எப்படி எண்ணெய்யை அகற்றும்...?**

பலவிதத் தலைமுடிகளை ஒன்றுசேர்த்துத் தட்டையாகப் பாய்போலாக்கி (பாயைவிடத் தடிப்பானதாக) அதை எண்ணெய் கலந்த நீர் நிலையில் வழித்தெடுக்கும்போது அது நீரில் கலந்து மேல் மட்டத்தில் மிதக்கின்ற எண்ணெய்யை முழுவதுமாக உறிஞ்சி விடுகிறது. இதனால் பக்கவிளைவுகள் எவையும் இல்லை. இந்த நிலையிலேயே தலைமயிர்ப் படைகளைக் கொண்டு எண்ணெய்யைச் சுத்திகரிக்கலாம் என்கிற முன்வைப்பு எழுந்திருக்கிறது. இது வெறும் பேச்சளவான விடயம் அல்ல. லிசா (LISA GAU TIER) என்கிற பெண்மணி மட்டர் ஒவ் ட்ரஸ்ட் (MATTER OF TRUST) என்கிற ஒரு அமைப்பை நிறுவி இந்த வேலைத் திட்டத்தை முன்னெடுத்து வருகிறார். தலைமயிர்களைச் சேர்த்து இயந்திரம் மூலம் அதை ஒன்றாக்கி இந்தத் திட்டத்தைச் செயற்படுத்தி வருகிறார். கடலில் கலந்த எண்ணெய்க் கசிவுக்குள் சிக்கிய நீர்நாய் அந்த இடத்தில் நீந்தித் திரிந்ததால் அதன் உரோமம் முழுதும் எண்ணெய்யுடன் காணப்பட்டுள்ளது. கடலில் கலந்திருந்த எண்ணெய்யை அது தனது உரோமங்களில் முழுவதுமாகக் கொண்டிருந்து. எண்ணெய்ப் பிசுபிசுப்பால் அது அவதிப்பட்டதைக் கண்டறிந்த பின்னரே இந்தத் திட்டத்தில் இறங்கியிருக்கிறார்கள். இன்றைக்கு இந்தத் திட்டத்தைச் செயற்படுத்திக் கடலில் கலக்கின்ற எண்ணெய்யை அகற்றலாம் என்றும் கண்டறிந்தி ருக்கிறார்கள். இதனால்தான் மயிரைக்கொண்டு கடல்வாழ் உயிரினங்கள் பலவற்றைக் காப்பாற்ற முடியும் என்று தொடக்கத்திலேயே சொல்ல முடிந்தது.

**கடலில் கலக்கின்ற எண்ணெய்யை அகற்றுவதற்குத் தலைமயிரைப் பயன்படுத்தும் யோசனை ஒன்றை ஆராய்ச்சியாகத் தொடங்கியிருக்கிறார்கள்**



## மூளையை கண்காணிக்க ஒரு தலைக் கவசம்!



அந்தரத்தில் சர்வதேச விண்வெளி நிலையத்தில் மனிதர்களின் மூளை எப்படி வேலை செய்யும்? அதைக் கண்டுபிடிக்க வேண்டும் என்கிற ஆசை இஸ்ரேலைச் சேர்ந்த ப்ரெய்ன் ஸ்பேஸ் நிறுவனத்துக்கு ஏற்பட்டது. விளைவு, அதற்கென பிரத்யேகத் தலைக்கவசத்தை வடிவமைத்துள்ளது இந்நிறுவனம். ஆக்சியாம் ஸ்பேஸ் என்கிற தனியார் நிறுவனமும் நாசாவும் இணைந்து நடத்தும் இந்த ஆய்வில் நான்கு பேர் தலைக்கவசத்தை அணிந்து விண்வெளிக்குச் செல்கின்றனர். இந்தத் தலைக்கவசத்தில் மூளை மின் அலை வரைவைப் பரிசோதிக்கும் கருவியும் பொறுத்தப்பட்டிருக்கிறது. அதன் மூலம் கிடைக்கும் முடிவுகளை வைத்து விண்வெளியில் உள்ளவர்களின் மூளைத் திறன் எப்படி இருக்கும் என் பதைப் பூமியில் இருந்தபடி விஞ்ஞானிகள் கணிக்க உள்ளனர்.

## திங்கட்கிழமை...

நிலக்கரியைப் பெறுவதில் இப்போது நெருக்கடி இல்லை. 5 கப்பல்கள் நிலக்க ரியைப் பெறுவதற்கான கொடுப்பனவு களைச் செய்வதற்கான ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. இந்த விடயத்தில் மத்திய வங்கி எமக்கு உதவிகளை வழங்கியுள்ளது. எனவே இந்த மூன்று மூலங்களையும் வைத்து மின்வெட்டைக் குறைப் பதற்கான எல்லாச் சாத்தியங்களும் உண்டு என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கை பெற்றோலியம் கூட்டுத்தாபனத்திடம் இருந்து போதியளவு எரிபொருள்கள் இப்போது சீராகக் கிடைக்கத் தொடங் கியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

மே மாதத்தில் மழை கிடைக்கும் அளவு கூடும்போது மின்வெட்டு நிலையில் மேலும் முன்னேற்றம் ஏற்படும் என்றும் அவர் தெரிவித்தார்.



# பீஸ்ட்

**வழமையைவிடச் சொதப்பல்**

சித்திரைப் புத்தாண்டன்று வெளியாகிய திரைப்படம் பீஸ்ட். தீபாவளி, பொங்கல், புதுவருடம் எனச் சிறப்பான நாள்களைக் குறிவைத்து வெளியாகின்ற திரைப்படங்களின் முதன்மை நோக்கம் வசூலாக மாத்திரமே இருப்பதால் அவைக்குக் கிடைத்த வசூலே அவற்றின் வெற்றியைத் தீர்மானிக்கிறது என்றாகிற நிலையே இங்கிருக்கிறது. ஆனால் திரைப்படத்தின் வெற்றி என்பது அது ஈட்டிய வருமானத்தில் மாத்திரம் தங்கியிருக்கிறதா என்றால் அதுதான் இல்லை. திரைப்படக் குழுவின் உழைப்புக்குத் தகுந்த அல்லது மேலதிக வருமானம் கிடைப்பது மாத்திரம் அதன் வெற்றியல்ல. அது சமூகத்தில் - பார்வையாளர்களிடத்தில் (இரசிகர்களிடத்தில் அல்ல) ஏற்படுத்துகின்ற தாக்கமும் தன்னை நிலைநிறுத்தும் தன்மையும்தான் அதன் வெற்றி. அந்த வகையில் நெல்சன் திலீப்குமாரின் இயக்கத்தில் விஜய், பூஜா ஹெஜ்டா, ஷைன் டாம் சாக்கோ, செல்வராகவன் எனப் பல நட்சத்திரங்களின் நடிப்பில் சித்திரைப் புத்தாண்டன்று வெளியாகிய திரைப் படம்தான் பீஸ்ட்.

**கதை**

கைது செய்யப்பட்ட ஆயுததாரியான உமர் பாரூக்கை விடுவிக்குமாறு கோரிக்கையை முன்வைத்துச் சுப்பர்மார்க்கெட் ஒன்றைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருகின்றனர் ஆயுததாரிகள். அதற்குள் பலர் மாட்டிக்கொள்ள அவர்களைப் பணயக் கைதிகளாக்குகின்றனர். உமர் ஃபாருக்கை கைது செய்து அழைத்துவரும் நடவடிக்கையில் ஈடுபடுகின்ற இந்தியாவின் உளவுப்பிரிவான றோவின் முகவராக இருக்கிறார் வீரராகவன் என்கிற விஜய். அத்தகைய கதாநாயகன் விஜய் மக்களை ஆயுத தாரிகளின் பிடியிலிருந்து மீட்டாரா? அதற்கு அவர் கையாண்ட உத்திகள் என்னென்ன? கைது செய்யப்பட்ட உமர் ஃபாருக் என்ன ஆனார்? இவையெல்லாம்தான் மீதிக் கதை.



**பாத்திரங்கள்**

வீரராகவனாக வரும் நாயகனான விஜயைப் பற்றிச் சொல்லவே தேவையில்லை. வழக்கத்துக்கு விஞ்சிய அதிநாயகத்தனத்துடன் உற்சாகம் காட்டுகிறார். நடனக் காட்சிகளில் தனது ரசிகர்களை ஈர்க்கிறார். பிரீத்தியாக வரும் பூஜா ஹெகடேவுக்கு விஜய்யை காதலிப்பது மாத்திரமே பணிபோல செய்கிறார். அத்தோடு அவரும் அழகிலும், நடனத்திலும் ரசிகர்களை ஈர்க்கிறார். சில காட்சிகள் மட்டுமே வந்து செல்லும் அபர்ணா தாஸ் கவனம் பெறுகிறார். பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட செல்வராகவன், ஷைன் டாம் சாக்கோ கதாபாத்திரங்கள் ஏமாற்றத்தைத் தருகின்றன.

**பலவீனங்கள் பல**

படத்தின் முதல் பாதி முழுவதும் நகைச்சுவை, காதல், சில சண்டைக் காட்சிகள் என நாயகத்தனமிக்க சினிமாவுக்கே உண்டான பாணியில் நகர்கிறது. இடைவேளைக்குப் பின்னர் அதுவும் கிடையாது. ஆயுததாரிகளை வேடிக்கையாளர்களாக்கி நாயகனுக்கான மவுசை எகிறச் செய்திருப்பது சுவாரஸ்யமில்லாமல் போகிறது. உமர் ஃபாருக் கதாபாத்திரம் கொஞ்சம்கூட பொருந்தாத தெரிவு. ஆயுததாரிகள் குழுவின் தலைவன் எந்த விதத்திலும் அந்தக் கதாபாத்திரத்திற்கு நியாயம் சேர்க்கவில்லை. இவ்வாறாகவும் காதபாத்திரங்கள் வீணடிக்கப்பட்டிருக்கின்றன.

எல்லாவற்றுக்கும் காரணம் விஜயின் ரசிகர்களைத் திருப்திப்படுத்துவதற்காக அவருடைய மித மிஞ்சிய நாயகத்தனத்தைக் காட்டுவதற்கு இயக்குநர் முழுமூச்சுடன் செயற்பட்டு அதில் வெற்றியும் கண்டமையே. அந்த வழைமையைவிட மித மிஞ்சிய நாயகத்தனத்தால்தான் வழமையைவிடச் சொதப்பலாகப் போய் முடிந்திருக்கிறது படம். சுப்பர்மார்க்கெட்டுக்குள் கார் ஓட்டுவது, கத்தி ஒன்றை வைத்து ஆயுததாரிகளுக்கு எதிராகச் செயற்பட்டு வெற்றி காண்பது, இரும்புக் கதவில் ஒளிந்துகொண்டு ஆயுததாரிகளை அழிப் பது, இதையெல்லாம் விட விஜய்க்கு உதவுவதற்காக துப்பாக்கிகள் இல்லாமல் கத்தியுடன் வந்து ஆயுததாரிகள் சண்டையிடுவது என ஏகப்பட்டவற்றைச் சகிக்க முடியவில்லை.

**ஆயுத தாரிகளை வேடிக்கையா ளர்களாக்கி நாயக னுக்கான மவுசை எகிறச் செய்திருப்பது சுவாரஸ்ய மில்லாமல் போகிறது**

இவையெல்லாம் விஜய் ரசிகர்களைத் திருப்திப்படுத்தலாமே தவிர சினிமா ரசிகர்களுக்குச் சிறு தீனியாகக்கூட இருக்கா. ஒரு கட்டத்திற்கு மேல் படத்தைப் பார்க்கவே முடியவில்லை எழுந்து போய்விடலாம் என்றிருக்கிறது.

இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ கஸ்தூரியார் வீதியிலுள்ள கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.04.2022 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு :0214927781